வெளியீடு: 23-06-2008 Issued: 23-06-2008

1289
27.06.2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 27, 2008—தொகுதி 43—எண் 1

Thursday, the 27th March 2008—Volume 43 – No. 1

...மன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...lative Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

D
V2:11,31'P08
P08.43.1.
228102

## 27-3-2008

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. | **வினாக்கள்-விடைகள்—** | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்–2) | 39-102 |
| 2. | **அரசினர் தனித் தீர்மானம்—** | |
| | ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கர்நாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட மத்திய அரசின் ஒத்துழைப்பைக் கோருதல் | 103-105 |
| | மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 103-104 |
| 3. | **வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்**—தொடர்ச்சி | 105-198 |
| | *திரு. ஆர். வைத்திலிங்கம் | 105-111, 112-115 |
| | திரு. கு. பிச்சாண்டி | 115-127 |
| | திரு. சி. ஞானசேகரன் | 127-139 |
| | திரு. தி.க. ராஜா | 139-146 |

பக்கங்கள்

**3. வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| செல்வி கே. பாலபாரதி | 146-153 |
| *திரு. கே. உலகநாதன் | 154-159 |
| திரு. து. அமரமூர்த்தி | 159-162 |
| *திரு. இரா. இராஜேந்திரன் | 162-171,173 |
| திரு. அ. தமிழரசு | 174-178 |
| டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் | 178-183 |
| *திரு. குத்தாலம் க. அன்பழகன் | 184-189 |
| திரு. பி. தங்கமணி | 189-198 |

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 198-199



**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228102
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

D
V211,31'N08
P08.13.1

13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இட வசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| **18. Minister for Labour** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| **19. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| **20. Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| **21. Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| **23. Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| **24. Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| **25. Minister for Highways** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Highways and Ports |
| **26. Minister for Social Welfare** | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| **27. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| **28. Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **29. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| **30. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| **31. Minister for Khadi** | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி—I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - | திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி—2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | - நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | - திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | - முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | - மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | - திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | - சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | - காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | - ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | - வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | - சேலம்–I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | - சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | - கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | - கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | - பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | - இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | - மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. க.சி.க. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்-2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 14

## 2008 மார்ச் 27, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"*

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

### சூரிய ஒளி மின் விளக்கு

**•31588—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, சித்தேரி மலைவாழ் மக்களின் குடியிருப்புகளுக்கு சூரிய ஒளி மின் விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொலைதூர கிராமங்களில் மின்மயமாக்கல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியத்தால், மின் கட்டமைப்புமூலம் மின் வசதி அளிக்க இயலாது என்று சான்று அளிக்கப்பட்ட மொரப்பூர் தொகுதியில், சித்தேரி மலைவாழ் குடியிருப்புகளுக்கு 27 சோலார் வீட்டு விளக்குகளும், 1 சோலார் தெரு விளக்கும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சூரிய மின் விளக்கு அமைக்க மாவட்ட ஆட்சியர் மூலமாகக் கருத்துரு பெறப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான மலைப் பகுதி கிராமங்களில் வாழ்கிற மலைவாழ் மக்கள் நீண்ட நெடுங்காலமாக எந்தவித அடிப்படை வசதியும் இல்லாமல், காடுகளில் மிருகங்களைப்போல வாழ்கின்ற அவல நிலை இருந்தது. 1972–73 ஆம் ஆண்டு வாக்கில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதுதான் முதன்முதலாக சித்தேரி மலைப் பகுதிக்கு மின்சார வசதி உருவாக்கித் தந்தார்கள். இடைப்பட்ட காலத்தில் வனத் துறை மூலமாக அப்படிப்பட்ட மின் விளக்குக் கம்பங்கள் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகி தடைப்பட்டுப் போனாலும், ஏற்கெனவே அமைக்கப்பட்ட transformer–களிலிருந்து போதுமான அளவிற்கு மின்சார வசதியை உருவாக்கித் தந்து, புதிதாக நான்கு அல்லது ஐந்து transformer–களை உருவாக்கினால், அங்கே வாழ்கிற மலைவாழ் மக்களுக்குத் தெரு விளக்கு வசதி, வீட்டு விளக்கு வசதி போன்றவற்றைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அவற்றைச் செய்வதோடு அங்கே உருவாக்கப்பட்டிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாக, அதற்கான மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டாலும்கூட, voltage குறைவாக இருக்கிற காரணத்தினால், அவையெல்லாம் இயக்கப்படாமல் குடி தண்ணீர் வசதிக்குத் துன்பப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. எனவே, அவற்றைப்





போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு, புதிதாக transformer–களை உருவாக்கித் தரவும், போதுமான அளவிற்குக் குடிசைகளுக்கு மின் விளக்கு வசதிகளை உருவாக்கித் தரவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தால் எங்கெங்கு transformer பொருத்தப்பட்டு, மின் வசதி செய்து தரப்பட்டிருக்கிறதோ, அங்கேயெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, voltage குறைவாக இருந்தால் அதை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் செய்து தரப்படும். சூரிய ஒளி விளக்கு என்பது, transformer போட முடியாமல், மின்சாரத்தை எடுத்துக்கொண்டு செல்ல முடியாமல், எங்கெங்கே மலைப் பகுதிகள் இருக்கின்றனவோ, அந்த மலைப் பகுதிகளிலே காட்டு இலாகா மூலம் கம்பிகளை இழுத்துச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலையில் இந்த சூரிய ஒளி விளக்குகளைப் பொருத்துகிறோம். அதைப் பொருத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தால் அதற்கான திட்டம் அமல்படுத்தப்படும். இப்போதுகூட 118 தொலைதூர குக்கிராமங்களுக்கு ரூபாய் 10.23 கோடி செலவிலே சூரிய ஒளி விளக்குகள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். அதேபோல, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடனே மாநில அரசு ரூ.350 இலட்சத்திலேயும், மத்திய அரசு ரூ. 540 இலட்சத்திலேயும் நிதி ஒதுக்கீடு செய்து, 128 குக்கிராமங்களிலே அமைந்துள்ள 5,190 வீடுகளுக்கு சூரிய ஒளி மின் விளக்குகளும், சுமார் 283 தெரு விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதைப்போன்ற மலைப் பகுதியிலே எங்கே அப்படிப்பட்ட குறை இருந்தாலும், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், சூரிய ஒளி விளக்குகள் பொருத்தித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தேரி ஊராட்சி என்பது 4,500 மக்கள் தொகை

கொண்ட கிராமம் ஆகும். அதேபோல, சிட்லிங்கி, வத்தல் மலைப் போன்ற பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கிற நிலை இருக்கிறபோது, கோடிக்கணக்கான ஏழையெளிய விவசாயிகள் பயன்பெறுகிற வகையில் வீட்டு வசதிக்காக இலவச மின்சாரம் வழங்கிய தலைவர் கலைஞருடைய ஆட்சியில் சூரிய ஒளிமூலம் மின் விளக்கு வசதிகளை உருவாக்க வேண்டுமானால், அதற்குப் பொருளாதார செலவு மிகக் கூடுதலாகிறது. மானியம்கூட 6,000 ரூபாய் வழங்கப்படுவதாகவும், ஒரு light அமைப்பதற்கு 25,000 ரூபாய் செலவாவதாகவும் கூறுகிறார்கள். எனவே, இலவச மின்சாரம் வழங்கி, இன்னும் சொல்லப் போனால், தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியது போலும், மின்சார விளக்குகள் இல்லாத வீடுகளே இல்லை என்கிற நிலையை உருவாக்கியிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், மலைவாழ் மக்கள் இலவச மின்சாரம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி பெறுகிறபோது, அவர்களது பெட்டிகளை இயக்குவதற்கு ஏற்ற வகையில், ஒரு சிறப்பு நிகழ்வாக அதை எடுத்துக்கொண்டு மின் விளக்கு வசதிகளை உருவாக்கித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளி விளக்கு மூலம் எங்கெங்கே வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கின்றோமோ, அங்கே தொலைக்காட்சிப் பெட்டிகளும் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. ஏதாவது ஒரு குறை இருக்குமானால், கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது உடனடியாக சரி செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய ஆட்சியில் தொழிற்சாலைகள் பெருகி, தொழில் வளம் பெருகிக்கொண்டிருக்கின்ற வேளையிலே மின் தேவையும் அதிகரித்துக்கொண்டு வருகின்ற நிலை இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் அதிகம் தேவைப்படுகிற



காரணத்தால், தவிர்க்க முடியாத காரணங்களால் சில இடங்களிலே குடியிருப்புகளிலே மின் தடை வருகின்ற நிலை இருந்த நேரத்தில், தேர்வு நேரத்திலே, இரவு நேரத்திலே மின் தடை ஏற்படக்கூடாது என்று மின் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அது செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம், Industrial Holiday என்று சொல்லப்படுகிற, தொழிற்சாலைகளுக்கு வாரத்திற்கு ஒரு முறை கட்டாயமாக விடுமுறை விட வேண்டுமென்ற அரசாங்க ஆணையின் பிரகாரம் இது நடந்துள்ளதாகத் தெரிய வருகிறது. வேலூர் மாவட்டத்திலே வியாழக்கிழமைதோறும் அங்கு இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி சூரிய ஒளி சம்பந்தப்பட்டது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** ரொம்ப முக்கியமான கேள்வி. Industrial Holiday என்கிற முறையில் வியாழக்கிழமைதோறும் வேலூர் உட்பிரிவிலே விடுமுறை தரப்படுகிறது. அந்த நிலை தொடர்ந்து நீடிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் வாரத்திலே ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும் என்று Industrial Disputes Act–ல் இருக்கிறது. ஆனால், எல்லோருமாகச் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமைகளிலே விடுமுறை விடுகிறார்கள். அப்படி ஞாயிற்றுக்கிழமைகளிலே விடுமுறை விடுகின்ற காரணத்தினாலே, அன்றையதினம் மட்டும் 1,500 மெகாவாட் மின்சாரம் யாருமே பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. அதனால்தான், தமிழ்நாட்டை ஆறு மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திலேயும் ஒரு நாள் விடுமுறை என்று சொல்லி, அதன்மூலம் இப்போது ஞாயிற்றுக்கிழமையிலேயும் எல்லோரும் வேலை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது நிரந்தரமானது அல்ல. இது தற்காலிகமானதுதான். கோடைக் காலத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக இந்த முறையை ஏற்படுத்தியிருக்கின்றோம். ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குப் பிறகு தொழிற்சாலைகள் பழையபடி ஞாயிற்றுக்கிழமைகளிலே விடுமுறை விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

[2008 மார்ச் 27

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, பில்லூர் அணைக்கட்டை சுற்றி ஏறத்தாழ 30-க்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள் வாழ்கின்ற கிராமம் இருக்கிறது. இந்தப் பகுதியில் கடந்த காலத்திலே சூரிய மின் விளக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரையிலும் அது செயல்பாட்டில் இல்லை. அதற்குக் காரணம், போதுமான சூரிய ஒளி அங்கு கிடைக்காத காரணத்தினாலே அந்தப் பகுதியிலே போடப்பட்ட அனைத்து கிராமங்களிலும் தற்போது அந்த சூரிய ஒளி மின்விளக்கு செயல்பாட்டில் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போடுகின்ற நேரத்திலே, அந்தப் பகுதியிலே சாலை வசதி இல்லாத காரணத்தினாலே, மின்சாரத் துறை மூலமாகக் கம்பிகளைக் கொண்டு செல்வதற்கும் ஏதுவாக இல்லாத காரணத்தினாலே அந்த சூரிய ஒளி மின் விளக்கு அமைக்கப்பட்டது. ஆனால், தற்போது அந்தப் பகுதியில் இருக்கின்ற சாலைகள் முழுவதும் செப்பனிடப்பட்டு, தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மாற்றப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதிகளுக்குத் தற்போது மின்சாரத்தை வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பத்து நாட்களாக மழை பெய்த காரணத்தினாலே, ஒரு சமயம் அந்த இடத்திலே சூரிய ஒளி விளக்குகள் எரியாமல் இருந்திருக்கலாம். மழைக் காலத்திலே சூரிய வெளிச்சம் இருந்தால்தான் சூரிய ஒளி விளக்குகள் எரியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல, சாலை வசதிகள் எல்லாம் செய்யப்பட்டு, அங்கே மின்சார வாரியத்தின் மூலமாக transformer பொருத்தப்பட்டு, மின் விளக்கு வசதிகள் ஏற்படுத்தித் தரலாம் என்கிற ஒரு சூழ்நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து மின்சார இலாகா ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 27]

**2—**

## நியாய விலைக் கடை

***23171—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கனியாகுளம் ஊராட்சி, நகர இரயில்வே நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, கனியாகுளம் ஊராட்சி, நகர இரயில்வே நகரில் மொத்தம் 81 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள், இப்பகுதியிலிருந்து 1.25 கி.மீ தூரத்தில் செயல்பட்டு வரும் பள்ளிவிளை நியாய விலைக் கடையிலிருந்து அவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இந்நேர்வில், புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் பகுதியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் 1.5 கி.மீக்கு மேல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், நகர இரயில்வே நகர் பகுதியில் நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் துறையினர் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏற்கெனவே நான் கேட்டிருக்கின்ற நகர இரயில்வே நகரில் 5 மாதங்களுக்கு முன்னால் புதிய பகுதிநேர ரேஷன் கடை அனுமதிக்கப்பட்டு, அது திறக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

[2008 மார்ச் 27

இந்த இரண்டு ஆண்டு காலங்களில் ஏறத்தாழ என்னுடைய தொகுதியில் மட்டும் 10-க்கும் மேற்பட்ட பகுதிநேர ரேஷன் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, இன்னும் பல பகுதிகளில் மக்கள் பகுதிநேர ரேஷன் கடைகள் வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, ரீத்தாபுரம் பேரூராட்சியில் மாதா நகர் என்னும் இடத்தில் பகுதிநேர ரேஷன் கடையை மக்கள் கேட்டிருக்கிறார்கள். அதேபோன்று, கல்லுக்கூட்டம் பேரூராட்சியில் தரையன்விளை என்ற ஊரில் பகுதிநேர ரேஷன் கடை வேண்டுமென்று மக்கள் கேட்டிருக்கின்றார்கள். இது குறித்த கோரிக்கை மனுவை மாவட்ட ஆட்சியரிடத்திலே கொடுத்திருக்கிறோம். அந்தக் கடைகள் விரைவில் திறக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின்மை காரணத்தால்தான் அவை தற்போது கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே கொடுத்திருக்கிற கடைகள் எல்லாம் தகுதியோடு இருந்த காரணத்தால்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. எந்தவிதமான காரணத்தைக் கொண்டும், இப்படிப்பட்ட தகுதிக் குறைவாக இருக்கிற கடைகளைக் கொடுத்துவிட்டால், அதுவே ஒரு வழிமுறையாக ஆகி இதேபோல் எல்லோரும் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். இதை நடத்துவதற்கான ஆட்கள் இல்லை. அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தால் அந்த நியாய விலைக் கடைகளை நடத்துவதில் நஷ்டம்தான் வரும், பிறகு இதை நடத்த இயலாது என்பதையும் தங்கள்மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.*

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த அந்தக் கடை அனுமதிக்கப்பட்டு, திறக்கப்பட்டுவிட்டது என்பதைத்தான் நான் இங்கே சொன்னேன். இன்னும் சில இடங்களில் மக்கள் கேட்டிருக்கிறார்கள் என்ற கருத்தையும் இங்கே நான் வலியுறுத்துகின்றேன். அதோடு, கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படுகின்ற பகுதிநேர ரேஷன் கடைகளில்



2008 மார்ச் 27]

உதவியாளர்கள் இல்லை என்பதால், பல்வேறு ரேஷன் கடைகளில் பொது மக்களுக்கு உடனடியாக ரேஷன் பொருட்களை வழங்க முடியவில்லை. மக்கள் வெகு நேரமாகக் காத்திருந்து ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அரசு இதில் கவனம் செலுத்தி, உதவியாளர் இல்லாத ரேஷன் கடைகளில் உதவியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இந்த ரேஷன் கடைகளில் கோதுமை சரியாக வழங்கப்படவில்லை என்ற புகாரும் மக்கள் மத்தியிலே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, கோதுமையும் மக்களுக்கு வேண்டிய அளவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகவல்களை எல்லாம் எனக்கு ஏற்கெனவே தந்திருந்தால், நான் இதை விசாரித்து அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சித்திருப்பேன். இப்போது தாங்கள் தருகிற தகவலை written–ஆக எழுதிக் கொடுப்பீர்களேயானால், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *3,* மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

## விதை உற்பத்தி

***27790—திரு. டி. செங்குட்டுவன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு விவசாயப் பண்ணைகள், காடுகள், விவசாய நிலங்களில் பயன்படுத்தும் விதைகள், ஒட்டு மாஞ்செடிகள் மற்றும் பல்வேறு செடி வகைகளை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2008 மார்ச் 27

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அகசிப்பள்ளியில் வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான ஒரு மாநில எண்ணெய்வித்துப் பண்ணைமூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து தேவையான வல்லுநர் விதைகளைப் பெற்று, மேற்கண்ட மாநில எண்ணெய்வித்துப் பண்ணையில், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தேவையான ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள திம்மாபுரம் மற்றும் ஜீனூர் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தேவையான மா, சப்போட்டா, நெல்லி, புளி ஒட்டுச் செடிகள், கொய்யா பதியன்கள் மற்றும் இதர செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, தோட்டக்கலைத் துறைத் திட்டங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

முற்பகல் 9–45

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான தனியார் நர்சரி பண்ணைகள்மூலமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கு அந்தப் பண்ணை நாற்றுகள் அரசு மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டு, இலட்சக்கணக்கான நாற்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இன்றைக்கு அரசு தனியார்களிடம் இருந்து கொள்முதல் செய்கின்ற அந்த நாற்றுகள் எல்லாம் தரம் குறைகின்ற நாற்றுகளாக இருக்கிற காரணத்தினால், தமிழ்நாடு முழுவதும் supply ஆகக்கூடிய, கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து உற்பத்தி செய்யப்படக்கூடிய அந்த நர்சரி பண்ணை நாற்றுகளை, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய அரசுப் பண்ணைகள்மூலமாக அரசே முன்வந்து தயார் செய்து அரசுத் துறைக்கும், மற்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத் திட்டப் பணிகளுக்கு 66 இலட்சத்து 83 ஆயிரம் ஒட்டுப் பழக் கன்றுகள் மற்றும் இதர வகைக் கன்றுகள், மொத்தம் 115 இலட்சம் கன்றுகள் தோட்டக்கலைத் துறையிலுள்ள 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. திட்டப் பணிகளுக்குப் போக மீதமுள்ள கன்றுகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 2008–2009–ல் உற்பத்தி செய்கின்ற செடிகள் 115 பல்வேறு வகையான கன்றுகள் ஆகும். 2007–2008 ஆம் ஆண்டு TANHOPE மூலம் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பல்வேறு வகைக் கன்றுகளை வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை, இவை எல்லாம் ஆய்வு செய்து, தரத்தை உறுதி செய்த பிறகுதான், நம்முடைய தேவைக்கு நாம் செடிகளை—நாம் உற்பத்தி செய்கின்ற செடிகளுக்குப் பற்றாத நிலை இருக்கின்ற காரணத்தினாலே—2007–2008 ஆம் ஆண்டு TANHOPE மூலம் 61 இலட்சத்து 12 ஆயிரம் செடிகள் வாங்கி, பல்வேறு பகுதிகளுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எத்தனை விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன? அதிலே தனியாக தோட்டக்கலைத் துறைக்கு என்று எத்தனை பண்ணைகள் இருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் இருக்கின்றன.

[2008 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

## தடுப்பணை

***9635—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கே. சுப்பிரமணியபுரம் கிராமம் அருகே ரூ.720 இலட்சம் மதிப்பீட்டில் வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி 15-2-2008 அன்று முடிவடைந்து, செயலாக்கத்திற்கு வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைப்பாறு ஆறு, வைப்பாறு என்ற கிராமத்தின் அருகே கடலில் கலக்கிறது. ஆற்றின் முகத்துவாரத்தின் வழியே கடல் நீர் உட்புகுந்து, வைப்பாறு, கீழவைப்பாறு, சிப்பிகுளம், கலைஞானபுரம், குண்டடப்பெருமாள்புரம், கோட்டைமேடு, கல்லூரணி, துலுக்கன்குளம் போன்ற அருகில் உள்ள கிராமங்களில் நிலத்தடி நீரையும், ஆற்று நீரையும் உப்பு நீராக மாற்றியுள்ளது. ஆகையால், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொலைநோக்குப் பார்வையோடு, கடல் நீர் உப்பு ஊறாமலும், நல்ல நீர் தேங்கும்பொருட்டும், வைப்பாறு கிராமத்தின் அருகே ரூ.720 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு, அப்போதே அடிக்கல்லும் நாட்டப்பட்ட இடத்தைத் தற்போது மாற்றி, 1.5 கிலோ மீட்டருக்கு மேற்கே தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. அதனால் கடல் நீர் தங்குதடையின்றி, தற்போது கட்டப்பட்டிருக்கும்



2008 மார்ச் 27]

தடுப்பணை வரை வருகிறது. ஆகையால் எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில் கடலுக்கு அடியில், பல நன்மைகளைக் கருதி அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில், வைப்பாறு கிராமத்தின் அருகே வைப்பாறு ஆற்றில் ஒரு தடுப்பணை கட்டப்படவேண்டும். எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட இடம் என்று பாராமல். . .

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. போ. சின்னப்பன்:** பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, நிலத்தடி நீர் உப்பு நீராக மாறுவதைத் தடுக்கும்பொருட்டு, அந்தப் பகுதி மக்கள் நல்ல தண்ணீரைக் குடிப்பதற்கும், நல்ல தண்ணீரில் குளிப்பதற்கும், உடனடியாக வைப்பாறு கிராமத்தின் அருகிலேயே ஒரு தடுப்பணையைக் கட்ட வேண்டும். அதோடு, மேலநம்பிபுரம் கண்மாய்க்குத் தண்ணீர் வரும் பொருட்டு வைப்பாறு ஆற்றில் வெள்ள நீர் உபரியாகச் செல்வதால், அருணாச்சலபுரம் அருகே ஒரு தடுப்பணை கட்டுமாறும் பேரவைத் தலைவர்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம். இல்லாவிட்டால் பதில் வேறு மாதிரி இருக்கும். இருந்தாலும் சொல்கிறேன். யாருடைய தீர்க்கதரிசனத்திலும் இந்தத் திட்டம் வரவில்லை. Tsunami Emergency Assistance Project—சுனாமி அவசரக் கால நிதி உதவித் திட்டம் என்று Asian Development Bank ஒரு Project-ஐ வைத்திருக்கிறார்கள். அந்த Asian Development Bank-தான் இந்த இடத்திலே ஓர் அணையைக் கட்டி, கடல் நீர் உள்ளே வராமல் இருக்க வேண்டுமென்பதற்காக, வைப்பாறு, வங்காள விரிகுடாவிலே கலப்பதற்கு முன்னால் இந்த அணையைக் கட்ட வேண்டுமென்று நினைத்தார்கள். ஏனென்று கேட்டால் அமாவாசை, பௌர்ணமி நேரத்தில் கடல் அலை வைப்பாற்றின் உள்ளே 4, 5 கிலோ மீட்டர் உள்ளே வந்துவிடுகிறது. அப்படி வருகிறபோது—ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியம் அந்த இடத்திலே 9 கிணறுகளைப் போட்டு, 13 கிராமங்களுக்குக் குடிநீரை அந்த கிணற்றிலிருந்து எடுத்துக் கொடுக்கிறது. கிட்டத்தட்ட 200 பாசனக்

[2008 மார்ச் 27

கிணறுகள் சுற்றி இருக்கின்றன. எனவே கடல் நீர் உள்ளே புகுகிறபோது, எல்லாம் உப்பு நீராக மாறி விடுகிறது என்பதற்காக, சுனாமி அவசரக் காலத் திட்டத்தில் அவர்கள் இதற்குப் பணம் கொடுத்து, அதைக் கட்டச் சொன்னார்கள். Asian Development Bank அதைக் கட்ட வேண்டுமென்பதற்காக, ரொம்ப அவசரக் காலத் திட்டம் என்று பெயர் இதற்கு. 24-10-2005 அன்று அரசாங்கம் உத்தரவு கொடுத்தது—A.S. ஆனால் ரொம்ப அவசரம் இல்லையா? பணியை எப்போது துவக்கினார்கள் என்றால், துவங்கிய நேரம் 2007. ஏன்? காரணம் தெரியுமா? Administrative sanction கொடுத்து, அவர் சொன்னதற்கு எல்லாம் நான் இப்போது விளக்கம் சொல்ல விரும்பவில்லை, நின்று போய்விட்டது. ஆகையினால், அதனுடைய காரணத்தினாலே நின்று போயிற்றே தவிர—சுணக்கம் ஏற்பட்டுவிட்டது. 16 மாதத்திலே கட்ட வேண்டிய அந்த அணை 7 மாதத்திற்கு முன்னாலேயே கட்டி முடித்து, செயலாக்கத்திற்கு வந்திருக்கிறது. 425 அடி நீளம், கிட்டத்தட்ட 14 அடி உயரத்திற்குத் தண்ணீர் நின்றுகொண்டிருக்கிறது. A.S.லிருந்து, Administrative sanction–லிருந்து work hand over பண்ணுகிற இடைப்பட்ட நேரத்தில் எத்தனையோ சமாச்சாரங்கள். நான் நீண்ட நாள் உறுப்பினர் என்ற முறையில் கேள்வி நேரத்தில் அவற்றை விளக்க விரும்பவில்லை. ஆகையினால் இது Asian Development Bank–னுடைய உதவியால் வந்ததே தவிர, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Please, எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? திரு. சின்னப்பன். (குறுக்கீடுகள்)

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா ஆட்சிக் காலத்தில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அவர்தான் அம்மா, அம்மா என்று ஆரம்பித்தார். (குறுக்கீடுகள்) தேவையில்லாமல் நீங்கள்தானே இழுத்தீர்கள்? (குறுக்கீடுகள்) உறுப்பினர் கேள்வி கேட்டபோது 'அம்மா', 'அம்மா' என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதேமாதிரி அமைச்சர் ** என்று சொன்ன அந்த

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 மார்ச் 27]

வார்த்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இரண்டு பேர் சொன்னதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா ஆட்சி என்று சொல்வதோ, அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே நடத்தப்பட்டது என்று சொல்வதோ, வழக்கமாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பயன்படுத்துகின்ற வார்த்தை. அதைத்தான் இன்றைக்கும் பயன்படுத்தினார்கள். ஒரு வேளை அந்த உறுப்பினர்கள் இன்றைக்கு அதிகமாக அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கலாம். அது வேறு விவகாரம். ஆனால் அதற்குப் பதிலளிக்கின்ற முறையில் அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய வார்த்தை ** என்ற இரண்டு வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டாம் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதல்வரே விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) வேறு விஷயம் கேள்வி நேரத்திலே வராது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்திலே வராது. (குறுக்கீடுகள்) சரி, சின்னப்பன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பொள்ளாச்சி ஜெயராமன், தேவையில்லாமல் எழுந்திருந்து பேசாதீர்கள், உட்காருங்கள். திரு. சின்னப்பன் சொல்லுங்கள்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 2006 ஆம் ஆண்டே, அம்மா ஆட்சிக் காலத்திலேயே agreement-ம் போடப்பட்ட பணி. இப்போது நான் கேட்பது என்னவென்றால், எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில் தொலைநோக்குப் பார்வையோடு கடலுக்கு அருகில் தடுப்பணை கட்டும் பணி தொடங்கப்பட்டது. ஆனால் இப்போது ** 1½ கிலோ மீட்டருக்குத் தள்ளி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற அந்தச் சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. போ. சின்னப்பன்:** அதாவது 1½ கிலோ மீட்டர் தாண்டி உப்பு நீர் கடல் தண்ணீராக அனைத்தும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னப்பன், இந்த மாதிரியான வார்த்தைகளை எல்லாம் அவையிலே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த மாதிரி வார்த்தைகள் எல்லாம் அவையில் பேசக்கூடாது. தெரிகிறதா? (குறுக்கீடுகள்)

**திரு. போ. சின்னப்பன்:** இப்போது நான் கேட்பது என்னவென்றால், அம்மா ஆட்சிக் காலத்திலே கடல் நீர் உட்புகாமல் கட்டுவதற்காக, வைப்பாறு கிராமத்தின் அருகே கட்டப்பட்டது. ஆனால் இப்போது 1½ கிலோ மீட்டர் மேற்கே, கடல் நீர் உள்ளே புகும் வகையில் கட்டப்பட்டுள்ளது. ஆகையால் அந்தப் பகுதியிலுள்ள நல்ல நீர் எல்லாம் உப்பு நீராக மாறியுள்ளது என்பதைத்தான் நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்ன வார்த்தை சொன்னார் என்று, நானும் திருப்பி அதே பதில் சொல்லட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. அவர் ** இப்போது மாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னார். நானும் அதேமாதிரி பதில் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், நான் முதலிலேயே சொன்னேன். இது சுனாமி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது கேள்வி நேரம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Asian Development வங்கி உதவியோடு Tsunami Emergency Assistance Project திட்டத்தின்கீழ் இது கட்டப்பட்ட ஒன்று. அந்த சுனாமியில், அவர்களும் வந்து இடத்தைப் பார்வையிட்டு, எந்த இடத்திலே கட்டலாம் என்பதை அவர்கள் நிர்ணயித்து, அதற்குப் பிறகு வேலை நடக்கிறபோது, அவர்களும் வந்து அடிக்கடி பார்த்து, வேலை செம்மையாக இருக்கிறதா என்பதை அவர்களும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகையினால், இதிலே ** கட்டினார்கள் என்பதும், ** செய்தார்கள் என்று சொல்வதும் முழுக்க, முழுக்க முந்தைய ஆட்சியினுடைய ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

### சிற்றுந்து

***2996—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மலைப் பகுதியில் சிற்றுந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை நான் அளிக்க விரும்புகிறேன்.

வால்பாறையானது பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் உள்ளது. இப்பகுதியில் மொத்த மக்கள்தொகை 1¼ இலட்சமாகும். இங்கு சுமார் 56 குக்கிராமங்கள் உள்ளன. இதில் 45 குக்கிராமங்களுக்குப் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. 38 அரசுப் பேருந்துகள் இப்பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 11 குக்கிராமங்களில் சாலைகள், பேருந்துகள் இயக்க முடியாத அளவிற்கு மிகவும் குறுகிய சாலைகளாக உள்ளன. எனவே, இப்பகுதியில் மினி பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. பேருந்து இயக்கும் அளவிற்குப் போதுமான அகலத்திற்குச் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்ட பிறகு, மேற்படி கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து தரப்படும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏழு ஆண்டுக் காலமாக, எனது வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கேட்டுக்

[2008 மார்ச் 27

கோரிக்கை வைத்ததை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்கள் பெரும் முயற்சி எடுத்து, 101 ரூபாய் 50 பைசா என்று தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயத்திற்கு notification அறிவித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுக்கு வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அதற்கு உதவி புரிந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அருமை அண்ணன் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களுக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்கள் 100 ஆண்டுகள் வாழ வேண்டுமென்று சொல்லி இறைவனைப் பிரார்த்திக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். வால்பாறையைப் பொறுத்தவரையில், வேவர்லி, வாட்டர்பால்ஸ், உமண்டிமுடக்கு, கவர்க்கல், சக்திதலைநார், பெரிய கல்லாறு, சேக்கல்முடி, புதுக்காடு, தாய்முடி, ஒத்தப்பாடி, வெள்ளமலை, ஊசிமலை, அக்காமலை, அனலி எஸ்டேட், பன்னிமேடு பங்களா டிவிஷன், முருகாளி, சிவகாப்பி, காஞ்சமலை, சுருளிமலை, ஈட்டியார், சின்னக் கல்லாறு, வில்லோணி போன்ற குடியிருப்புப் பகுதிகள் எல்லாம் குறுகிய பாதைகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் பேருந்துகள் செல்ல முடியாது. அந்தப் பகுதிகள் பெரிய பேருந்துகளைத் திருப்புவதற்கும் வழியில்லாத பகுதிகள். ஆகவே, அந்தப் பெரிய பேருந்துகள் செல்ல முடியாத இடங்களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிறிய பேருந்துகளை வழங்குவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே நான் பதிலில் சொல்லியிருக்கிறேன். சாலைகள் அகலமாக இருக்குமானால், பேருந்து ஓட்டக்கூடிய அளவிற்கு இருக்குமானால், உடனடியாக இந்த அரசு பேருந்து விடும் என்று சொல்லியிருக்கிறேன். அவர் சொல்லியிருப்பதைக் காட்டிலும் 11 இடங்களுக்கு மட்டும்தான்— மொத்தம் உள்ள 56 குக்கிராமங்களில் 45 குக்கிராமங்களுக்கு 38 பேருந்துகள் சென்றுகொண்டிருக்கின்றன. இன்னும் 11 இடங்களுக்குத்தான்--பேருந்து செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, சாலைகளைச் செப்பனிட்ட பிறகு, அந்தப் பகுதிகளில் மினி பேருந்துகளை இயக்கமுடியும்.

பொதுவாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோதுதான் மினி பேருந்து இயக்கத்திற்காக ஒரு திட்டத்தை அறிவித்து, 1 கி.மீ. service area, 16 கி.மீ. unserved area என்ற வகையிலே முதலிலே ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அப்படி வெளியிட்டதன் காரணமாக, 3,900 பேருந்துகள் இயக்கப்பட்டன. பிறகு அந்த மினி பேருந்து உரிமையாளர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 4 கி.மீ. service area–வாகவும், 16 கி.மீ. unserved area–விற்கும் கொடுக்கலாம் என்று அன்றைக்கு அரசாணை வெளியிடப்பட்டது. அதை எதிர்த்து, விருதுநகரிலே இருக்கின்ற ஒரு மினி பேருந்து உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்றபோது, நீதிபதி அவர்கள், 'ஒரு பேருந்து இயக்கப்பட்டாலே அது served area–தான். எனவே, இன்னொரு பேருந்து தர இயலாது' என்று சொன்ன காரணத்தால், அந்த 3,900 பேருந்துகளைத் தவிர, மேலும் ஒரு பேருந்தைக்கூட நம்மால் தர இயலவில்லை. இப்படி உயர் நீதிமன்றத்திலே அந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது.

அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மீண்டும் ஏழை எளியவர்கள் அதைப் பயன்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு புதிய திட்டத்தை அறிவித்து—ஒருங்கிணைந்த வகையிலே தமிழ்நாடு முழுவதும் ஒரு புதிய திட்டத்தை அறிவிக்கலாம்; ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும், அந்த உள்ளூரில் இருக்கின்ற குழுக்களை அழைத்து, எந்தப் பகுதிக்கு மினி பேருந்து அவசியம் தேவை என்பதை அறிந்து, அவர்களிடம் அறிக்கை பெற்ற பிறகு, அந்தப் பகுதியிலே மட்டும் மினி பேருந்து விடலாம் என்று ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டு, மாவட்ட ஆட்சித்

[2008 மார்ச் 27

தலைவர்களும் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். மொத்தம் நாம் தரவேண்டிய பேருந்துகள் என்பவை, இன்னும் 3,000, 3,500 பேருந்துகள் தரலாம். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்டறிந்து, வெறும் 294 வழித்தடங்களை மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கிறது. இது நீதிமன்றத்தில் உள்ள பிரச்சினை. மினி பேருந்து, spare bus கேட்பது, நீதிமன்றத்திலே இருக்கிறது. புதிய பேருந்து விடுவதற்கான அனுமதியும் நீதிமன்றத்திலே இருக்கிறது. எனவே, இப்போது முதல்வர் அவர்களோடு கலந்து, புதிய G.O. ஒன்று—அரசாணை வெளியிடப்படலாமா அல்லது நீதிமன்றத்திற்குச் சென்று எப்படி இதில் தடையாணை பெற முடியாத அளவுக்கு ஒரு சட்டத்தைப் போட்டு, பேருந்துகளை விடலாமா என்பதற்கு உரிய முயற்சிகள் துறையின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த முயற்சி முடியும்போது, நிச்சயமாக வால்பாறை பகுதிக்கும் மினி பேருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு மிகவும் நன்றி. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைப்பதற்கு அவரிடம் செல்கின்ற நேரத்தில் சிரித்த முகத்தோடு எங்களை வரவேற்று, எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகிற அமைச்சர் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே சமயத்தில், வால்பாறையைப் பொறுத்தவரையில் 6,000 மாணவ, மாணவிகள் மாலை 5–00 மணிக்குப் பள்ளிகள் விட்டு வருகின்ற நேரத்தில் ஒரே இடத்தில் கூடியிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. 6,000 மாணவ, மாணவிகளும் மாலை 5–00 மணியிலிருந்து குடியிருப்பு எஸ்டேட்டுகளுக்குச் செல்லுவதற்கு 7½ மணி அல்லது 8–00 மணி ஆகிவிடும். செல்லுகின்ற வழியிலெல்லாம் யானைகள், புலிகள், சிறுத்தைப் புலிகள், கரடிகள், காட்டு எருமைகள் போன்ற கொடிய வன விலங்குகள் மத்தியில்தான் அவர்கள் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. 6,000 மாணவ, மாணவிகள் ஒரே நேரத்தில் வால்பாறை டவுனிலேயிருந்து எஸ்டேட் குடியிருப்புப் பகுதிக்குச் செல்வதற்கு ஏறத்தாழ ஒரு மணி நேரம், ஒன்றரை மணி



2008 மார்ச் 27]

நேரம் ஆகிவிடும். அமைச்சரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே வால்பாறைக்கு நல்ல பேருந்துகளைக் கொடுத்து உதவியிருக்கின்றார். அவருக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த 6,000 மாணவ, மாணவிகளும் ஒரே நேரத்தில் வால்பாறையிலிருந்து குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்வதால் பேருந்துகள் போதாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் மீண்டும் வால்பாறைக்கு புதிய வழித்தடங்களில் 5 பேருந்துகளைக் கொடுத்து உதவ வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நீலகிரி மலைப் பகுதியில் மினி பேருந்துகள் இருக்கின்றன. அதைப்போல, வால்பாறை மலைப் பகுதிக்கும் மினி பேருந்துகள் விடலாம். அரசு இதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு, தங்களின் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் இப்பொழுது 5 புது பேருந்து வழித்தடங்களை அறிவிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள்தான் இந்த அரசுப் போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பித்தவர்கள். ஆனால், 20, 25 ஆண்டு காலத்தில் இவ்வளவு பெரிய அரசுத் தொகையை போக்குவரத்துக் கழகத்திற்கு இப்போதுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்து உதவி பண்ணியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 6,000 புதிய பேருந்துகளை வாங்கியிருக்கிறோம். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட, 3,500 புதிய பேருந்துகள் வழங்கப்படும் என்று பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வால்பாறை பகுதியில் இயங்குகின்ற பேருந்துகள் எல்லாம் மிகவும் பழமையாக இருக்கின்றன. புதிய பேருந்துகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பேருந்துகள் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. மேலும் புதிய பேருந்துகளை வாங்க இப்போது முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அவை வாங்கப்பட்டவுடன், உங்களுக்கு 5 பேருந்துகளை விரைவிலே கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னப்பன் அவர்களும், (குறுக்கீடுகள்) திரு. சாமி, நீங்கள்

[2008 மார்ச் 27

உட்காருங்கள். அதேபோன்று, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களும் இந்த அவையிலே கூறிய ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) இரண்டையும்தான். இரண்டும் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் முடிந்து நடைபெற்ற முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே திருப்பூர் பகுதியில் கூடுதல் பேருந்துகள் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரிலே ஒரு மாத காலத்தில் கூடுதலாக 50 பேருந்துகளை இயக்கினீர்கள். அதற்கு அன்றும், இன்றும், என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது என்ன புதுப் பிரச்சினை என்றால், போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தொடர்ந்து என்னோடு தொடர்புகொள்கிறார்கள். அந்தப் பேருந்துகளை நிறுத்துவதற்குப் பழைய பேருந்து நிலையத்திலே போதுமான இட வசதி இல்லை. ஆகவே, திருச்சி பாதையிலே கிழக்கு மாவட்டங்களிலிருந்து வருகிற பேருந்து, தென் மாவட்டங்களிலிருந்து வருகிற பேருந்து, இவை அனைத்துமே பழைய பேருந்து நிலையத்திற்குச் செல்கிற காரணத்தினாலே, நிறுத்துவதற்கு இடம் இல்லை. இதை உள்ளாட்சித் துறை அமைச்சர் என்று நீங்கள் சொல்வீர்கள் என்று கருதுகிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் திருப்பூரின்மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார். அவரோடு நீங்களும் கலந்து, திருப்பூருடைய தெற்குப் பகுதியிலே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்வரவேண்டும், முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மை. உள்ளாட்சித் துறையின்மூலமாகப் புதிய பேருந்து நிலையம் அமைப்பதுதான் இதுவரையில் முறையாக இருந்து வந்திருக்கிறது. ஏற்கெனவே திருப்பூர் பகுதியிலே ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டு, அந்தப் பேருந்து நிலையத்திற்குப் பேருந்துகள் செல்லாமல் இருக்கிற ஒரு நிலையும் இருக்கிறது. நீங்கள் என்ன சொன்னீர்களோ, அது

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 மார்ச் 27]

குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே கேட்டிருக்கிறார்கள். விரைவிலே எங்கள் துறையின்மூலமாகக் கருத்துரு ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களின் அனுமதியைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்துகளுக்குப் புதிய அனுமதி வழங்குவது பற்றிய கேள்வியைத்தான் நான் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலே சிற்றுந்துகளுக்குப் புதிதாக அனுமதி அளிப்பதற்குண்டான நடைமுறை சாத்தியத்தில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்களைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். இப்போது அரசு பெரும் முதலீடு செய்து புதிய பேருந்துகளை வாங்கி, பொது மக்களுக்குப் போக்குவரத்து வசதியைக் கூட்டி வருகிறது. ஆனால், பக்கத்து மாநிலங்களிலே பேருந்துகளை அரசே வாடகைக்கு எடுத்து, அரசு வாகனங்களாகவே ஓட்டி, அதற்கான நல்ல maintenance, சிறப்பாக இயக்கக்கூடிய வகையிலே, கர்நாடகா போன்ற மாநிலங்களிலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகள், போக்குவரத்துத் துறையிலே ஓய்வுபெற்ற பணியாளர்கள், இவர்களால் ஓட்டப்படுகின்ற வாகனங்களை அரசு வாடகைக்கு எடுத்து, அரசு வாகனங்களாக அவற்றை ஓட்டி, அரசாங்கத்திற்கும் இலாபம் தருகிற அதே நேரத்திலே, வேலையில்லாத பட்டதாரிகளுக்கும், ஓய்வுபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் பயன்படக்கூடிய வகையிலே, பல வகைகளிலே போக்குவரத்தை மிகவும் மேம்படுத்தியிருக்கிறார்கள். அத்தகைய புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்குத் தமிழக அரசு முன்வருமா என்று உங்கள்மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு புதிய அரசாணைகூட ஏற்கெனவே வெளியிடப்பட்டது. ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்கள் ஒரு லிட்டர் டீசல் விலை 18 ரூபாய் 70 காசு என்று விற்கப்பட்டபோது கிலோ மீட்டருக்கு என்ன கட்டணம் நிர்ணயிக்கப்பட்டதோ, அதே கட்டணத்தில் இன்றளவும் ஓடிக்கொண்டிருக்கின்ற காரணத்தால்,

[2008 மார்ச் 27

போக்குவரத்துக் கழகங்களால் புதிய பேருந்துகளை வாங்க இயலாதபோது, அதற்காக வெளியாரிடமிருந்து வாடகைக்கு அந்த வண்டிகளை எடுக்கலாம் என்று ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆண்டுதோறும் 3,000 பேருந்துகள் என்ற வகையிலே அனுமதி அளித்திருக்கின்ற காரணத்தால், வெளியிலே இருந்து வாடகைக்கு எடுக்கக்கூடிய நிலைகூட இப்போது இல்லை. அரசே அந்தப் பேருந்துகளைப் புதிதாக வாங்கி விட்டுக்கொண்டிருக்கிறது. அதனால், ஏற்கெனவே பேருந்துகளை வாடகைக்கு எடுத்து விடலாம் என்ற அந்த அரசாணை என்பது அப்படியே இருக்கிறது, அதை நாம் நடைமுறைப்படுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***9244—திரு. இல. வேலுசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி தொகுதி, நூலஅள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள நூலஅள்ளி



2008 மார்ச் 27]

ஊராட்சியில், நூலஅள்ளி கிராமத்தில் தற்போது துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அந்த ஊராட்சியைச் சுற்றி திண்ணப்பட்டி, முக்கல்நாயக்கன்பட்டி, நல்லசேனஅள்ளி போன்று 5 ஊராட்சிகள் இருக்கின்றன. சுமார் 25,000 மக்கள் அங்கே வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, அங்கே மருத்துவ வசதியைத் தேடி அந்த மக்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் அவர்கள் சிகிச்சை பெறவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகவே, அந்த மக்களுடைய நலன் கருதி, இப்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்தத் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும் என்று தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய விதியின்படி ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க, குறைந்தது 30,000 மக்கள்தொகை இருக்க வேண்டும். 8 கிலோ மீட்டர் தொலைவில் அரசு மருத்துவமனையோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையமோ இருத்தல் கூடாது. நூலஅள்ளி கிராமம், சோளகொட்டாய் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட பகுதியாகும். நூலஅள்ளி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருவதுடன், 8 கிலோ மீட்டர் தொலைவில் இலலீகம் ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் தருமபுரி மருத்துவமனையும் இயங்கி வருகின்றன. நூலஅள்ளி கிராமத்தின் மக்கள்தொகை 2,787 ஆகும். எனவே, நூலஅள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி. (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இந்திய நாட்டினுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் எங்களுடைய சின்ன அய்யா அவர்களை சமீபத்தில் டெல்லியில்

[2008 மார்ச் 27

சந்தித்து தமிழ்நாட்டில் இந்த ஆரம்ப துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதைக் குறித்து பல்வேறு மாவட்டங்களில் இத்தனை, இத்தனை சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று பட்டியலைத் தந்தபோது, இந்திய நாட்டில் இதுவரையில் இல்லாத அளவுக்கு மத்திய அரசினுடைய சுகாதாரத் துறையினுடைய இலாகாவினுடைய சில குறிப்புகளை மாற்றி, அந்தந்த மாநில அரசுகளே இதுபோன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களையும், துணை சுகாதார நிலையங்களையும் அமைத்துக்கொள்ளலாம் என்பதற்கு ஏதுவாக, அதிலும் குறிப்பாக, நம்முடைய தமிழகத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையேற்று இருக்கிற இந்த அரசுக்குச் சிறப்பு சேர்க்கின்ற வகையில், இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலேயே தாங்கள் நினைத்த இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களையும், துணை சுகாதார நிலையங்களையும் அமைத்துக்கொள்ளலாம் என்பதற்கான வழிவகை கண்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதன் அடிப்படையில், சிறப்பு நேர்வாகக் கருதி 15 கிலோ மீட்டர் தூரம் செல்கின்ற இந்தப் பகுதிக்கும், 25,000 மக்கள் தொகை வாழ்கின்ற இந்தப் பகுதிக்கும், இன்னும் ஏனைய கடலூர் மாவட்டத்தில் என்னுடைய கிராமம் உள்பட இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தருவதற்கு மாண்புகு அமைச்சர் அவர்கள், அந்தச் சிறப்பு நேர்வைப் பயன்படுத்தி ஆவன செய்வாரா என்பதைத் தாங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை அவருடைய அமைச்சரிடமே எடுத்துக் கூறலாம். ஏனென்றால் மைய அரசிடம் நாங்கள் அனுமதி கோரியிருக்கின்றோம். இன்னும் கிடைக்கவில்லை. மைய அரசு அனுமதி அளித்தால், இவருடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 27]

**7—**

## பருத்தி நூற்பாலை

***40128—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பருத்தி நூற்பாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பருத்தி நூற்பாலை துவங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி ஒரு பின்தங்கிய தொகுதி. முழுக்க, முழுக்க விவசாயத்தைச் சார்ந்த தொகுதி. இந்தப் பகுதியிலே வாழுகின்ற ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருமே விவசாயத்தைச் சார்ந்துள்ளனர். இந்தப் பகுதியிலே முக்கியத் தொழிலாக விளங்கக்கூடியது விவசாயம் மட்டும்தான். அதே சமயத்தில், சில நேரங்களில் இயற்கைச் சீற்றங்களினால் இந்த விவசாயமும் பாதிக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் பகுதியிலே வாழுகின்ற ஏழையெளிய, விவசாயப் பெருங்குடி மக்கள் எந்தவிதமான தொழில்களுமின்றி அல்லல்படுகின்ற இந்த நேரத்தில் இந்தப் பகுதியிலே முக்கியத் தொழிலாக இருக்கின்ற விவசாயத்தைச் சார்ந்த இந்தப் பருத்தி நூல் ஆலையை இந்தப் பகுதியிலே தொடங்க வேண்டுமென்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மார்ச் 27

**மாண்புமிகு திரு. என்கேகேபி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் பதினெட்டில், தற்போதைய சூழ்நிலையில் ஜவுளித் தொழிலில் ஏற்பட்ட மந்த நிலை, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை, பஞ்சு விலையேற்றம், நூல் விலை சரிவு, போதிய நடைமுறை மூலதனமின்மை மற்றும் பழமையான இயந்திரங்கள் போன்ற சூழ்நிலையில் இன்றைய நூற்பாலைகளிலே 13 நூற்பாலைகளை நடத்துகிற நிலை இந்தத் துறையிலே கிடையாது. ஆகையினால், புதிய ஒரு நூற்பாலையை அந்தப் பகுதியிலே துவங்குகிற நிலை இந்த அரசினுடைய செயற்குறிப்பிலும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மானாமதுரை தொகுதி விவசாயம் சார்ந்த பகுதியாக இருப்பதனால் இந்தப் பகுதியிலே எந்தவிதமான தொழில்களும் இல்லை. அதனால் எங்கள் பகுதியிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் விவசாயத் தொழில் இல்லாத நேரங்களில், வெளி மாவட்டமான மதுரைக்குச் சென்று சில கூலித் தொழில்களைச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், மானாமதுரை பகுதியில் அரசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன; நல்ல குடிநீர் வசதி இருக்கின்றது; சரியான இடங்களும் இருக்கின்றன; போக்குவரத்து வசதிகளும் இருக்கின்றன; அந்த நூற்பாலைக்குத் தேவையான பருத்தியும் உற்பத்தி செய்யப்படுகிறது; சாகுபடி செய்யப்படுகிறது. ஆகவே, இந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்தக் கூலித் தொழிலாளர்களுடைய நலன்களைக் கருதி, படித்த வேலையற்ற இளைஞர்களுடைய நலன்களையும் கருதி—சில நூற்பாலைகளுடைய தொழிலாளர்களும் அந்தப் பகுதியில் அதிகமாக வசிக்கிறார்கள், அவர்களுடைய நலனையும் கருதி—அந்தப் பகுதியிலே ஒரு பருத்தி நூற்பாலையைத் தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. என்கேகேபி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு



2008 மார்ச் 27]

முன்னரே சொன்னதைப்போல, ஏற்கெனவே இருந்த 18 நூற்பாலைகளிலே 13 நூற்பாலைகளை, கடந்த அரசு மூடிவிட்டது. அதைத் தொடங்குகின்ற நிலைகூட இன்றைய சூழ்நிலையிலே கிடையாது. அதனால், 100 சதவிகிதம், அந்தப் பகுதியிலே நூற்பாலையைத் தொடங்குகிற வாய்ப்பு கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

### கல் பாலம்

***1991—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கோச்சடை, விளாங்குடிக்கு இடையிலான கல் பாலம் அமைக்கும் பணி எப்போது தொடங்கி நிறைவுபெறும்?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, கோச்சடைக்கும், விளாங்குடிக்கும் இடையில், வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் தற்போது இல்லை. எனவே, நிறைவேறும் வாய்ப்பும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கோரிக்கை. மதுரையில், பரவை, விளாங்குடி பகுதியில் இருப்பவர்கள், எதிர்க்கரையில் உள்ள பல்கலைக்கழகத்திற்கோ அல்லது வேறு பகுதிகளுக்கோ செல்லவேண்டியிருந்தால், இரு சக்கர வாகனங்களில் வரும்பொழுது, பாத்திமா கல்லூரிக்கும், பெத்தானியாபுரத்திற்கும் இடையில் இருக்கக்கூடிய தீக்கதிர் பாலம் வழியாகத்தான் செல்கிறார்கள். இதனால் ஏராளமான விபத்துகள், பெத்தானியாபுரம் குரு தியேட்டர் பகுதியில் ஏற்படுகின்றன.

அடுத்தது, திண்டுக்கல்லில் இருந்து வரக்கூடிய வண்டிகள், தேனி மார்க்கமாகக் கேரளாவிற்குச் செல்லவேண்டியிருந்தால், அவையும் இந்த வழியாகத்தான் வருகின்றன. எனவே, இந்தப் பாலம் என்பது, பெரிய அளவிற்கு மக்களுக்குப் பயன்படும். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறையோடும் மதுரையில் நானும், எங்களுடைய தலைவர்களும் சென்று சந்தித்திருக்கிறோம். ஆகவே, அரசு மீண்டும் முயற்சி செய்தால், இந்தப் பாலம் அமைத்துக் கொடுக்கப்பட்டால், மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, மேல்முறையீடு என்கிற முறையில் தயவுசெய்து இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இடத்தில், பாலம் தேவைப்படுகின்ற இடத்திலிருந்து, வைகை ஆற்றின் மேற்பகுதியில் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு பாலமும், அதேபோல, கீழ்ப் பகுதியில் ஒரு பாலமும் இருக்கின்றன. எனவே, அவற்றைத் தற்போது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும், மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல், அதாவது திண்டுக்கல்லில் இருந்து மதுரையைக் கடந்து திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்குச் செல்கின்ற அந்த தேசிய நெடுஞ்சாலையைக்கூட, நான்கு வழிச் சாலையாக மாற்றுகின்ற பணி நடைபெற்று வருகிறது. எனவே, அதன்மூலமும் ஒரு பாலம் வரக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே, அதையும் கருத்தில் கொண்டு, எதிர்காலத்திலே இந்தத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில், ஒரு பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 7 செல்கிறது. மறு பகுதியில், மாநில அரசின்மூலம் பராமரிக்கப்படுகின்ற மாவட்ட முக்கியச் சாலை செல்கிறது. எனவே, மாநில நெடுஞ்சாலைத் துறைதான் இந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அங்கிருக்கக்கூடிய மாவட்ட நிர்வாகத்தையோ அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தையோ அணுகி, பல்வேறு திட்டங்களின்மூலம்கூட அந்தப் பாலத்தை அமைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதன்மூலமும் மாண்புமிகு





உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் அதிகமாக விரும்பினால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகக்கூட அதை அமைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே, அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிசீலிக்கலாம். எனவே, அதற்குப் பிறகு எதிர்காலத்திலே இதைப் பற்றி நெடுஞ்சாலைத் துறை பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்களிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்று பார்க்கிறபோது, இந்தப் பக்கம் சமயநல்லூர் தொகுதி, அது நம்முடைய அமைச்சர் அவர்களின் தொகுதி. அந்தப் பக்கம் திருப்பரங்குன்றம் தொகுதி. ஆகவே, அதையெல்லாம்விட, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கை என்கிற முறையில் கொண்டு வந்தேன். கல் பாலம் என்பதற்கு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது சரி. மீண்டும், மீண்டும் வற்புறுத்துகிறார்கள். ஒரு தரை வழிப் பாலம் வந்தால்கூட, பெண் பிள்ளைகள் நடந்துகூட இரண்டு கரைக்கும் போய்க்கொள்வார்கள். அதுவும் நம்முடைய அரசுக்குப் பெருமை சேர்க்கும். ஆகவே, கல் பாலம் என்பதை மாற்றி, தரை வழிப் பாலம் என்கிற முறையிலாவது பரிசீலனை செய்து—தரைப் பாலம் என்கிற முறையில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்; பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மத்திய அரசுமூலம் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஐ நான்கு வழிச் சாலையாக மாற்றுகின்ற பணி நடைபெற்று வருகிறது. எனவே, அதிலும் ஒரு உயர்மட்டப் பாலம் வரக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே, அது அமையும்பட்சத்தில், அதையும் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாற்கரச் சாலையை அமைக்கக்கூடிய தனியார் கம்பெனிகள், அந்த வேலையைத் தொடங்கி முடிக்கிற வரை, ஏற்கெனவே இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலையைப் பராமரிக்க வேண்டுமென்ற விதியை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், திருச்சியிலிருந்து திண்டுக்கல் வரையுள்ள நெடுஞ்சாலை மிகவும் மோசமாகப் பழுதுபட்டு, குண்டுங்குழியுமாக இருக்கிறது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அதுபோன்ற சாலைகளை, நாற்கரச் சாலைத் திட்டத்தை எடுத்துச் செய்கின்ற தனியார் கம்பெனிகள் ஏன் இதுவரை சரிபார்க்கவில்லை? அவர்களைச் சரிபார்க்க வைக்கவேண்டிய பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி, கடந்த கூட்டத் தொடரிலேகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் எழுப்பப்பட்டது. நம்முடைய தமிழகத்திலே ஏறத்தாழ 4,500 கிலோ மீட்டர் நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலை உள்ளது. இதிலே ஏறத்தாழ 3,250 கிலோ மீட்டர் அளவிற்கு நம்முடைய மத்திய அரசின் கட்டுப்பாட்டிலே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலே எடுக்கப்பட்டிருக்கிறது. அதை நான்கு வழிச் சாலையாகவும், ஆறு வழிச் சாலையாகவும் மாற்றுவதற்கு, அதிலே பல பணிகள் நடந்திருக்கின்றன, பல பணிகள் நடந்து வருகின்றன. மீதமிருக்கக்கூடிய சுமார் 1,650 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை, மத்திய அரசின் தரை வழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையினுடைய அமைச்சகத்திலிருந்து நிதியைப் பெற்று, மாநில அரசு அதைப் பராமரித்து வருகிறது. எனவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாற்றப்பட்ட அந்தச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்றிய தனியார் நிறுவனம், சில வரிக் கட்டணம் வசூலித்துக்கொண்டு அதைப் பராமரித்து வருகிறது. ஆனால், பணிகள் நடைபெற்று வருகிற நிலையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இந்த வினாவானது, நிச்சயமாக அது கருத்தில் கொள்ள வேண்டிய வினாதான். இருந்தாலும், அதைப் பொறுத்தளவில் நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சருக்கு





அந்தத் தகவல் நம்முடைய மாநில அரசுமூலம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அலுவலர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் மாநில அரசுமூலம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே, தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு என்கிற ஒரு பிரிவு நம்முடைய மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதன்மூலமாகவும் அப்போதைக்கப்போது தகவல் கேட்கப்பட்டு, உரிய அலுவலர்களிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த வாரம்கூட அதற்குரிய கூட்டம் நடைபெற்ற நேரத்திலே, மத்திய அரசினுடைய தரை வழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினுடைய உயர் அதிகாரி ஒருவர் கலந்துகொண்டார். நானும், துறையினுடைய செயலாளரும், தலைமைப் பொறியாளரும் அவரிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதுபோன்ற குறைபாடுகள் தற்பொழுது நீக்கப்பட்டு வருகின்றன. எனவே, நிச்சயமாக எதிர்காலத்திலே அதுபோன்ற பிரச்சினைகள் வராத அளவிலே மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின்போது நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களின் பரிந்துரையின்பேரில் திட்டக்குடிக்கு ஒரு மேம்பாலமும், முருகன்குடிக்கு ஒரு மேம்பாலமும் கொடுத்தீர்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாலம் அமைக்கிறோம் என்று சொன்னால், அதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட வேண்டும். தயார் செய்யப்படுவது மட்டுமல்ல, அந்த இடத்திலுள்ள மண்ணினுடைய தாங்கு தன்மையை அறியவேண்டும். அதற்கெல்லாம் தனியாகக் கலந்தாய்வாளர்கள் நியமிக்கப்பட்டு, அதுபோன்ற குறைபாடுகள் களையப்பட்டு, எதிர்காலத்தில் அந்தப் பாலத்தை நல்ல வலுவுள்ள நிலையில் அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்ற காரணத்தினால்—சாலை அமைப்பதுபோல் எளிதாக அந்தப் பணியை முடித்துவிட முடியாது—இதுபோன்ற பணிகளும், இடையிலே

[2008 மார்ச் 27

நம்முடைய கட்டுமானப் பொருட்களினுடைய விலை ஏற்றத்தின் காரணமாகவும் பல பணிகள், பாலப் பணிகள் மற்றும் கட்டடப் பணிகளில் கொஞ்சம் சுணக்கம் இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்பொழுது வெளி மார்க்கெட்டில் இருக்கக்கூடிய நிலைமையை அறிந்து, நம்முடைய பொதுப் பணித் துறையினுடைய பரிந்துரையின்பேரில் நெடுஞ்சாலைத் துறையினுடைய வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டு, கடந்த வாரம் அதற்குரிய ஓர் அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே இதுபோன்ற பணிகள் காலதாமதம் இல்லாமல் நடைபெறுவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இரண்டு பாலங்களையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரில் அறிவித்த காரணத்தினால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள், கோரப்பட்டு, நிச்சயமாக விரைவில் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

**மனித உரிமைக் கல்வி**

***701—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிடர் நலத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி, குறிப்பிட்ட வகுப்பு வரை நடத்தப்படுவதால், அதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் மனித உரிமைக் கல்விக்கான பாடத் திட்டம், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் 2002 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுத் திட்டமாக 2005 வரை நடத்தப்பட்டது. மேலும், 3 ஆண்டுகளுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு, 2008 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு ஆண்டுகளாக ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகளிலே, சுமார் 385 பள்ளிகளிலே இந்த மனித உரிமைக் கல்வி, மதுரையிலே இருக்கின்ற மனித உரிமைக் கல்வி நிறுவனம் என்ற அமைப்பால் நடத்தப்படுகிறது. நமது மாநிலத்திலே முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு 11 மாநிலங்களிலே நம்மைப் பார்த்து விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்படுகிறது. இந்த நிலையிலே இது தொடர்ந்து நீட்டிக்கப்படுமா? 6, 7, 8 ஆம் வகுப்புகளிலே இப்பொழுது மாணவர்களுக்கு Active Learning Method என்கின்ற ஒரு சிறப்பான முறையைப் பயன்படுத்தி கல்வி புகட்டி வருகிறார்கள். அந்த முறையின்மூலம் இந்த மனித உரிமைக் கல்வி அளிக்கப்படுமா? இந்த மனித உரிமைக் கல்வியை மேலும் 9 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு ஆகிய வகுப்புகளுக்கும் நீட்டிப்பதற்கும், ஏனைய பள்ளிகளுக்கு விரிவுபடுத்துவதற்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் நடத்தப்படும் மனித உரிமைக் கல்வி விரிவுபடுத்தப்படும் பட்சத்தில், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் நடத்தப்பட வேண்டும். ஆனால், 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு பொதுத் தேர்வு நடத்தப்படுவதால், அப்பொதுத் தேர்வு தொடர்பான பாடங்களில் அதிக மதிப்பெண்கள் பெற மாணவர்களும், பள்ளித் தேர்ச்சி விழுக்காடு அதிகம் பெற ஆசிரியர்களும் ஆர்வம் காட்டுகின்றனர் என்பதால், அரசு பொதுத் தேர்வுக்கு உட்படுத்தாத இம்மனித உரிமைக் கல்வித் திட்டத்தினை

[2008 மார்ச் 27

9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு விரிவுபடுத்துவதில் மாணவர்களிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் போதுமான வரவேற்பு இல்லை. மாணவர்கள் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும், பள்ளியின் தேர்ச்சி விழுக்காடு உயரவேண்டும் என்ற கண்ணோட்டத்தில், இத்திட்டம் தற்போது நடத்தப்படும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளிலிருந்து மேலும் விரிவுபடுத்த உகந்ததல்ல என இவ்வரசு கருதுகிறது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்பொழுது ஈரோடு, சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் மாநகர கமிஷனரவர்களுடைய முன் முயற்சியின் காரணமாக, ஏனைய பள்ளிகளுக்கும், பள்ளிக் கல்வித் துறை சார்ந்த பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை— ஆதி திராவிட நலத் துறையிலே சிறப்பாகச் செயல்படுகின்ற இந்தத் திட்டத்தை—பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்திச் செயல்படுத்தினால், மாணவர்கள் மத்தியிலே மனித உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட ஏதுவாக இருக்கும். இதைப்பற்றிப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையின்மூலமாகவும் மனித உரிமைக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவது தற்போது உகந்தது அல்ல என்று இத்துறை கருதுகிறது. மேலும், பள்ளிக் கல்வித் துறைமூலமாக இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. எம். அன்பழகன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மார்ச் 27]

**10—**

## ஆலை

***22908—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதியில் மக்காச்சோளத்திலிருந்து பிஸ்கட் தயாரிக்கும் ஆலை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழனி தொகுதியில் மக்காச்சோளத்திலிருந்து பிஸ்கட் தயாரிக்கும் ஆலை நிறுவ தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, வாகரை ஊராட்சியில் மக்காச்சோளம் ஆராய்ச்சி மையம் நிறுவியதற்காக முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 1 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. பழனி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் சுமார் 80 ஆயிரம் ஏக்கர் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. இங்கு விளைகின்ற மக்காச்சோளத்தைக் கோழித் தீவன உற்பத்தியாளர்கள் வாங்குகிறார்கள். அதற்கு விலை நிர்ணயம் செய்வதும் கோழித் தீவன உற்பத்தியாளர்களேதான். தற்போது கிலோ 7 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. சில சமயங்களில் வெளி மாநிலங்களுடைய வரத்து அதிகமானால், விலை குறைந்துவிடுகிறது. விவசாயிகளுக்கு நியாயமான, சரியான விலை கிடைக்க அரசு இப்பகுதியில் By-Product Industries, அதாவது மக்காச்சோளத்தினுடைய மாற்றுப் பயன் திட்டங்களான, பிஸ்கட் தயாரித்தல், Corn Flakes தயாரித்தல், எண்ணெய் உற்பத்தி செய்தல், பீர் தயாரித்தல் போன்ற தொழில்களைத் தொடங்கலாம். எனவே, இந்தத் தொழில்கள் தொடங்கப்பட்டால். . .

[2008 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. எம். அன்பழகன்:** விவசாயிகளுடைய நலன் காக்கப்படும். அரசு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில்கூட 9 பக்கங்களுக்கு 17 பத்திகளிலே விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்கியிருக்கிறது. எனவே, எங்கள் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு மக்காச் சோளத்திற்கு உரிய நியாயமான விலை கிடைக்க பிஸ்கட் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அதுபற்றித் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியில் மக்காச்சோளத்திலிருந்து பிஸ்கட் தயாரிக்கும் ஆலை நிறுவ தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை என்றாலும், உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கு, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆணைக் குழு மூலம் கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இதில் எந்த ஒரு தனி நபரும், பழனி தொகுதியில் மக்காச்சோளத்திலிருந்து பிஸ்கட் தயாரிக்கும் ஆலை நிறுவ விரும்பினால், திண்டுக்கல் மாவட்ட உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில் அலுவலரிடம் நேரில் தொடர்புகொண்டு, ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம். மத்திய கதர் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் வங்கியில் கடன் பெற்றுத் தொழில் புரிய 25 முதல் 30 விழுக்காடு வரை மானியம் கொடுத்து துறை உதவிடும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.



2008 மார்ச் 27]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல் 2)@

**1—**

### மதுபானக் கடை இட மாற்றம்

**வினா எண் 10903—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி பேருந்து நிலையம், வாசவி திருமண மண்டபம் அருகே அமைக்கப்பட்டுள்ள அரசு மதுபானக் கடையினை மாற்றி வேறு இடத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தேனி பேருந்து நிலையத்திற்குள் நகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்த மதுபானக் கடை (எண் 8528) பேருந்துப் பயணிகளுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு இடையூறாக இருப்பதாக ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதால், மேற்படி மதுபானக் கடை 18-7-2006 அன்று தேனி மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி, பேருந்து நிலையத்திற்கு எதிரில் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தேனி வாசவி திருமண மண்டபம் அருகில் இயங்கி வரும் மதுபானக் கடை (எண் 8534), ஏற்கெனவே தனியாரால் நடத்தப்பட்ட காலத்திலிருந்து இயங்கி வந்துள்ளது. அதே இடத்தில், தற்பொழுது டாஸ்மாக் நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது. மதுபானக் கடை அருகில் கோயிலோ, பள்ளிக்கூடமோ ஏதும் இல்லை என்பதால் இக்கடையை மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

**2—**

### போதைப் பொருட்கள் தடுப்பு

**வினா எண் 15030—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் பதிலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2008 மார்ச் 27

கல்லூரிகளின் அருகில் சில சமூக விரோத சக்திகள், போதை மாத்திரைகளை மாணவர்களுக்கு விற்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கல்லூரி மற்றும் பள்ளிகளின் அருகில் போதைப் பொருள்கள் எந்த ரூபத்தில் விற்றாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னையில் கஞ்சா சாக்லெட் மற்றும் போதை ஊசி வழக்குகளும், திருச்சி மற்றும் இராமநாதபுரத்தில் மெத்தாகுலேன் வழக்குகளும், தூத்துக்குடியில் டயாசிபாம் வழக்கும் பதிவு செய்யப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், இதுபோன்ற போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா எனத் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது.

**3—**

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 14110—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, வானகிரி மீனவர் பகுதியில் மின்மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, வானகிரி மீனவர் பகுதியில் சுனாமி குடியிருப்புகளுக்குப் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு 3-3-2007 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

**4—**

## மின் பிரிவை விரிவுபடுத்துதல்

**வினா எண் 15208—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 27]

(அ) கோயம்புத்தூரில் அவசர அழைப்புக்கு வரும் மின் பிரிவை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவையில் கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையம் 1-3-2005 ஆம் வருடம் முதல் இயங்கி வருகிறது. கோவை மாநகர் மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி பகுதி மின் நுகர்வோர்கள் பயன்பெறத்தக்க வகையில், தற்போது இம்மையம் செயல்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக, கோவை வடக்கு மற்றும் தெற்கு மின் பகிர்மான வட்டங்களுக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதிகளை இம்மையத்துடன் இணைப்பது தொடர்பான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. கோவை மண்டலத்திற்குட்பட்ட ஏனைய நகராட்சி மற்றும் கிராமப் பணிகளுக்கு விரிவுபடுத்துவது தொடர்பான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**5—**

## மின் இணைப்பு

**வினா எண் 18483—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுய நிதித் திட்டங்களின்கீழ் சிறப்புத் தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்றவர்கள் கடந்த ஆண்டுகளில் பணம் செலுத்தாத காரணத்தினால், மின் துண்டிப்பு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுய நிதித் திட்டங்களின்கீழ் மின் இணைப்பு பெற்றவர்கள் தங்களது துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிற்குரிய அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்த சம்மதித்து, மின் துண்டிப்பு செய்யப்பட்டக் காலத்திலிருந்து ஐந்து வருடங்களுக்குள் மறு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தால், மறு மின் இணைப்பு அளிக்கப்படும்.

[2008 மார்ச் 27

6—

## புதிய கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 20061—திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் உள்ள முனியப்பன் தெரு, கார்ப்பரேஷன் காலனி 1, 2, 3, 4, 5-வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் எல்லா இடங்களிலுமே மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக அமைக்கப்பட்டுள்ளன. முனியப்பன் தெரு, கார்ப்பரேஷன் காலனி 1, 2, 3, 4, 5-வது தெருக்களில் புதைவடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின் விநியோக பெட்டி பராமரிப்பு செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆகையால், புதிய புதைவடம் பதிக்க தற்போது கருத்துரு ஏதும் இல்லை.*

7—

## புதிய கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 20095—திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் உள்ள மன்னார்சாமி கோயில் தெரு, ஆண்டியப்பன் தெரு, அரத்தூன் தெரு, வெங்கடாசலம் தெரு, தாண்டவமூர்த்தி தெரு, குமரப்பன் தெரு, ராபின்சன் பூங்கா காலனியில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் எல்லா இடங்களிலுமே மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக அமைக்கப்பட்டுள்ளன.*



2008 மார்ச் 27]

*இப்பகுதிகளில் மேல்நிலை மின்பாதைகள் ஏதுமில்லை, மன்னார்சாமி கோயில் தெரு, ஆண்டியப்பன் தெரு, அரத்தூன் தெரு, வெங்கடாசலம் தெரு, தாண்டவமூர்த்தி தெரு, குமரப்பன் தெரு, ராபின்சன் பூங்கா காலனி ஆகிய இடங்களில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால், புதிய புதைவடம் பதிக்க தற்போது கருத்துரு ஏதும் இல்லை.*

8—

## மின் வசதி

**வினா எண் 24160—திரு. மு.க. பெரியசாமி:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்—*

*(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம்,* கொத்தங்குடி ஊராட்சி, பனங்குடியிலிருந்து நல்லாடை முக்கூட்டு வரையிலும், அகம்பாக்கம் தோப்புத் தெருவிலிருந்து கொத்தங்குடி தெரு வரையிலும் நிலவெளி பள்ளிவாசலிலிருந்து நெய்வாசல் ரோடு வரையிலும், மின் கம்பங்கள் நடப்பட்டு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சி, பனங்குடியிலிருந்து நல்லாடை முக்கூட்டு வரையிலும், அகம்பாக்கம் தோப்புத் தெருவிலிருந்து கொத்தங்குடி தெரு வரையிலும், நிலவெளி பள்ளிவாசலிலிருந்து நெய்வாசல் ரோடு வரையிலுள்ள பகுதிகளுக்குத் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் இதுநாள்வரை பெறப்படவில்லை. மேற்கண்ட பகுதிகளுக்குத் தெரு விளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 மார்ச் 27

9—

## மின் கம்பிகள் மாற்றம்

**வினா எண் 25808—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியிலுள்ள மின் கம்பிகளை மாற்றிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

பள்ளிப்பட்டு தொகுதியில் கண்டறியப்பட்ட 20.54 கி.மீ. பழைய மின் கம்பிகளில், 14.9 கி.மீ. தூரத்திற்கு இதுவரையில் மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள பழைய மின் கம்பிகளை மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10—

## சீரான மின்சாரம்

**வினா எண் 29912—திரு ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, 12-வது வார்டு பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சி, 12-வது வார்டில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

11—

## மின் கம்பிகளை அகற்றுதல்

**வினா எண் 30588—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 27]

கபிலர்மலை உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் செல்லும் மின் கம்பிகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கபிலர்மலை உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் செல்லும் 11 கே.வி. உயர் அழுத்தப் பாதைக்கு அடியில் ஏற்கெனவே கார்டிங் போடப்பட்டுள்ளது. ஆகையால், இந்த மின் பாதையினால் எந்த ஆபத்தும் இல்லை. இருப்பினும், சம்பந்தப்பட்ட பள்ளியிலிருந்து உரிய விண்ணப்பம் பெறப்பட்டால், காப்புத் தொகை வைப்பு நிதி திட்டத்தின்கீழ் (DCW) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கான தொகை செலுத்தப்பட்டால், அந்த மின்கம்பிகளை இடம் மாற்றித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

## சீரான மின்சாரம்

**வினா எண் 31122—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, தோப்புக்கொல்லை கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, தோப்புக்கொல்லை கிராமத்திற்குச் சந்தைப்பேட்டை உயரழுத்த மின்பாதை வழியாக, திம்மராவுத்தன்குப்பம் மின்மாற்றிமூலம் தாழ்வழுத்த மின் விநியோகம் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட மின்மாற்றிகளில் கடைகோடியில் உச்ச வேளை மின்னழுத்தம் அளவீடு செய்ததில் தகுந்த அளவில் உள்ளது.

[2008 மார்ச் 27

**13—**

### மின் தடையைச் சீர் செய்தல்

**வினா எண் 33242—திரு மு.க. பெரியசாமி:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், திருக்காளச்சேரி, எடுத்துக்கட்டி, நல்லாடை, தரங்கம்பாடி பேரூராட்சி, பொறையார் பகுதிகளில் ஏற்படும் மின் தடையைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், திருக்காளச்சேரி, எடுத்துக்கட்டி, நல்லாடை, தரங்கம்பாடி பேரூராட்சி, பொறையார் பகுதிகளில் ஏற்படும் மின் தடையைச் சீர் செய்ய அந்தப் பகுதிகளில் உள்ள மின் பாதைகளின் அருகில் இருந்த மரக்கிளைகள் வெட்டப்பட்டு, மின் தடை ஏற்படாவண்ணம் நிவர்த்தி செய்யப்பட்டு சீரான மின்னோட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

**14—**

### மின் வசதி

**வினா எண் 33486—திரு. து. ரவிக்குமார்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வடக்குவேலிக்குடி ஆதி திராவிடர் தெரு வீடுகளுக்கு இலவச மின் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வடக்குவேலிக்குடி ஆதி திராவிடர் தெரு குடியிருப்பில் மொத்தம்



2008 மார்ச் 27]

உள்ள 43 வீடுகள்/குடிசைகளில் 20 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 23 வீடுகள்/குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன், மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

### சீரான மின்சாரம்

**வினா எண் 33487—திரு எஸ். இராசசேகரன்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குடி தொகுதி, வடகாடு, புதுப்பட்டி, கொத்தமங்கலம், கீரமங்கலம், வெட்டன் விடுதி, மழையூர் பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, வடகாடு, புதுப்பட்டி, கொத்தமங்கலம், கீரமங்கலம், வெட்டன் விடுதி மற்றும் மழையூர் பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கீரமங்கலம் பகுதிக்கு அங்குள்ள 19 மின்மாற்றிகளே போதுமானதாக உள்ளன. மின்பளு அதிகமாகும்போது தேவைப்படின் கூடுதலாக மின்மாற்றிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16—**

### சீரான மின்சாரம்

**வினா எண் 35636—திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை கிராமம், அரசாடிகுப்பம் கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2008 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை வருவாய்க் கிராமத்திற்குட்பட்ட, அரசாடிகுப்பம் கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**17—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 36622—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, புலவர்சேரி, வாகையில் கூடுதலாகத் தெரு விளக்கு அமைத்து தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், புலவர்சேரி கிராமத்தில் 5 எண்ணம் தெரு விளக்குகள் கடந்த 30-7-2007 அன்று ஒளிரவிடப்பட்டுள்ளது. வாகை கிராமத்திற்கு தெரு விளக்குகள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்படும்பட்சத்தில், தெரு விளக்குகள் அமைக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், மேற்கண்ட பகுதிகளுக்கு 110/11 கி.வோ. நெல்முடிக்கரை உபமின் நிலையத்திலிருந்து பழையனூர் கிராமப்புற மின்னூட்டி வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**18—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 36624—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 27]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலச்சொரிக்குளத்தில் மின் கம்பிகளை மாற்றி, கூடுதலாக தெரு விளக்குகள் அமைத்து, தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலச்சொரிக்குளத்தில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் (2006-2007) கீழ் 3 எண்ணம் தெருவிளக்குகள் 30-7-2007 அன்று ஒளிரவிடப்பட்டுள்ளன. மேற்கண்ட கிராமத்தில் மொத்தம் உள்ள 3.9 கி.மீ. ஏ.சி.எஸ்.ஆர். 7/2.11 எம்.எம். தாழ்வழுத்த மின் கம்பிகளில் பழுதான 0.5 கி.மீ. மின் கம்பிகள் ஏ.சி.எஸ்.ஆர். 7/2.59 எம்.எம். மின் கம்பிகளாக மாற்றி அமைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**19—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 36635—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம், வில்லியரேந்தல், செல்லப்பனேந்தல், பச்சேரி பகுதி, நயினார் பேட்டையில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் கிராமத்திற்கு 24 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. வில்லியரேந்தல், செல்லப்பனேந்தல், நயினார் பேட்டை மற்றும் பச்சேரி பகுதிக்கு

[2008 மார்ச் 27

நாளொன்றுக்கு 14 மணி நேரம் மும்முனை மின்சாரமும், 10 மணி நேரம் இருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது. மும்முனை மின்னோட்டத்திலிருந்து இருமுனை மின்னோட்டத்திற்கு மாற்றும் நேரங்கள் தவிர, மற்ற நேரங்களில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**20—**

**சீரான மின்சாரம்**

**வினா எண் 38489—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், துலுக்கப்பட்டி கிராமத்திற்குக் கோட்டை கருங்குளம் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், துலுக்கப்பட்டி கிராமத்திற்குக் கோட்டை கருங்குளம் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மினசாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**21—**

**ஊராட்சி மன்றம்**

**வினா எண் 5485—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூட்டப்பனையைத் தலைமையாகக்கொண்டு ஊராட்சி மன்றம் அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ன்படி, உள்ளாட்சி அமைப்புகளின் நிலையை



2008 மார்ச் 27]

உயர்த்துதல்/குறைத்தல், உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்த்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் / பிரித்தல் தொடர்பாக பொது குறை கேட்கும் கூட்டத்தை நடத்த வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது மக்களிடம் கருத்துகளைக் கேட்கும் பணிகளைத் தொடங்கி, வரைவுப் பரிந்துரைகளைத் தயார் செய்து, அரசுக்கு அனுப்பி வைக்கலாம். ஆனால் மத்திய அரசின் தொகுதி சீரமைப்புக் குழு (Delimitation Commission) தன் இறுதி அறிவிக்கை வெளியிட்ட பின்னர்தான், தமிழக அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளின்மீது இறுதி ஆணை வெளியிடும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மூன்று கூட்டங்களைக் கூட்டி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்குத் தனது பரிந்துரைகளை அனுப்பியுள்ளார். அது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**22—**

**மயான வசதி**

**வினா எண் 12600—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் வட்டம், அழகுசமுத்திரம் ஊராட்சி, சேலம் இரும்பாலை அருகில் மயான வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அழகுசமுத்திரம் ஊராட்சி, சேலம் இரும்பாலை அருகில் மயான வசதி 2007-2008 ஆம் நிதியாண்டில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை எடுத்துச் செயல்படுத்தப்படும்.

[2008 மார்ச் 27

**23—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 5781—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, நரசிங்கபுரம் பேரூராட்சி, புதுகடையம்பட்டி காந்திபுரம் பகுதியிலும் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆத்தூர் நகரக் கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அம்மன் நகர் அங்காடியிலிருந்து காந்திபுரம், சத்யா நகர் மற்றும் ஏரிக்கரை மேடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்ப அட்டைகளைப் பிரித்து, காந்திபுரத்தில் புதியதாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க 10-3-2007 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

**24—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 6407—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், சௌடேகுப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடையும், ஏ.கே. மோட்டூர் ஊராட்சி, புதுப்பூங்குளம் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடையும் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், சௌடேகுப்பம் கிராமத்தில், 345 குடும்ப அட்டைகளைக்கொண்டு



2008 மார்ச் 27]

ஒரு பகுதி நேரக் கடையும், ஏ.கே.மோட்டூர் ஊராட்சி, புதுப்பூங்குளம் கிராமத்தில் 502 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு பகுதிநேரக் கடையும் செயல்பட்டுவரும் நிலையில், மேற்படி இரண்டு கிராமங்களிலும் புதிய பகுதிநேரக் கடை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**25—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 6423—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், எடங்கணசாலை, இ.காட்டூர் பகுதிக்குப் புதிய நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், எடங்கணசாலை பகுதியில் செயல்படும் மூன்று நியாய விலைக் கடைகளிலிருந்து 563 குடும்ப அட்டைகளைப் பிரித்து, இ.காட்டூர் பகுதியில் ஒரு புதிய முழுநேர நியாய விலைக் கடை அமைக்க ஆணை ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**26—**

## புதிய கட்டடம்

**வினா எண் 6538—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி ஊராட்சி, மட்டம்பட்டியில் உள்ள பொது விநியோகக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி ஊராட்சியில் மட்டம்பட்டி கிராமத்தில் சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலையின் செயல்பாட்டில் மட்டம்பட்டி நியாய விலைக் கடை 468 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு, மட்டம்பட்டி பகுதியில் எருமைப்பட்டி ஊராட்சிக்குச் சொந்தமான நிலத்தில் கட்டடம் கட்ட போதுமான இடம் ஒதுக்கிக் கொடுப்பதாக ஊராட்சி அலுவலரின் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நிலம் தொடர்புடைய ஆவணங்களுடன், நியாய விலைக் கடை நடத்தும் சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகச்சாலைக்கு ஒப்படைக்கப்படும்போது, இக்கோரிக்கை ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டு, இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**27—**

**புதிய பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 6675—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், எசையனூர் ஊராட்சி, மல்லிகாபுரம் கிராமத்திற்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், எசையனூர் ஊராட்சி, மல்லிகாபுரத்தில் உள்ள 106 குடும்ப அட்டைகள் இக்கிராமத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில், மொத்தம் 496 குடும்ப அட்டைகளைக் கொண்டு, சக்கரமல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் கீழ்எசையனூர் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. எசையனூர் நியாய விலைக் கடையிலிருந்து மல்லிகாபுரம் கிராமத்திலுள்ள 106 குடும்ப அட்டைகளைப் பிரிக்கும் பட்சத்தில், எசையனூர் கடையில் பிரிவினைக்குப் பின்னர் 390 குடும்ப அட்டைகளே இருக்கும். எனவே, தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி மல்லிகாபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.





**28—**

**புதிய பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 6793—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. தாழையூர் ஊராட்சி, மாங்குட்டப்பட்டி, பழையூர்-மாங்குட்டப்பட்டி, குறவன் காட்டனூர் ஆகிய பகுதி மக்களுக்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மகுடஞ்சாவடி வட்டாரத்தில் வைகுந்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 572 குடும்ப அட்டைகளுடன் அ. தாழையூர் என்ற இடத்தில் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட முழுநேர நியாய விலைக் கடையின் 572 குடும்ப அட்டைகளில், மாங்குட்டப்பட்டியில் 70 குடும்ப அட்டைகளும், பழையூர்-மாங்குட்டப்பட்டியில் 26 குடும்ப அட்டைகளும், மாங்குட்டபட்டி குறவன் காட்டானூரில் 30 குடும்ப அட்டைகளும் அடங்கியுள்ளது. மேலும், அ. தாழையூர் நியாய விலைக் கடைக்கும், பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் இடத்திற்கும் 1 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. மேலும், பகுதிநேரக் கடை அமைப்பதற்கு அரசால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 1.5 கிலோ மீட்டர் இருக்கவேண்டும் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதிநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், இந்நேர்வில், பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

[2008 மார்ச் 27

**29—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 8239—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சப்பள்ளி கிராமம், அய்யம்பாளையத்தில் ஒரு நியாய விலைக் கடையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகா, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் கச்சப்பள்ளி நியாய விலைக் கடையுடன் மொத்தம் 1,035 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனில் அய்யம்பாளையம் பகுதியில் உள்ள 224 குடும்ப அட்டைகளும், கொடைக்காரன் வளவு பகுதியில் உள்ள 129 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

அய்யம்பாளையம் பகுதிக்கும், கச்சப்பள்ளி நியாய விலைக் கடைக்கும் சுமார் 1.5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. ஆனால், இப்பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க இலவசமாகக் கட்டடம் தர யாரும் முன்வரவில்லை. இந்நிலையில் அய்யம்பாளையம் பகுதிக்கு மிக அருகில் உள்ள கொடைக்காரன் வளவு என்ற இடத்தில் இலவசமாகக் கட்டடம் தர திரு. குப்புசாமி என்பவர் ஒப்புக் கொண்டதால், கொடைக்காரன் வளவு பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தற்போது அய்யம்பாளையம் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் பகுதியில் உள்ள குடும்ப அட்டைகளைக் கொடைக்காரன் வளவு பகுதியில் புதிதாக அமைய உள்ள கடைக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டாம் என்றும், தாங்கள் ஏற்கெனவே பொருட்கள் பெற்று வரும் கச்சப்பள்ளி நியாய விலைக் கடையிலேயே தொடர்ந்து பொருட்கள் பெற்றுக் கொள்வதாகவும், தங்கள் பகுதியில் தனி நியாய விலைக் கடை வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், அய்யம்பாளையம் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.



2008 மார்ச் 27]

**30—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 10302—திரு. கோ. அரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் சூரகாபுரத்தில் நியாய விலைக் கடை ஒன்றை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, வயலூர் நியாய விலைக் கடையில் மொத்தம் 49 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இதில் சூரகாபுரம் பகுதியைச் சேர்ந்த 142 குடும்ப அட்டைகளும் அடங்கும். எனவே, பகுதிநேர கடை பிரித்த பின்னர், தாய்க் கடையில் 349 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். வேறு சிறப்புக் காரணங்கள் எதுவும் இல்லாத காரணத்தினால், சூரகாபுரம் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைத்திட சாத்தியக் கூறுகள் இல்லை.

**31—**

## கட்டடம் கட்டுதல்

**வினா எண் 10425—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, மஞ்சமேடு கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, மஞ்சமேடு கிராமத்தில் மஞ்சமேடு பகுதிநேர நியாய விலைக் கடை 401 குடும்ப அட்டைகளுடன் தாய்க் கடை அரசம்பட்டி முழுநேரக் கடையுடன், அரசம்பட்டி தொடக்க வேளாண்மை

[2008 மார்ச் 27

கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பஞ்சாயத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகையின்றி இலவசமாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மஞ்சமேடு பகுதிநேரக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**32—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 10713—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, ஆட்டான்பள்ளி ஊராட்சி, மாரவாடி, மசவுளூர் ஆகிய கிராமங்களுக்கு நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, ஆட்டான்பள்ளி ஊராட்சி, மாரவாடி கிராமத்தில் ஏற்கெனவே 228 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதேபோன்று காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மசளூர் கிராமத்தில் 135 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

**33—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 13685—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, பாளையம் மற்றும் மதகேளி கிராமங்களுக்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பாலக்கோடு வட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியின் கீழ்வரும், பஞ்சப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பாளையம் மகளிர் நியாய விலைக் கடை 738 குடும்ப அட்டைகளுடன் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இது ஒரு முழுநேர நியாய விலைக் கடையாகும். எனவே, பாளையம் கிராமத்தில் மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் அவசியம் எழவில்லை. மேலும், காவேரிப்பட்டினம் தொகுதி ஜிட்டாண்ட அள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் மதகேளி கிராமத்தில் 282 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு முழுநேர நியாய விலைக் கடை இலவசக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, மதகேளி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்குவதற்கான அவசியம் எழவில்லை.

**34—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 14095—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சி, காட்டுப்பாளையம் பகுதியில் இயங்கிவரும் பொது விநியோகக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சி, காட்டுப்பாளையம் பகுதியில் இயங்கிவரும் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடை 219 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாக குருக்கப்பட்டி லட்சுமி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் காட்டுப்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

[2008 மார்ச் 27

**35—**

**நியாய விலைக் கடைகள்**

**வினா எண் 16210—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 147, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 24-8-2006-ல், ஏற்கெனவே உள்ள அரசு விதிகளைத் தளர்த்தி, பகுதிநேரக் கடை அமைக்க 2 நியாய விலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் 1.5 கி.மீ. இருக்க வேண்டும் என்றும், பகுதி நேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும் என்றும், அரசு ஆணையிட்டுள்ளது. இதனடிப்படையில், தேவைப்படும் இடங்களில் பகுதி நேரக் கடைகள் அமைக்க தகுதி இனங்களில் பகுதி நேரக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**36—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 16820—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காமலாபுரம் ஊராட்சி, கிழக்கத்திகாடுவளவில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காமலாபுரம் கிராமம், கிழக்கத்திகாட்டுவளவு பகுதியில் மொத்தம் 174 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். அவர்களில் 46 குடும்ப அட்டைதாரர்கள் காமலாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் காமலாபுரம்-1 நியாய விலைக் கடையிலும், 8 குடும்ப அட்டைதாரர்கள் நாரணம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் நாரணம்பாளையம் நியாய விலைக் கடையிலும், 120 குடும்ப அட்டைதாரர்கள் மைலம்பாளையம் நியாய விலைக் கடையிலும் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். மேற்படி நியாய விலைக் கடைகள் கிழக்கத்திக்காடுவளவு பகுதியிலிருந்து 1½ கிலோ மீட்டருக்கு மேல் தூரம் உள்ளது. எனினும் அப்பகுதியில் நியாய விலைக் கடை நடத்துவதற்குப் போதுமான இடம் உள்ள கட்டடத்தை அளிக்க யாரும் முன்வரவில்லை. எனவே, கிழக்கத்திகாடுவளவு பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**37—**

**கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 16821—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி கிராமம், கெண்டபுரியான்வலசு பகுதி நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி கிராமம், கெண்டபுரியான்வலசு பகுதியில் 779 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இக்குடும்ப அட்டைதாரர்கள், மாவட்ட மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்பட்டு வரும் ஆத்துக்காடு நியாய விலைக் கடையிலிருந்து

[2008 மார்ச் 27

அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இந்நியாய விலைக் கடை அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இக்கட்டடம் நெடுஞ்சாலைத் துறையின் சாலை விரிவுபடுத்துதல் காரணமாக அகற்றப்படும் நிலையில் உள்ளதால், ஆத்துக்காடு நியாய விலைக் கடை தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆத்துக்காடு நியாயவிலைக் கடைக்கும், கெண்டபுரியான்வலசு பகுதிக்கும் இடையே ½ கிலோ மீட்டர் தூரம் உள்ளதால், ஒரு பகுதிநேர கடை அமைப்பதற்கு வழிவகை இல்லை. எனவே, கெண்டபுரியான்வலசு பகுதிக்கென தனியே அங்காடி செயல்படாத நிலையில் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

**38—**

## புதிய நியாய விலைக் கடை

**வினா எண் 17931—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், உங்காரண அள்ளி ஊராட்சி, ஏமக்குட்டியூருக்குப் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டவும், வெண்ணாம்பட்டி, எட்டிமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளுக்குப் புதிய நியாய விலைக் கடை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எட்டிமரத்துப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 241 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வரும் ஏமக்குட்டியூர் பகுதிநேர கடை (தாய் கடையின் பெயர் உங்காரண அள்ளி) தற்போது இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் நிலையில், இதற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், இலக்கியம்பட்டி ஊராட்சி, இலக்கியம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் 1,699 குடும்ப அட்டைகளைக்கொண்டு ஒரு முழுநேர நியாய விலைக் கடை வெண்ணாம்பட்டியில், ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், வெண்ணாம்பட்டியில் மீண்டும் ஒரு புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2008 மார்ச் 27]

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், எட்டிமரத்துப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் எட்டிமரத்துப்பட்டியில் 755 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு முழுநேர நியாய விலைக் கடை சங்கக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் நிலையில் இக்கிராமத்தில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

**39—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 25214—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, எல்லைகுட்டையூர், புக்கம்பட்டி ஊராட்சி நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில் இயங்கிவரும் குட்டப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் 577 குடும்ப அட்டைகளைக்கொண்ட கணக்குப்பட்டி நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இது ஒரு முழுநேர நியாய விலைக் கடையாகும்.

எல்லைகுட்டையூர் பகுதியில் உள்ள 112 குடும்ப அட்டைகளும் கணக்குப்பட்டி நியாய விலைக் கடையில் உள்ளடங்கியதாகும். எல்லைக்குட்டையூர் பகுதியில் 112 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், கணக்குப்பட்டி நியாய விலைக் கடைக்கும், எல்லைக்குட்டையூர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கிலோ மீட்டர் மட்டும் இருப்பதாலும், அரசின் விதிமுறைகளின்படி எல்லைக்குட்டையூர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க வழிவகையில்லை.

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில் புக்கம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில்

[2008 மார்ச் 27

புக்கம்பட்டி நியாய விலைக் கடை கீழ்க்கண்ட விவரப்படி 1,160 குடும்ப அட்டைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இது ஒரு முழுநேர நியாய விலைக் கடையாகும்.

| வ.எண் | பகுதிகளின் பெயர் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புக்கம்பட்டி | 691 |
| 2 | புக்கம்பட்டி காலனி | 99 |
| 3 | செங்கானவளவு | 50 |
| 4 | கடுகட்டானூர் | 97 |
| 5 | மேட்டானூர் | 21 |
| 6 | கட்டையன்வளவு | 79 |
| 7 | மணியக்காரனூர் | 64 |
| 8 | பூசாரிவளவு | 24 |
| 9 | கொத்துகட்டியூர் | 35 |
| | **மொத்தம்** | **1,160** |

புக்கம்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து மேற்குறிப்பிட்ட பகுதிகள் யாவும் 1 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளன. மேற்படி பகுதிகளில் குறைவான குடும்ப அட்டைகள் உள்ள நிலையிலும், தற்பொழுது செயல்படும் நியாய விலைக் கடையிலிருந்து இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கும் இடையே உள்ள தூரம் 1.5 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளதாலும், மேற்படி நியாய விலைக் கடையை இரண்டாக பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**40—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 26068—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ஊராட்சி, புனித செபஸ்தியார் கோவில் தெரு, மரியசிங்கபுரம், கட்டையன்தோட்டம் பகுதிக்கு நியாய விலைக் கடை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் வடக்கன்குளம்-2 நியாய விலைக் கடையிலிருந்து, அந்தோணியார் நகர் பகுதியிலுள்ள 87 குடும்ப அட்டைகளும், கட்டையன்தோட்டம் 109 குடும்ப அட்டைகளும், செபஸ்திரா் கோவில் தெரு, 25 குடும்ப அட்டைகளும் மரியசிங்கபுரம் 62 குடும்ப அட்டைகளும், ஆக மொத்தம் 283 குடும்ப அட்டைகளுடன் அந்தோணியார் நகர்ப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை 10-6-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

**41—**

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 27469—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி ஊராட்சி, சாந்துவார்பட்டி, ரெங்கநாயக்கன்பட்டி ஆகிய இரண்டு ஊர்களின் குடும்ப அட்டைகளை இணைத்து சாந்துவார்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி ஊராட்சி, சாந்துவார்பட்டியில் 150 குடும்ப அட்டைகளும், ரெங்கநாயக்கன்பட்டியில் 15 குடும்ப அட்டைகளும் உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள் 1.00 கி.மீ. தூரத்திலுள்ள, கவரப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். கவரப்பட்டி நியாய விலைக் கடை 610 குடும்ப அட்டைகளுடன் பாலவிடுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் சாந்துவார்பட்டி கிராமத்திற்கும், கவரப்பட்டி நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம்

[2008 மார்ச் 27

1.5 கி.மீ.-க்கும் குறைவாக உள்ளதால், அரசு நிபந்தனைகளின்படி, சாந்துவார்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**42—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 27994—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, மலையடிப்பட்டி நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, மலையடிப்பட்டி கிராமத்திற்குத் தனியாக நியாய விலைக் கடை ஏதும் இல்லை. மலையடிப்பட்டி கிராமத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் குட்டப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள கணக்குப்பட்டி நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். கணக்குப்பட்டி நியாய விலைக் கடை 589 குடும்ப அட்டைகளுடன் அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்படுகிறது. எனவே, மலையடிப்பட்டி கிராமத்தில் தனியாக நியாய விலைக் கடை இல்லை என்பதாலும், இக்கிராமத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கணக்குப்பட்டி நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருவதாலும், மலையடிப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டுதல் என்ற வினா எழாது.

**43—**

**தூர் வாருதல்**

**வினா எண் 2194—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 27]

கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பெரிய குளத்திற்கு வெள்ள காலத்தில் நீர் வரும்போது, அந்த நீர் உப்பிடமங்கலம் பெரிய குளத்திற்குச் செல்வதற்கும், அங்கேயிருந்து வீரராக்கியம் குளத்திற்குச் செல்வதற்கு ஏதுவாகவும், அந்தப் பகுதியில் வாய்க்கால் தூர் வாரப்பட்டு செப்பனிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கரூர் மாவட்டம், வெள்ளியணை ஏரியிலிருந்து உப்பிடமங்கலம் ஏரிக்குச் செல்லும் வாய்க்கால் மற்றும் உப்பிடமங்கலம் ஏரியிலிருந்து வீரராக்கியம் ஏரிக்குச் செல்லும் வாய்க்கால் ஆகியவை ரூ.7.5.31 இலட்சம் செலவினத்தில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தூர் வாரி முடிக்கப்பட்டது.

**44—**

**கால்வாய் தூர் வாருதல்**

**வினா எண் 11293—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, நிலையூர் கால்வாயைத் தூர் வாரி சீரமைத்து சோளங்குறுனி, நெடுங்குளம், விராதனூர் கண்மாய் பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

நிலையூர் நீட்டிப்பு கால்வாய் திட்டம், மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களைச் சார்ந்த 94 கண்மாய்கள் மூலமாக 9947.62 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியளிப்பதற்கு உருவாக்கிய திட்டமாகும். இத்திட்டத்தில் சோளங்குறுனி, நெடுங்குளம் மற்றும் விராதனூர் கண்மாய்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் தற்போது முழுமையாக முடிவடைந்துள்ளன. வைகை நதியில்

வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் உபரியான நீர் நிலையூர் நீட்டிப்பு கால்வாய்மூலம் வழங்கும்போது சோளங்குறுனி, நெடுங்குளம் மற்றும் விராதனூர் கண்மாய்கள் பாசன வசதி பெறும்.

**45—**

## மழை நீரைத் தேக்கி வைத்தல்

**வினா எண் 37711—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காமலாபுரம் கிராமத்தில் பெரியேரி, சின்ன ஏரி இரண்டையும் ஒரே ஏரியாக மாற்றி, ஏற்காடு மலை நீரைத் தேக்கி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, காமலாபுரம் கிராமத்தில் உள்ள பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரியினை இணைப்பதால் எந்தவிதக் கூடுதல் பலனும் இல்லை. ஏற்கெனவே உள்ள பெரியேரியின் பதிவு பெற்ற பாசன நிலங்கள் நீரில் மூழ்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இத்திட்டம் சாத்தியமானதாக இல்லை.

**46—**

## அலுவலகக் கட்டடத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 38241—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பொதுப் பணித் துறை அலுவலகக் கட்டடத்தைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பொதுப் பணித் துறைக் கட்டடத்தைச் செப்பனிடும் பணி நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**47—**

## கட்டட வசதி

**வினா எண் 36184—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் கூடுதல் கட்டட வசதி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

நாகர்கோவில் அரசு தொழில் நுட்பக் கல்லூரியில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மேற்கண்ட பணிகளுக்கு ரூ.40 இலட்சம் 2007-2008 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்பட்டது. மீதமுள்ள தொகையான ரூ.60 இலட்சம் வரும் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்படும்.

**48—**

## தகவல் தொழில்நுட்பப் பயிற்சி

**வினா எண் 40130—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் படித்த இளைஞர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் பயிலகங்களில் படிக்கும் மாணவர்களுக்குப் பாடத்துடன் போதிய தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை தங்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியைத் தனியார் நிறுவனங்கள்மூலமே பெற இயலும். மானாமதுரை தொகுதியில் வாழும் படித்த இளைஞர்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியை தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின்மூலம் அளிக்க இயலாது.

*(ஆ)* எழவில்லை.

**49—**

## போக்குவரத்திற்கு இடையூறு

**வினா எண் 9033—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் கும்பகோணம் சாலையில் போக்குவரத்திற்கு இரு பக்கமும் இடையூறாக லாரிகள் நிறுத்தப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டி நகர எல்லைக்குட்பட்ட சென்னை-கும்பகோணம் சாலை இருபக்கமும் லாரி புக்கிங் அலுவலகங்களும், மோட்டார் வாகனப் பணிமனைகளும், உணவகங்களும் உள்ளன. விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு, மத்தியில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. சென்னை - கும்பகோணம் சாலையில் லாரி போன்ற வாகனங்களை ஓட்டுநர்கள் நிறுத்தி சாலைப் போக்குவரத்திற்கு இடையூறு செய்து வருவதால், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்குத் தெற்குப் பகுதியில் பண்ருட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஒரு ஏக்கர்



2008 மார்ச் 27]

பரப்புள்ள இடத்தை தேர்வு செய்து திரு. இராஜேந்திரன் தமிழ்நாடு தனியார் லாரி போக்குவரத்து உரிமையாளர் சங்கத் தலைவரின் மேற்பார்வையில் ஒரு வாகன நிறுத்த இடம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம், பண்ருட்டி நகரில் சென்னை - கும்பகோணம் சாலையில் வாகனங்களை நிறுத்தி சாலைப் போக்குவரத்திற்கு இடையூறு செய்யாத அளவிற்குக் காவல் துறை போக்குவரத்தை சரிசெய்து வருகிறது. இருப்பினும், வாகன நிறுத்த இடம் தெரியாத ஒரு சில ஓட்டுநர்கள் - சாலையோரத்தில் தங்களது வாகனங்களை நிறுத்தி இடையூறு செய்ததால், அவர்கள்மீது இவ்வாண்டில் இதுவரை 25 வழக்குகள் பதியப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கைகளால் மேற்கண்ட சாலை விதிமீறல் குற்றங்கள் குறைந்து வருகின்றன. மேலும், போதிய போக்குவரத்து காவலர்கள் பணியமர்த்தப்பட்டு ஒழுங்கான சாலைப் போக்குவரத்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**50—**

## வேகத்தடை அமைத்தல்

**வினா எண் 9258—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, போத்தனூர், அண்ணா நகர் ஏ 3 ரவீஸ் நர்சரி பள்ளி அருகில் வேகத்தடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதி சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி பெற்று ரவீஸ் நர்சரி பள்ளி, அண்ணா நகர், போத்தனூர் அருகில் வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது,

**51—**

## நகரப் பேருந்து இயக்கம்

**வினா எண் 9549—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 27

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், ஒன்றியத்திலுள்ள காஞ்சிரங்குளம் கிராமத்திற்கு திருப்புவனத்திலிருந்து நயினார்பேட்டை, மேலராங்கியன், எஸ்.நாங்கூர், பறையன்குளம், செங்குளம் முக்குடி, எருக்களை, வெள்ளூர் ஆகிய கிராமங்களின் வழியாக ஒரு நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தடத்தின் பகுதிகளான திருப்புவனம்—நயினார்பேட்டை, மேலராங்கியம், எஸ்.நாங்கூர், பறையன்குளம், செங்குளம் ஆகிய ஊர்களுக்கு மதுரையிலிருந்தும், திருப்புவனத்திலிருந்தும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு போதிய அளவு போக்குவரத்து வசதிகள் உள்ளன. எருக்களைவெள்ளூர், காஞ்சரங்குளம், முக்குடி ஆகிய கிராமங்கள் மதுரையிலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகள்மூலம் போக்குவரத்து வசதிகள் பெற்றவை. மேற்குறிப்பிட்டவாறு கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட தடத்தின் அனைத்துப் பகுதிகளும் ஏற்கெனவே போதுமான பேருந்து வசதிகள் பெற்றுள்ள கிராமங்கள் ஆகும்.

**52—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 9566—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை தெப்பக்குளத்திலிருந்து மார்நாடு வரை வரும் அரசு நகரப் பேருந்தை தஞ்சாக்கூர் வரை நீட்டிப்பு செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில், தஞ்சாக்கூருக்கு மதுரையிலிருந்து நேரடி பேருந்து வசதி



2008 மார்ச் 27]

செய்யும் பொருட்டு பெரியார் நிலையம்—தஞ்சாக்கூர் வழி சிலைமான், திருப்புவனம், திருப்பாச்சேத்தி என 4 தனி நடைகள் பேருந்து தற்போது இயக்கப்பட்டு வருகிறது.

**53—**

## போக்குவரத்து சிக்னல்

**வினா எண் 10172—திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டை, அண்ணா சாலையில் மாநகரப் பேருந்து நிறுத்தம் அருகில் போக்குவரத்து சிக்னல் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சைதாப்பேட்டை அண்ணா சாலையில் விரிவானதும், பெரியதுமான மாநகரப் பேருந்து நிறுத்தம் தாடண்டர் நகர் அருகில் உள்ளது. அதன் அருகே போக்குவரத்து சமிஞ்ஞை பாதசாரிகள் கடக்க அமைக்கப்பட்டு சீராக இயங்கி வருகிறது. மேலும், சைதாப்பேட்டை அண்ணா சாலையில் மற்றொரு பேருந்து நிலையம் உள்ளது. அந்த இடம் சற்று வளைவாக உள்ளதால், போக்குவரத்து சமிஞ்ஞை அமைக்க வாய்ப்பில்லை. அதற்குப் பதிலாக பாதசாரிகள் சாலையைக் கடக்க பெலிகான் சமிஞ்ஞை (Peligan Signal) ஒன்று அமைப்பது குறித்து ஆய்வில் உள்ளது. மேலும், அவ்விடத்தில் பாதசாரிகள் சாலையைக் கடக்க சுரங்க நடைபாதை உள்ளது.

**54—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 21241—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து மேலப்பிடாவூர் வழியாக தாயமங்கலம் வரை மாலை 7 மணிக்கு கூடுதலாக ஒரு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மேலப்பிடாவூர் வழியாக தாயமங்கலத்திற்குத் தற்போது 18-45 மணிக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானதாகும்.*

**55—**

## மகளிர் பேருந்து

**வினா எண் 21242—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை காலை 8-30 மணிக்கும், மாலை 5-00 மணிக்கும் மகளிர் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு அரசு பேருந்து 64 நடைகளும், தனியார் பேருந்து 11 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாகவே உள்ளது. பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும்போது தேவையின் அடிப்படையில் மகளிர் பேருந்து இயக்க ஆவன செய்யப்படும்.*

**56—**

## நிறுத்தப்பட்ட பேருந்துகள்

**வினா எண் 21277—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2008 மார்ச் 27]

*கலசப்பாக்கம் தொகுதி, போளூரிலிருந்து கோடிகுப்பம் வரை இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்து, வில்வராணி கிராமத்திற்கு இயக்கி நிறுத்தப்பட்ட 249 ஆம் எண் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*போளூர்—காஞ்சி (வழி) கலசப்பாக்கம், பழங்கோயில் கீழ்பொத்தரை, கோடிகுப்பம் என ஒரு நகரப் பேருந்து தினசரி 4 நடைகள், 23-1-2007 முதல் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றது. மாவட்டத் தடம் எண் 249 வில்வராணி—சென்னை என தினசரி 2 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.*

**57—**

## கூடுதல் நகரப் பேருந்து

**வினா எண் 21987—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரையிலிருந்து தாயமங்கலம், ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்குக் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தாயமங்கலத்திற்கு ஏற்கெனவே நகரப் பேருந்து 4 நடைகளும், புறநகர்ப் பேருந்து 4 நடைகளும், தனியார் பேருந்து 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு மிகக் குறைவாகவே உள்ளது. பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும்போது, தேவையின் அடிப்படையில் கூடுதல் பேருந்து இயக்க ஆவன செய்யப்படும்.*

[2008 மார்ச் 27

58—

## விபத்துகளைத் தடுத்தல்

**வினா எண் 23075—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-திருக்கழுக்குன்றம் சாலை இணைப்பில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க அங்கு அறிவிப்பு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு-திருக்கழுக்குன்றம் சாலை இணைப்பு இடமான இராட்டின கிணறு பகுதியில் வாகனங்கள் மெதுவான வேகத்தில் சென்றால்தான் திரும்பமுடியும் நிலை உள்ளது. அங்கு 2005 ஆம் ஆண்டில் ஒரு விபத்து வழக்கும், 2006 ஆம் ஆண்டில் 3 விபத்து வழக்குகளும் பதிவாகி உள்ளன. மேற்படி இடத்தில் போக்குவரத்து காவலர் தினமும் பணி நியமிக்கப்பட்டு, போக்குவரத்து சீர் செய்து வரப்படுகிறது.

மேற்படி இடத்தில் விபத்து எச்சரிக்கை "அறிவிப்பு விளக்குகள் அமைப்பது" குறித்து கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) செங்கற்பட்டு அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோட்ட பொறியாளர் அவர்கள், விரைவில் எச்சரிக்கை அறிவிப்புகள் (Reflector Caution Board) அங்கு நிறுவப்படும் எனத் தகவல் தெரிவித்துள்ளார்.

59—

## பேருந்து வசதி

**வினா எண் 26827—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 27]

(அ) மதுரையிலிருந்து விருதுநகர் வழியாக திருநெல்வேலி, ராஜபாளையம், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்குப் புறவழிச் சாலை வழியாக செல்லும் பேருந்துகள் விருதுநகருக்குள் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து விருதுநகர், சிவகாசி, கோவில்பட்டி, பாபநாசம், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் விருதுநகருக்குள் சென்று வர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் தற்போது விருதுநகருக்குள் சென்று வருகின்றன.

60—

## கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 29061—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, சீர்காழி ஒன்றியம், நாங்கூர், மயிலாடுதுறை, கதிராமங்கலம், கொண்டத்தூர், வைத்தியநாதபுரம், பாகசாலை, தேத்தாக்குடி. அண்ணன்கோவில், நாங்கூர், மங்கைமடம், அன்னப்புன்பேட்டை, கீழமூவர்க்கரை வரை கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை - கீழமூவர்க்கரை (வழி) கதிராமங்கலம், கொண்டத்தூர், வைத்தியநாதபுரம், பாகசாலை,

[2008 மார்ச் 27

தேத்தாக்குடி, அண்ணங்கோவில், நாங்கூர், மங்கைமடம், அன்னப்பன்பேட்டை தடத்தின் நீளம் 43 கி.மீ. ஆகும். கோரிக்கை தடம் புதிய மற்றும் சுற்று வழித்தடமாகும். எனினும், கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதி பகுதியாக கீழ்க்கண்டவாறு கழகப் பேருந்து வசதி உள்ளது.

| தடப்பகுதி | தட நீளம் (கி.மீ.) | இயக்கப்படும் நடைகள் விவரம் | | |
|---|---|---|---|---|
| | | கழகம் | தனியார் | கூடுதல் |
| மயிலாடுதுறை-கதிராமங்கலம் | 14 | 292 | 198 | 490 |
| கதிராமங்கலம்-அண்ணங்கோவில் (வழி) கொண்டத்தூர், பாகசாலை. | 13 | 5 | — | 5 |
| அண்ணங்கோவில்-கீழமூவர்க்கரை (வழி) நாங்கூர், மங்கைமடம். | 16 | 14 | — | 14 |
| கூடுதல் | 43 | 311 | 198 | 509 |

**61—**

## பேருந்து வசதி

**வினா எண் 32804—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெட்டன் விடுதியிலிருந்து புதுக்கோட்டைக்குக் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் அரசு நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் 25 நடைகளும், தனியார் நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் 62 நடைகளும் இயக்கப்பட்டு வருவதால், தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.



2008 மார்ச் 27]

**62—**

## உறுப்பினர் அடையாள அட்டை

**வினா எண் 34120—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் வட்டம், பெரியேரிப்பட்டி, சிக்கம்பட்டி கிராம மக்களுக்கு குறு-சிறு விவசாய அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஓமலூர் வட்டம், பெரியேரிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின்கீழ் குறு மற்றும் சிறு விவசாயிகள் திட்ட உறுப்பினராக தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு 1,463 உறுப்பினர் அடையாள அட்டைகள் அச்சடித்து வரப்பெற்று, 27 தகுதியற்ற அட்டைகள் போக, மீதம் 1,436 அட்டைகளும், சிக்கம்பட்டி கிராமத்தில் 646 அட்டைகள் வரப்பெற்று, 646 அட்டைகளும் முழுமையாகவும் வழங்கப்பட்டு விட்டன.

**63—**

## சுற்றுலாத் தலங்கள்

**வினா எண் 41924—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம், திருக்கச்சூர், சிங்கப்பெருமாள் கோவில், செட்டிபுண்ணியம் ஆகிய பகுதிகளைச் சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம், திருக்கச்சூர், சிங்கப்பெருமாள் கோவில், செட்டிபுண்ணியம் ஆகிய பகுதிகளைச் சுற்றுலாத் தலங்களாக அமைத்திடச் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. பொதுவாக அரசு எந்த இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் பழக்கம் இல்லை.

**64—**

**விலைப் பட்டியல்**

**வினா எண் 22012—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்துப் பலசரக்குக் கடைகளிலும் விலைப் பட்டியலைக் கட்டாயமாக எழுதி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) 1977 ஆம் ஆண்டைய தமிழ்நாடு இருப்பு மற்றும் விலை காட்சிப்படுத்தல் மற்றும் கணக்குப் பராமரித்தல் ஆணையின்படி, அனைத்து பலசரக்குக் கடைகளிலும் பொருட்களின் விலைப் பட்டியலைக் கட்டாயமாக எழுதி காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) மேற்படி சட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

**65—**

**நெல் கொள்முதல்**

**வினா எண் 22387—திரு. கி. ஆறுமுகம்**: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 27]

செங்கல்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூர், நத்தம் ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நிறுவ அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி, எங்கெங்கு நெல் கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளதோ, அவ்விடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில், தாமல், தென்னேரி, திருமுக்கூடல், மொரப்பாக்கம், செய்யூர், திருப்புலிவனம், வல்லம், கொத்திமங்கலம் ஆகிய கிராமங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களும் மற்றும் திருப்பெரும்புதூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வட்டக் கிடங்கிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, கே.எம்.எஸ். 2006-2007 பருவக் காலத்தில் 9-5-2007 வரை 6,044 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

2. வேளாண்மைத் துறை குறிப்பின்படி, பொன்விளைந்தகளத்தூர் கிராமத்தைப் பொறுத்தவரை, இங்கு சுமார் 540 எக்டேர் நிலப்பரப்பில்தான் நெல் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் கொள்முதலுக்காக உபரியாகும் நெல்லின் அளவு சுமார் 1,867 மெட்ரிக் டன் ஆகும். அதேபோல், நத்தம் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் சுமார் 310 எக்டேர் பரப்பில்தான் நெல் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் கொள்முதலுக்காக உபரியாகும் நெல் சுமார் 1,032 மெட்ரிக் டன் மட்டுமேயாகும். மேலும், பொன்விளைந்தகளத்தூர் கிராமத்திற்கு அருகில் 10 கி.மீ. தொலைவில் வல்லம் என்ற இடத்திலும், 15 கி.மீ. தொலைவில் திருக்கழுக்குன்றம் வட்டம், கொத்திமங்கலம் என்ற கிராமத்திலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், நத்தம் கிராமத்தை பொறுத்தவரை, நத்தம் கிராமத்திற்கு 6 கல் தொலைவில் வல்லம் என்ற கிராமத்தில் நேரடிக் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது.

3. மேற்கண்ட நிலையில், பொன்விளைந்தகளத்தூர் மற்றும் நத்தம் கிராமங்களில் தனியாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அவசியமில்லை.

[2008 மார்ச் 27

66—

## துணை விற்பனை நிலையம்

**வினா எண் 24143—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலுள்ள இரணியன் மண்ணெண்ணெய் விற்பனை நிலையத்தைப் பிரித்து சீர்காழி தென்பாதி பகுதியில் துணை விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரப் பகுதியான இரணியன் நகரில் உள்ள மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் 8,242 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளதால், இதனைப் பிரித்து சீர்காழி வட்டம், தென்பாதி பகுதியின் துணை விற்பனை நிலையத்தை நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி அமைக்க வழிவகை இல்லை.

67—

## கட்டடம் கட்டுதல்

**வினா எண் 33294—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்மை ஒன்றியம், உத்திரங்குடி, எடுத்துக்கட்டி ஊராட்சிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், உத்திரங்குடி மற்றும் எடுத்துக்கட்டி ஆகிய இடங்களில் நில உரிமையாளர் யாரேனும் தனக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் 33 சென்ட் நிலத்தினை தமிழ்நாடு



2008 மார்ச் 27]

நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இனாமாக கிரயம் தரும் பட்சத்தில், நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

68—

## இலவச மனைப் பட்டா

**வினா எண் 3884—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியத்தில் உள்ள சவரத் தொழிலாளர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தில் இலவச மனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில், சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்த முன்மொழிவுகள் ஏதும் வரப்பெறவில்லை. இம்மாவட்டத்தில் மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக ஏற்கெனவே வரப்பெற்றுள்ள முன்மொழிவுகள் மற்றும் நிலுவை இனங்களின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில் ஓமலூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

69—

## பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி

**வினா எண் 12064—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2008 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டித்தருவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**70—**

**கடன் தொகைக்கு வட்டி விகிதம்**

**வினா எண் 17779—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடன் தொகைக்கு வட்டி விகிதத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் முறையே தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி கழகத்திடமிருந்தும் கடன் பெற்று தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் மற்றும் வங்கிகள் மூலமாக பயனாளிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகிறது. இந்நிறுவனங்கள் வழங்கும் கடன் தொகைக்கு மேலும் வட்டி விகிதத்தைக் குறைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 மார்ச் 27]

**71—**

**கட்டட வசதி**

**வினா எண் 29302—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, குமரலிங்கம் பேரூராட்சி, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, குமரலிங்கம் பேரூராட்சி, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**72—**

**மாணவ, மாணவியர் விடுதி**

**வினா எண் 35903—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகளுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் தற்போது விடுதி தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2008 மார்ச் 27

**73—**

## பக்தர்களுக்குத் தங்கும் விடுதிகள்

**வினா எண் 29730—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் திருக்கோயிலில் பக்தர்களுக்குத் தங்கும் விடுதிகள் அறநிலையத் துறையின்மூலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக 24 அறைகள் கொண்ட தங்கும் விடுதி ஒன்று உள்ளது. மேலும், தற்சமயம் புதியதாக 10 அறைகள் கொண்ட நவீன தங்கும் விடுதியும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதன்படி மொத்தம் 34 அறைகளும், இதைத் தவிர குடில் ஒன்றும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக இருந்து வருகிறது. இவ்வறைகள் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமானதாக உள்ளதால், புதியதாக தங்கும் விடுதிகள் கட்ட தேவை எழவில்லை.

**74—**

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 38322—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூர் அருள்மிகு சிவன் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூர் அருள்மிகு சிவன் கோவில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாததால், இத்திருக்கோயில் திருப்பணிக்கு இந்து சமய அறநிலையத் துறைமூலமாக நிதியுதவி வழங்கிட வழி வகையில்லை.

**75—**

## கோயில் சீரமைப்பு

**வினா எண் 39131—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, அருள்மிகு சோனையாசாமி கோயிலைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அருள்மிகு சோனையாசாமி திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் தற்போது நல்ல நிலையில் உள்ளதாகவும், இத்திருக்கோயிலுக்கு அரசு நிதி உதவி ஏதும் தேவையில்லை என்றும், தாங்களே பாதுகாத்துக் கொள்வதாகவும், இத்திருக்கோயில் நிருவாகத்தினர் தெரிவித்துக் கொண்டுள்ளதால், இத்திருக்கோயிலைச் சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**76—**

## நவீனக் கழிப்பிடம்

**வினா எண் 39638—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 27

(அ) மானாமதுரை, அருள்மிகு ஆனந்தவள்ளியம்மன் திருக்கோயிலுக்கு நவீனக் கழிப்பிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் மற்றும் நகரம் அருள்மிகு சோமநாத சுவாமி சமேத ஆனந்த வள்ளியம்மன் திருக்கோயிலில் நவீனக் கழிப்பிட வசதி செய்வதற்குப் போதுமான இட வசதியில்லை.

**77—**

## நூலகம்

**வினா எண் 14422—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள நூலகத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை கிளை நூலகக் கட்டடத்திற்கு வருவாய்த் துறை மூலம் இலவசமாகப் பெறப்பட்ட 2,462 சதுர அடி காலிமனையில், 2,000 சதுர அடியில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் நூலகக் கட்டடம் கட்டப்பட்டு, 1-11-1999 முதல் நூலகம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில் அவ்வூர் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் இடவசதி போதுமானதாக உள்ளது. எனவே, மேற்படி நூலகத்தை விரிவுபடுத்தும் அவசியம் ஏதும் இல்லை.



2008 மார்ச் 27]

**78—**

## கூடுதல் கட்டடங்கள்

**வினா எண் 15436—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள நூலகத்திற்குக் கூடுதல் கட்டடங்களைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை கிளை நூலகத்திற்கு வருவாய்த் துறை மூலம் 2,462 சதுர அடி நிலம் இலவசமாகப் பெறப்பட்டு, 2,000 சதுர அடியில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டப்பட்டு, 1-11-1999 முதல் போதுமான இடவசதியுடன் நூலகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி நூலகத்தின் கட்டடப் பரப்பு போக மீதி 462 சதுர அடி காலிமனை மட்டுமே உள்ளது. எனவே, வால்பாறை கிளை நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அவசியம் ஏதும் இல்லை.

**79—**

## தமிழ் இலக்கண இலக்கியப் பாடம்

**வினா எண் 23005—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ் இலக்கண இலக்கியச் சிறப்பை உணர்த்த பாடத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

ஆங்கில போதனா வழியில் பயிலும் மாணவர்களும் பகுதி-I-ல் தமிழ் மொழியினைப் பயின்று வருகிறார்கள். இந்த மாணவர்கள்

[2008 மார்ச் 27

தமிழ் போதனா மொழியினைப் பயிலும் மாணவர்கள்போலவே அவர்கள் பயிலும் பாடத் திட்டத்தில் பகுதி-I-ல் தமிழ் மொழியினைப் பயின்று வருகின்றார்கள்.

**80—**

### புதிய நூலகக் கட்டடம்

**வினா எண் 31069—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், கணியம்பாடி ஊராட்சியில் புதிய நூலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், கணியம்பாடி ஊராட்சியில் ஏற்கெனவே கிளை நூலகம் ஒன்று சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, இது தவிர புதிதாக நூலகக் கட்டடம் கட்ட அவசியம் ஏதும் இல்லை.

**81—**

### தரம் உயர்த்துதல்

**வினா எண் 42075—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, குழிப்பாண்தண்டலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, குழிப்பாண்தண்டலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்படின், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும்.

**82—**

### தரம் உயர்த்துதல்

**வினா எண் 42076—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, பட்ரவாக்கம் நடுநில்லப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, பட்ரவாக்கம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும்.

**83—**

### புதிய கட்டடம்

**வினா எண் 30922—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடத்தில் வணிக வரித் துறையின் அலுவலகத்தை விரிவுபடுத்திப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடத்தில் வணிக வரித் துறை அலுவலகத்திற்குச் சொந்தமாக அரசுக் கட்டடம் கட்டுவது தொடர்பாக எந்த ஒரு முன்மொழிவுகளும் நிலுவையில் இல்லை.

**84—**

## புதிய மரக்கன்றுகள் நடுதல்

**வினா எண் 33074—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான காப்புக் காடுகள், சமூகக் காடுகளில் புதிய மரக்கன்றுகள், செடிகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அச்சரப்பாக்கம் தொகுதியில் மொத்தமுள்ள 2,54,573 எக்டேர் காப்புக் காடுகளிலும் 2,720 எக்டேர் சமுதாய நிலங்களிலும் 1997-98 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

அச்சரப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட அனைத்து காப்புக் காடுகளில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுவிட்டதால், புதிதாக மரக்கன்றுகள் நடுவதற்குச் சமுதாய நிலங்கள் வனத் துறைக்கு வழங்கப்படும் பட்சத்தில், மேலும், புதிய மரக்கன்றுகள், நடுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

**85—**

## தென்னங்கன்றுகள் விற்பனை

**வினா எண் 40066—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சிவகங்கை மாவட்டத்தில் வனத் துறை சார்பாக தென்னங்கன்றுகளை விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) வனத் துறையால் தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப்படுவதில்லை. எனவே, சிவகங்கை மாவட்டத்தில் வனத் துறை சார்பாக தென்னங்கன்றுகளை விற்பனை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**86—**

## பாலம்

**வினா எண் 8271—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, தாழக்கரை கிராம விவசாய வயல்களுக்கு செல்லும் வழியிலுள்ள ஓடையில் பாலம் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பாலம் கட்ட கேட்கப்பட்டுள்ள இடமானது ஈரோடு (நெடுஞ்சாலை) கோட்டத்தின் தாராபுரம் (நெடுஞ்சாலை) உட்கோட்டத்தைச் சார்ந்த மாவட்ட இதரச் சாலையான கோபி தாராபுரம் சாலை கி.மீ. 83/8-லிருந்து சங்கராண்டாம்பாளையம் வழியாக ஊதியூர் தாசநாயக்கன்பட்டி சாலை கி.மீ. 8/6-ல் சேரும் சாலையில் கி.மீ.4/6-ல் அமைந்துள்ள ஓடைப் பகுதியாகும். இவ்விடத்தில், 2006-2007 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் குழாய்ப் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணி மார்ச், 2008-ல் முடிக்கப்படும்.

[2008 மார்ச் 27

**87—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 33843—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், விக்கிரமங்கலம்-நாராயணபுரம் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட விக்கிரமங்கலம்-நாராயணபுரம் சாலையின் நீளம் கி.மீ. 0/0-4/0 வரை ஆகும். இச்சாலையானது ஒரு மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலை 3.75 மீ அகலம் கொண்டதாகும். கி.மீ. 0/0-1/0 வரை ரூ.5.00 இலட்சம் மதிப்பிற்கும், கி.மீ. 1/0-2/0 வரை ரூ.5.00 இலட்சம் மதிப்பிற்கும், கி.மீ.2/0-2/2 வரை ரூ.1.10 இலட்சம் மதிப்பிற்கும் 2006-2007 ஆம் ஆண்டில் காலமுறைப் புதுப்பித்தல்மூலம் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கி.மீ. 2/2-3/0 வரை ரூ.5.00 இலட்சம் செலவில் சி.ஆர்.ஐ.டி.பி. 2005-2006 ஆம் ஆண்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நீளம் கி.மீ. 3/0-4/0 வரை தார் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு சீர் செய்யப்பட்டுள்ளது.

**88—**

## பாலம்

**வினா எண் 33844—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பாப்பாபட்டி சாலையிலுள்ள பாலத்தை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, பாப்பாபட்டி சாலையில் பாலம் கட்டக்கோரும் இடமானது, வாலாந்தூர்-பாப்பாபட்டி சாலை கி.மீ. 0/0-7/6 எனும் மாவட்ட இதரச் சாலையில் 0/2-ல் உள்ளது. தற்போது இவ்விடத்தில் 11 கண்கள் கொண்ட குழாய்ப் பாலம் உள்ளது. இப்பாலம் 3 மீட்டர் நீளமும் 5.70 மீட்டர் அகலமும் கொண்டதாகும். இப்பாலத்தின் மேல்படுகையில் (upstream side) இணையும் பெரிய ஓடை மூலமாக மழைக் காலங்களில் அதிக நீர்வரத்து ஏற்படுவதோடு, செடி கொடிகள் அதிகமாக அடித்து வரப்படுகிறது. இதனால் 0.900 மீட்டர் விட்டமுடைய குழாய்கள் அடைக்கப்பட்டு நீர் செல்வது தடைபடுகிறது. அவ்வப்போது அடைப்புகள் அகற்றப்பட்டு சீர் செய்யப்படுகிறது. மேலும், இவ்விடத்தில் 7.60 மீ. அகலத்திற்கு நான்கு கண்கள் கொண்ட பாலம் (slab culvert) அமைப்பதற்கு ரூ.60.00 இலட்சம் தேவைப்படும். தற்போது இப்பாலம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் இப்பாலம் போக்குவரத்துக்கு உகந்த நிலையில் இருப்பதால் இப்பாலத்தினைத் திரும்பக் கட்டும் அவசியம் தற்போது ஏற்படவில்லை.

**89—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 35665—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை ஊராட்சி, முத்து கிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ள சத்துணவு மையத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னதானம்பேட்டை ஊராட்சி, முத்துகிருஷ்ணாபுரம் கிராமத்திலுள்ள சத்துணவு மையத்திற்கு வரும் நிதியாண்டில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

**90—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 20874—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மாதப்பூண்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாதப்பூண்டி கிராமத்திற்கு அருகில் நல்லான்பிள்ளைபெற்றாள் கால்நடை கிளை நிலையம் 5 கி.மீ. தொலைவில் செயல்பட்டு வருவதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அரசு விதிமுறைகளின்படி புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**91—**

**கால்நடை கிளை மருந்தகம்**

**வினா எண் 34825—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, ஏமூர் ஊராட்சியில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புலியூர் கால்நடை கிளை நிலையம் 4 கிலோ மீட்டருக்குள் உள்ளதாலும், கால்நடைகளின் எண்ணிக்கை 1,337 என்று குறைவாக உள்ளதாலும், கால்நடை கிளை நிலையம் அமைத்திட 5,000 யூனிட்டுகள் தேவைப்படுவதால், கிருஷ்ணராயபுரம் தொகுதி, ஏமூர் ஊராட்சியில் 2007-08 ஆம் ஆண்டு கால்நடை கிளை நிலையம் துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**92—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 34829—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒன்றியத்தில், புதுக்குளம், மானாமதுரை, முத்தநேந்தல் ஆகிய கால்நடை மருந்தகங்களும், பெரியகோட்டை, மேலநீட்டுர், மேலபசலை மற்றும் மீளகழூர் கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கால்நடை நிலையங்களின்மூலம் கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், மானாமதுரை தொகுதியில் நடப்பு நிதி ஆண்டில் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2008 மார்ச் 27

93—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 38720—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், குண்டக்கல் கிராம கால்நடை மருத்துவமனையை இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

குண்டக்கல் கிராமம் அமைந்துள்ள காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும் இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், குண்டக்கல் கிராமத்திற்கு அருகில் காடையாம்பட்டி, காருவள்ளி கால்நடை மருந்தகங்களும், தொப்பூர் கால்நடை மருந்தகம் (தருமபுரி மாவட்டம்), டேனிஷ்பேட்டை கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், மேற்படி கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், மேற்படி கிராமத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

94—

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 41635—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?



2008 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காலியாக இருந்த அனந்தபுரம் கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவர் பதவியில் புதிய கால்நடை மருத்துவ பட்டதாரியைக் கொண்டு 30-7-2007 பிற்பகல் முதல் நிரப்பப்பட்டு செயல்பட்டு வருகின்றது. கால்நடை மருந்தகங்களுக்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் பதவி மட்டுமே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மேலும் புதிய கால்நடை மருத்துவர்களை நியமிக்க வாய்ப்பில்லை.

95—

## இருக்கை வசதி

**வினா எண் 8655—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, கிளாம்பாக்கம் அரசினர் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு இருக்கை வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் உள்ள கிளாம்பாக்கம் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு 1999-2000 ஆம் ஆண்டு 63 நீள் இருக்கைகள், 18 மேஜைகள், 16 நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நபார்டு வங்கி கடனுதவித் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்திட அரசாணை (நிலை) எண் 72, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-2) துறை, நாள் 13-6-2007-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ. 45.80 கோடியிலிருந்து திருப்போரூர் தொகுதி, கிளாம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குத் தேவையான இருக்கை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

[2008 மார்ச் 27

96—

### கூடுதல் கட்டடம்

**வினா எண் 35710—திரு. ந. கணபதி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, புளிச்சம்பள்ளம் அரசு அம்பேத்கர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 72, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-2) துறை நாள் 13-6-2007-ல் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் 132 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நபார்டு வங்கி வழங்கும் கடனுதவித் திட்டங்கள் மூலம் கடன் பெற மொத்தம் ரூ.45.80 கோடி அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, புளிச்சம்பள்ளம் அரசு அம்பேத்கர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணியும் இடம் பெற்றுள்ளது. இப்பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட உள்ளன.

97—

### புதிய மீன் அங்காடி

**வினா எண் 34798—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, பொழிக்கரை கிராமத்தில் புதிய மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

நாகர்கோவில் தொகுதி, பொழிக்கரை கிராமம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மிகச் சிறிய மீனவ கிராமம் ஆகும். இங்கு மொத்தம் 100 கடல் மீன் தொழில் செய்பவர்கள் உள்ளனர். இவர்களில்



2008 மார்ச் 27]

அநேக மீனவர்கள் வெளி மாநிலங்களில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். மேலும், இந்தக் கிராமத்தில் மொத்தம் 142 கடல் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள் மட்டும் சொந்த ஊரில் மீன்பிடித் தொழிலில் உள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அருகிலுள்ள மீனவ கிராமங்களிடையே மீன் விற்பனைக்குச் செல்வது கிடையாது. எனவே, அருகிலுள்ள கிராமங்கள் பயனடையும் வாய்ப்புகளும் குறைவாகவே உள்ளன. எனவே, தற்போதுள்ள நிலையில் பொழிக்கரை மீனவர் கிராமத்திற்கு என அரசுமூலம் தனியாக ஒரு மீன் அங்காடி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

98—

### பால் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 22975—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பாலகருதம்பட்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம் பாலகருதம்பட்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பால் கொள்முதல் நாளொன்றுக்கு 150 லிட்டருக்கு மேல் உயர வாய்ப்பில்லை என்பதாலும், ஊர்ப் பொது மக்கள் பால் ஊற்ற முன்வராததாலும் பாலகருதம்பட்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

99—

### பால் கொள்முதல்

**வினா எண் 26655—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

228/102

நாமக்கல் தொகுதி, செவ்வந்திப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்முதல் செய்யப்படும் பாலினைப் பரமத்திவேலூர் பால் பண்ணைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

நாமக்கல் தொகுதி, செவ்வந்திப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பரமத்திவேலூரிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் உள்ளதாலும், இப்பகுதியில் பால் வழித்தடம் ஏதும் இல்லாததாலும் செவ்வந்திப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்முதல் செய்யப்படும் பாலினை பரமத்திவேலூர் பால் பண்ணைக்குக் கொண்டு செல்ல வாய்ப்பில்லை.

**100—**

### அரசு கடன் வழங்குதல்

**வினா எண் 41481—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் பனைசார் தொழிலாளர்களுக்கு பனைசார் பொருட்கள் உற்பத்தி செய்ய, அரசு கடன் வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் பனைசார் தொழிலாளர்களுக்கு பனைசார் பொருட்கள் உற்பத்தி செய்ய அரசு கடன் வழங்குவது தொடர்பான திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

மேற்படி பகுதியைச் சார்ந்த பனைசார் தொழிலாளர்களுக்கு கதராணைக் குழுவால் அறிவிக்கப்பட்ட சிறுதொழில்களுக்கான கடன் அந்தந்தப் பகுதியில் உள்ள (REGP) திட்டத்தின்கீழ் வங்கிகள்மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. அரசினர் தனித் தீர்மானம்

### ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கர்நாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட மத்திய அரசின் ஒத்துழைப்பைக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு, இந்தப் பேரவையின் அனுமதியோடு, ஏன் எல்லோருடைய அனுமதியும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையில் நான் வைக்க விரும்புகிறேன்:

"தமிழகத்தின் வறண்ட பகுதிகளான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்திடும் நோக்கத்துடனும், அந்த மாவட்டங்களில் நிலத்தடியிலே உள்ள குடிநீர் ஆதாரங்களில் அதிக அளவில் கலந்திருக்கும் ஃபுளோரைடு என்ற நச்சுத் தன்மையால் பெரும் அளவிற்கு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், ஒகேனக்கல் பகுதியில் காவிரி நீரை ஆதாரமாகக் கொண்டு தரமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வ்ழங்கும் திட்டம் நீண்ட நெடுங்காலமாகவே பரிசீலனையில் இருந்து வந்துள்ளது. தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் இத்திட்டத்தின் அத்தியாவசியம் காரணமாக முழு ஆதரவை அளித்து வந்துள்ளன. மத்திய அரசும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுத் தருவதில் தமிழகத்திற்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

*முற்பகல் 10-35*

1998-ல் அன்றைய இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களின் தலைமையில் அமைந்திருந்த தேசிய ஜனநாயக முன்னணி அரசும், அதற்கு முந்தைய காங்கிரஸ் தலைமையிலான அரசுகளும், தற்போது டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலும், திருமதி சோனியா காந்தி அவர்கள் வழிகாட்டுதலிலும் நடைபெற்று வரும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து ஆதரவு நல்கி வந்துள்ள நிலையில், கர்நாடக மாநிலத்தில் இத்திட்டத்திற்கு அரசியல் நோக்கத்தோடு

திடீரென எதிர்ப்புத் தெரிவித்து வருவது நமக்கு அதிர்ச்சியையும், ஆழ்ந்த வேதனையையும் அளிக்கக்கூடியதாக உள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு மாநில எல்லைக்குள் ஓடிக்கொண்டிருக்கும் காவிரி நீரை எடுத்து வந்து, தண்ணீர்த் தேவையினால் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு வழங்குவதற்கான திட்டமேயாகும். இத்திட்டத்தால் கர்நாடக மாநிலத்திற்கு எவ்விதமான குந்தகமோ, பாதிப்போ இல்லை. மேலும், காவிரி ஆற்றைக் குடிநீர் ஆதாரமாகக் கொண்டு, மாநிலத் தலைநகரான பெங்களூரு குடிநீர்த் திட்டத்தைப் பல்வேறு கட்டமாகக் கர்நாடக அரசு செயல்படுத்தி வருகிறது. அடிப்படையான குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்து, கடுமையான நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற இயற்றப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடகம் எதிர்ப்புத் தெரிவிப்பது இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் எதிரானதாகும்.

மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நீர் வள ஆதாரத் துறை ஆகிய துறைகளின் அனுமதியோடு, 1998 ஆம் ஆண்டிலேயே பெற்று, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் நாட்டு வங்கியின் நிதி உதவியுடன், 1,334 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசால் நிறைவேற்றப்படவுள்ள ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடகம் எதிர்ப்புத் தெரிவிப்பதைப் பற்றி மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17-3-2008 அன்று அனுப்பியுள்ள கடிதத்தில் உண்மை நிலைகளை விளக்கி, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கர்நாடக அரசு எவ்விதத் தடையும் ஏற்படுத்தாதிருக்க அறிவுறுத்தும்படிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழகம் எப்போதுமே தனது அண்டை மாநிலங்களுடனும், அந்த மாநிலங்களின் மக்களுடனும் நட்பையும், நல்லுறவையும் பேணி வளர்த்து வருகிறது. எனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற மத்திய அரசு முழு ஒத்துழைப்பையும், உதவியையும் தமிழக அரசிற்கு வழங்க வேண்டுமென்றும், கர்நாடக அரசு கடைப்பிடித்து வரும் எதிர்ப்புப் போக்கினைத் தடுத்து நிறுத்திட ஆவன அனைத்தும் செய்திட வேண்டுமென்றும் இந்தப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதம்-தொடர்ச்சி. 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். முதலில் அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள். 20 நிமிடங்கள் ஒதுக்கப்படுகிறது.

***திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்துகொள்ள எனக்கு அனுமதி அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஏமாறப் பிறந்தவர்களே தமிழக மக்கள் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட காகிதத் திட்டங்களின் கவர்ச்சி அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கை' என்று எங்களது அம்மா அவர்கள் சொன்னதை இந்த அவையில் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு சொன்ன திட்டங்கள் நிறைய நிறைவேற்றப்படாமல் காகித அளவிலேயே இருக்கின்றன. நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள், சிறு தொழிலுக்கென்று கொள்கை வகுத்து, சில சலுகைகள் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இன்றைக்கு 9 ஆயிரம் சிறு தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கின்றார்கள். நீங்கள் சொன்ன சலுகைகள், மூடப்பட்ட சிறு தொழில்களுக்கும் பொருந்துமா அல்லது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்களுக்கு மட்டும் பொருந்துமா என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-40*

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகளை 89 கோடி ரூபாயில் நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஓராண்டு காலம் ஆகிவிட்டது. அதன்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? அந்தத் தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனப்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையின் சார்பாக 2007-2008 ஆம் ஆண்டு சென்னை, எண்ணூர் துறைமுகத்திலும், கடலூரிலும் தனியார் மூலமாக 3,700 கோடி ரூபாயில் கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். வேலை நடக்கின்றதா, ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதா என்பதைக் கேட்க விரும்புகின்றேன். சிவகங்கையில் மற்றொரு கிராஃபைட் தொழிற்சாலை சர்வதேசத் தரத்துடன், உயரிய தொழில்நுட்பத்துடன் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றி எதையும் காணோம். ஆரம்பிக்க இருக்கின்றீர்களா அல்லது சொன்னதோடு கிடப்பில் போடப் போகின்றீர்களா என்பதற்கு நான் கேள்வி கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ராஜகண்ணப்பன் அவர்கள் சொன்னார்கள். 26-12-2004 அன்று உலகமே வியக்கின்ற அளவுக்கு சுனாமி ஆழிப் பேரலை தாக்கியது. 8,018 பேர் மடிந்தார்கள். இலட்சக்கணக்கான குடும்பத்தினர் பாதிக்கப்பட்டார்கள். நடந்த ஒரு மணி நேரத்தில் சென்னையில் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து ஆறுதல் கூறி, நிவாரணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து, மறுநாள் காலையில் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து ஆறுதல் கூறி, நிவாரண உதவியைச் செய்து துரிதப்படுத்தியதை, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் (குறுக்கீடு) ** பேசுகின்ற கருத்துக்குப் பதில் இருந்தால், சொல்லுங்கள். உட்கார்ந்துகொண்டு யாரும் பேசவேண்டாம். (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு யாரும் பேசவேண்டாம். எழுந்து நின்று பேசுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர் என்னைப் பார்த்துப் பேசவேண்டும். நீங்கள் அந்தப் பக்கம் பார்த்துப் பேசக் கூடாது. மற்றவர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் வைத்திலிங்கம் சொன்ன அந்த ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கிளின்டன் பாராட்டினார். இலங்கை அதிபர் அங்கே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க, ஆலோசனை வழங்க இங்கிருந்து அதிகாரிகளை அனுப்புங்கள் என்று சொன்னார். நிலம் கையகப்படுத்தப்பட்டது. கையகப்படுத்திய நிலத்தை மீனவர்கள் வேண்டாமென்றார்கள். மீனவர்கள் விரும்பிய இடத்தை எடுப்பதற்கு நாட்கள் ஆகியது. 14 மாதங்கள்தான் இருந்தன. மார்ச் 1 ஆம் தேதி தேர்தல் கமிஷன் தேர்தல் தேதியை அறிவித்துவிட்டது. ஆறு மாதங்கள் ஆயிற்று இடத்தைத் தேர்வு செய்ய. இப்படிப்பட்ட பல சூழ்நிலைகளில், அம்மா அவர்கள் வீடுகளைக் கட்டி, வலை கொடுத்து, படகு கொடுத்து, அந்த மக்களைப் பழைய சகஜ நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அதைப் பார்த்து உலகமே வியந்தது.

8,406 வீடுகள். ஒன்றே ஒன்று, இந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளிலும் தவறான புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 2007-2008-ல் 8,406 என்று இருக்கிறது. 2008-2009-ல் 8,401 என்று இருக்கிறது. அந்த 5 வீடுகள் காற்றிலே கரைந்துவிட்டனவா அல்லது சுனாமி வந்து அடித்துவிட்டதா அல்லது அச்சுப் பிழையா? இதுபற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பிறகு பதிலுரையில் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். எனக்கு மறு பிறவி என்று ஒன்று இருந்தால், நான் போயஸ் தோட்டத்து நாயாகப் பிறப்பேன் என்று சொன்னார்கள். எனக்கு மறு பிறவி என்று இருந்தால் நான் போயஸ் தோட்டத்து வேலைக்காரியாக இருப்பேன் என்றார்கள். இன்றைக்கு வசைபாடுகிறார்கள். அண்ணா சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. 'வாழ்க வசவாளர்கள்' என்று கூறி, எனது அடுத்த கருத்துக்கு நான் வருகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். இங்கே மகளிர் திட்டத்தைப் பற்றி நிறைய சொல்லியிருக்கின்றீர்கள். நிறைய திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா காலத்தில் தொடங்கப்பட்ட 'தொட்டில் குழந்தைத் திட்டம்' என்ற மகத்தான திட்டம், அன்னை தெரசா வந்து பாராட்டி, 'மகளே நீ வாழ்க' என்று வாழ்த்திய திட்டம் இன்றைக்கு என்ன ஆனது? அதை நீங்கள் நடைமுறைப்படுத்துகிறீர்களா அல்லது நடைமுறைப்படுத்த விரும்பவில்லையா என்பதைத் தெரிந்துகொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மழை நீர் சேகரிப்புத் திட்டம், 'விண்ணின் மழைத் துளி, மண்ணின் உயிர்த் துளி' என்பார்கள். ஒவ்வொரு மழைத் துளியும் சேகரிக்கப்படவேண்டும் என்று இன்றைக்கு உலகமே புரட்சித் தலைவியினுடைய மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைப் பாராட்டியது. புதிய வீடுகள் கட்டுபவர்கள் அந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்; அரசுக் கட்டடங்களில் அமல்படுத்தவேண்டும் என்றெல்லாம் ஆணையிட்டிருந்தார்கள். இன்றைக்கு அந்த மழை நீர் சேகரிப்புத் திட்டம் இருக்கின்றதா? அதை நடைமுறைப்படுத்த விரும்புகிறீர்களா, விரும்பவில்லையா என்பதைத் தெரிந்துகொள்ள, அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரோ இரயில் திட்டம்; கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 50 கோடி ரூபாய் ஒதுக்கினீர்கள்; ஆய்வு மேற்கொண்டு இருக்கின்றோம் என்கிறீர்கள். அந்த 50 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கின்றதா? மிச்சம் இருக்கின்றதா? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 300 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றீர்கள்; ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கிக்குக் கடிதம் எழுதியிருக்கிறீர்கள். மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்திற்கு இரண்டாண்டு காலத்தில் ஆய்வே மேற்கொள்ளப்படவில்லை. ரூ.9,000 கோடியில் 5 வருடங்களாகும் என்கிறீர்கள். இதை முடிப்பதற்கு 15 வருடங்கள் ஆகும்போல் இருக்கிறது. எங்களது அம்மா ஆட்சியில் மோனோ இரயில் திட்டம் கொண்டு வருவதற்கு இருந்தார். இன்னும் இரண்டு வருடங்களில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும். மெட்ரோ இரயில் திட்டம் வருமா? மேயர் தேர்தலைக் கணக்கிட்டு, கிருஷ்ணா



நதி நீரைச் சொம்பில் கொண்டு வந்து விழா நடத்தினீர்களே; அதுபோல நாடாளுமன்றத் தேர்தலைக் கணக்கிட்டு, வருகிறது, வருகிறது என்கிறீர்களா? அதை நிறைவேற்ற நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கேபிள் டி.வி. வருகிறது, வருகிறது என்கிறீர்கள். புலி வருகிறது, புலி வருகிறது என்பதுபோல், இந்தப் புலி எப்போது வரப்போகிறது? வருமா? வராதா? ஒரு வருடமாக அரசு கேபிள் டி.வி வரும், வரும் என்கிறீர்களே? அது எப்போது வரும் என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்குக்கு கடந்த் ஆண்டு நீங்கள் ஒதுக்கிய ரூபாய் 2,136 கோடி, இந்த ஆண்டு 2,427 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதிகமாக ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டு இருக்கிறதா? இன்றைக்கு என்ன நிலைமை? ஒரு மனிதன் நடு ரோட்டில் சுதந்திரமாக நடமாட முடிகிறதா? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய (குறுக்கீடுகள்) பேச விடுங்கள், ஏன் உட்கார்ந்துகொண்டு சத்தம் போடுகிறீர்கள்? கொஞ்ச நேரம் பேசவிடுங்கள். உங்களது மாவட்டச் செயலாளர் வெட்டிக் கொல்லப்படுகிறார். கோர்ட் வளாகத்திலே ஒரு வக்கீல் வெட்டிக் கொல்லப்படுகிறார். சேர்மன் ரிமோட் கண்ட்ரோல்மூலமாகக் கொல்லப்படுகிறார். அதியமான்கோட்டை காவல் நிலையம் கொள்ளையடிக்கப்படுகின்றது. இப்படி எத்தனையோ; ஆனால், இதற்கு இத்தனை கோடி ரூபாய் செலவழித்தும் சட்டங்கள் காப்பாற்றப்படவில்லை. காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதைக் கட்டியவர்கள் யார்? அவர்கள் சுயமாகச் செயல்பட அனுமதிக்காதவர்கள் யார் என்பதைத் தெரிந்து, நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்கள் வரியில்லாத பட்ஜெட் என்கிறீர்கள். இங்கே விலைவாசி என்கிற வரி ஏழை மக்களை அழுத்திக்கொண்டிருக்கிறது. கொஞ்ச நஞ்சமல்ல; மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையிலே ஜூன் மாதம் 2007-ல் விலைப்பட்டியலை அறிவித்தார்கள். மஞ்சள் 45 ரூபாய், கடலை எண்ணெய் 78 ரூபாய், நல்லெண்ணெய் 75 ரூபாய் என்று. இன்றைக்கு அவற்றின் விலைகள், மஞ்சள் 60 ரூபாய், நல்லெண்ணெய் 130 ரூபாய், கடலை எண்ணெய்

90 ரூபாய். 'விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே' என்றெல்லாம் கவிதை வந்தது. இப்போது விலைவாசி விண்ணோடும், முகிலோடும் விளையாடிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களை உருவாக்குகிறீர்கள். அதற்கு ஒரு கொள்கையை வகுத்துக்கொள்ளுங்கள். இரண்டு தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம், ஒன்றரை தொகுதிக்கு ஒரு மாவட்டம், மூன்றரை தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்று இல்லாமல், 6 தொகுதிகளுக்கு ஒரு மாவட்டமா, 7 தொகுதிகளுக்கு ஒரு மாவட்டமா என்று கொள்கையை வகுத்துக் கொண்டு, நீங்கள் மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தஞ்சை பாதாளச் சாக்கடைத் திட்டம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 27-9-2007 அன்று துவக்கி வைத்தார்கள். ஆனால், இன்றையவரைக்கும் கிட்டத்தட்ட 6 மாத காலமாகிவிட்டது. எந்த இணைப்பும் கொடுக்கவில்லை. பள்ளம் தோண்டியது தோண்டியபடியே இருக்கிறது. நேற்று முன்தினம் ராஜா என்கின்ற தி.மு.க.வைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர் ஒரு பள்ளத்தில் விழுந்து இறந்துவிட்டார். இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்குத் தொடக்க விழா நடத்தி 6 மாதம் ஆகியும் இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், அரசு ஊழியர்களுக்கு விடுமுறை, மாணவர்களுக்கு விடுமுறை, தொழிலாளர்களுக்கு விடுமுறை என்பதை. ஆனால், மின்சாரத்திற்கு விடுமுறை விட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் ஒரு நாளைக்கு 10,011 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது 13 தொழிற்சாலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன என்கிறீர்கள். அந்த 13 தொழிற்சாலைகளும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டு உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கின்றனவா? சொல்லுங்கள்.



நீங்கள் 2007-2008 நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிறீர்கள், "காற்றாலை மூலமாக 3,400 மெகாவாட் மின்சார உற்பத்தியைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறோம். இந்தியாவிலேயே காற்றாலை உற்பத்தியில் தமிழ்நாடுதான் முதல் மாநிலமாக இருக்கிறது" என்று சொல்லி இருக்கிறீர்கள்.

அடுத்தது, புரட்சித் தலைவியினுடைய 5 ஆண்டு காலத்தில் சென்னை, தூத்துக்குடி, மேட்டூர், எண்ணூர் போன்ற அனல் மின் நிலையங்கள் 5 வருடங்கள் இந்தியாவிலேயே தங்கப் பதக்கம் பெற்றன. இப்படி மின்சாரத் துறையில் 5 வருடம் எந்தவிதமான மின் தட்டுப்பாடும் இல்லாமல், ஓர் ஒளிமயமான தமிழகத்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு ஏன் இந்த நிலைமை? புதிய தொழிற்சாலைகள் வந்ததால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறுக்கிடக்கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால் முழு விவரமும் தெரியாமல் அவர் சில கருத்துகளைச் சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்தால் சில விளக்கங்களைச் சொல்லியாக வேண்டும்.

காற்றாலைகளைப் பொறுத்தவரையிலே, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாகத்தான் நிறுவப்பட்டிருக்கின்றன. மின்சாரம் அவர்களுடைய ஆட்சியிலே, 10,011 மெகாவாட் இருந்ததாகவும், இப்போது மின்சாரத்திற்குத் தடை ஏற்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். உற்பத்தித் திறன் 10,011. ஆனால் உண்மையிலேயே உற்பத்தியானது அப்பொழுது 8 ஆயிரம் மெகாவாட். அப்போது 8 ஆயிரம் மெகாவாட்டிற்கே செலவு கிடையாது. ஏனென்றால், அப்பொழுது சராசரியில் தமிழ்நாட்டிலே 8 கோடியே 50 இலட்சம் யூனிட்தான் ஒரு நாளைக்குத் தேவைப்பட்டது. ஆனால், இன்றையதினம் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட காரணத்தால், இன்று ஒரு நாளைக்கு 17 கோடி யூனிட் மின்சாரம் தேவைப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் இயங்குகின்றனவா என்று கேட்டார்கள். சட்டசபை முடிந்தவுடனே வந்தால், நோக்கியா தொழிற்சாலை இயங்குவது.

மோட்டரோலா தொழிற்சாலை இயங்குவது, வரிசையாக எல்லாத் தொழிற்சாலைகளும் இயங்கிக்கொண்டு இலட்சக்கணக்கான ஏழையெளியவர்கள் வேலை செய்வதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10,015 மெகாவாட்தான் மின்சார உற்பத்தித் திறன் என்று சொல்கிறார். இப்போது ஒரு நாளைக்கு உங்களுக்கு எத்தனை மெகாவாட் மின்சாரம் செலவிடப்படுகிறது? எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது? எவ்வளவு வெளி மாநிலத்திலிருந்து நீங்கள் வாங்குகிறீர்கள்? எங்கள் அம்மா உபரி மின்சாரத்தை கர்நாடகா, மகாராஷ்டிராவிற்கு விற்றார்கள். இப்போது நீங்கள் வெளி மாநிலத்தில் கையேந்துகின்ற ஒரு நிலைமையை உருவாக்கி இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏதோ அ.தி.மு.க. ஆட்சியிலேதான் மின்சாரத்தை விற்றதைப்போல சொல்கிறார். தி.மு.க. ஆட்சியிலேயும் அக்டோபர் மாதம் வரையிலே மகாராஷ்டிரா, பஞ்சாபுக்கு விற்றுக்கொண்டுதான் இருந்தோம். காற்றாலைகள்மூலம் மின்சாரம் நமக்குக் கிடைக்காத காரணத்தினாலே, கோடைக் காலத்திலே எப்போதும் பஞ்சம் வரும். கோடைக் காலத்திலே இந்தியாவிலே நம்மைப்போல எந்த மாநிலத்திலேயும், 24 மணி நேரத்திலே பெரும்பாலான நேரம் மின்சாரம் இல்லை. பல மாநிலங்களிலே, பகல் நேரத்திலே மின்சாரம் இல்லை. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு 8,600 மெகாவாட் நாம் நம்முடைய சொந்த மின்சாரத்தைப் பயன்படுத்துகிறோம். மற்ற மாநிலங்களில் இருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை வாங்கிக்கொண்டு இருக்கிறோம். முதலமைச்சரே டெல்லிக்குச் சென்று 300 மெகாவாட் மின்சாரத்தைப் பெற்று வந்தார்கள். இப்படி மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கு இந்த அரசு எப்போதும் தயங்கியது இல்லை. அப்போது தேவையில்லாமல் இருந்தது. இப்போது அதிகம் தேவைப்படுகிறது. பயனீட்டாளர்கள் அதிகம் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதனாலே, மின்சாரம் ஓரளவிற்குப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, இரவு நேரங்களிலே



யாருக்கும், படிக்கின்ற மாணவர்களுக்கு மின்சாரம் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக 6 மணியில் இருந்து 10 மணி நேரம் தமிழ்நாட்டிலே ஓரிடத்தில்கூட மின் தடை ஏற்படுத்தக்கூடாது என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தைப் பற்றி ஒரு வெள்ளை அறிக்கை வைக்கத் தயாரா என்று கேட்டு, அடுத்த subject-க்கு செல்கிறேன்.

மென்பொருள் ஏற்றுமதி. நேற்றையதினம், சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ராஜ கண்ணப்பன் அவர்கள், அண்ணா தி.மு.க. ஆட்சியில் மென்பொருள் ஏற்றுமதி 14,100 கோடி ரூபாயாகத்தான் இருந்தது. இப்போது நாங்கள் 21 ஆயிரம் கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி செய்து இருக்கின்றோம் என்று சொன்னார்கள். 1996-2001-ல் தி.மு.க. ஆட்சியில் மென்பொருள் ஏற்றுமதி 3,100 கோடி ரூபாய். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்து 3 கோடி சதுர அடி நிலத்தில் கட்டடம் கட்ட தனியாருக்கு Single window clearance system-ல் அனுமதி கொடுத்து, கட்டடம் கட்டி, தொழிலதிபர்கள் பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து, அதன்மூலமாக எங்களது ஆட்சியில் 14,100 கோடி ரூபாய்க்கு மென்பொருள் ஏற்றுமதி செய்தோம். அவர் அடிப்படை அடித்தளம் அமைத்ததனுடைய பரிணாம வளர்ச்சியில்தான் நீங்கள் இன்றைக்கு 21 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மென்பொருள் ஏற்றுமதி செய்கிறீர்கள். இதற்கு வித்திட்டவர் எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்கள் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வெள்ள நிவாரணம். கடந்த முறை வெள்ளம் ஏற்பட்டது. மத்திய அரசிடம் 1,510 கோடி ரூபாய்க்குப் பணம் வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். தமிழ்நாட்டு நிதியில் இருந்து 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினீர்கள். அதில் 56.5 கோடி ரூபாய் தான் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிறைய பேர் பலன்பெறவில்லை. போராட்டம்

நடத்தினார்கள்; சாலை மறியல் செய்தார்கள்; ஆனால், அவர்கள் பயன்பெறவில்லை; சிலர், பாதிக்கப்படாதவர்கள் எல்லாம் வெள்ள நிவாரணம் பெற்றார்கள். இப்போது வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எக்டேருக்கு ரூ.7,500 நெல்லுக்குக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இது போதாது. கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே சாகின்றான் விவசாயி. அவனுக்கு இந்த நேரத்திலாவது கட்டுப்படியான நிவாரணத்தை வழங்கி ஒரு எக்டேருக்கு ரூ.10,000 வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் பணியிடங்கள் 6,700 காலியாக இருக்கின்றன. இதிலே பதவி உயர்வு மூலமாக எங்களது அம்மா ஆட்சியில் 2:1 என்று இருந்தது. இன்றைக்கு முழுவதும் பதவி உயர்வு மூலமாக இடத்தை நிரப்ப வேண்டுமென்று அரசாணை எண் 240, நாள் 22-9-2007-ல்...

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வார்த்தையில் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** அன்பாகச் சொல்லுங்கள். இரண்டே நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழாசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு முன்பு இருந்ததுபோல், 2:1 என்ற வீதத்தில் அவர்களுக்குப் பதவி கொடுக்க வேண்டும். இல்லையென்றால் 15,000 பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலையில்லாமல் காத்திருக்கிறார்கள். செம்மொழி என்கிறோம். தனித் தமிழ் என்கிறோம். இதற்கெல்லாம் தமிழ் நன்கு படித்தவர்கள் இருந்தால்தான், நடுநிலைப் பள்ளிகளில் தமிழை மாணவர்கள் நன்றாகப் படிக்க முடியும். இதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை,



"ஒய்யாரக் கொண்டையிலே
தாழம் பூவாம் - அதில்
உள்ளே இருக்கிறது ஈரும் பேனாம்."

அதுபோல இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் வாழும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் தலைவனாகவும், தமிழ் கூறும் நல்லுலகின் நாயகனாகவும், 5-வது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இரவு, பகல் பாராது தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்துக்கொண்டிருக்கும் ஓய்வறியாச் சூரியன் டாக்டர் கலைஞர் அவர்கள் கோலோச்சும் இப்பேரவையில் (மேசையைத் தட்டும் ஒலி) 20-3-2008 அன்று தமிழக அரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களால் முன்வைக்கப்பட்ட 2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின்மீது தமிழ்நாட்டின் வடகோடி முனையில் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினரான எளியவன் என்னை லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற நடைமுறைகள் குறித்த கருத்தரங்கில் பங்குபெற என்னைத் தேர்வு செய்து அனுப்பியமைக்கும், எனக்கு இந்த நிதிநிலை அறிக்கையின்மீது உரையாற்ற வாய்ப்பு அளித்தமைக்கும், திருவண்ணாமலை தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரி இல்லா பட்ஜெட். மார்ச் மாதத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது என்றாலே பொருள்களின்மீது வரி போடப் போகிறார்கள், விலைவாசிகள் ஜெட் போல் ஏறப் போகின்றன, எந்தப் பொருளுக்கு வரி போடப் போகிறார்கள் என்ற கலக்கம் நிறைந்த ஆவல் மக்கள் மத்தியில் எழுவது வழக்கம். பொதுவாக பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிற மார்ச் மாதத்திற்கு முன்பாக, மகிழுந்து, இரு சக்கர வாகனங்கள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்களின் விற்பனை பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள்

வாயிலாக வெளியாகும் செய்திகள் மற்றும் வதந்திகளின் அடிப்படையில், மந்தமாகவோ அல்லது மும்முரமாகவோ இருக்கும். ஆனால், மாண்புமிகு கலைஞர் தலைமையிலான கழக அரசு கடந்த 3 ஆண்டுகளாக வரி இல்லாத நிதிநிலை அறிக்கையைத் தந்து மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது என்பதற்கு என்ன காரணம்? (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞரின் நிதான புத்தி, நேரிய பார்வை, நின்று கண்டறிந்து நெடு வழி செல்லல், நதியென ஓடி நாளெல்லாம் உழைத்தல், நாடும், மக்களும் நலம்பெற நினைத்தல் போன்றவைதான் காரணமேயன்றி, வேறு இல்லை. வரி இல்லா மிகை வரவு-செலவுத் திட்டத்தை வகுத்தளித்தமைக்குப் பாராட்டுகளைப் பதிவு செய்யும் அதே வேளையில், மனப் புழுக்கத்தினால் அதனையும் குறை கூறுவோர்களைக் கண்டு வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

2008-2009 ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 51,505.62 கோடி எனவும், ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்களும் ரூ.81,421.51 கோடி எனவும், இந்நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூலதனச் செலவு ரூபாய் 9,876.35 கோடியையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், வருவாய் வரவினங்களில் உள்ள மிகை வரவினங்களைக் கழித்துப் பார்த்தால் 9,792.30 கோடி அளவுக்குப் பற்றாக்குறை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக் கணக்கின் நிகரத் தொகையை எடுத்துக்கொண்டால் பற்றாக்குறை ரூ.2.19 கோடிதான். வருவாய் வரவுகளின் அடிப்படையில் பார்த்தால், இது ஒரு மிகை பட்ஜெட் என்றே கூற வேண்டும். 84 கோடி ரூபாய் உபரி வருவாய் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், தமிழக அரசைப் பின்பற்றி மற்ற மாநிலங்களும் பற்றாக்குறை இல்லாத பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டுமென்று பாராட்டி இருப்பது பெருமைக்குரிய ஒன்று ஆகும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையையே பார்த்துப் பழகிய நமக்கும், நாட்டு மக்களுக்கும் இந்த மிகை நிதிநிலை அறிக்கை பெரும் மகிழ்ச்சியினை அளிக்கிறது. வரவைவிட செலவு குறைந்து இருப்பது நாட்டுக்கும், வீட்டுக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்று என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது. அனேகமாக இம்மாமன்றத்தில் வீற்றிருக்கும் நான் உள்ளிட்ட பெரும்பாலானவர்கள் சந்திக்கும் முதல் மிகை நிதிநிலை அறிக்கை இதுவாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். இதற்காக நாம் அனைவரும் மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும் மனதாரப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையின் முக்கியமான அம்சங்களில் ஒன்று, இது அனைத்துத் தரப்பு மக்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டையும் கருத்தில் கொண்டுள்ளதாகும். விவசாயிகள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், பெண்கள், குழந்தைகள், கேபிள் ஆபரேட்டர்கள், முதியோர், ஆதரவற்றோர், ஊனமுற்றோர், மன வளர்ச்சி குன்றியோர், நரிக்குறவர்கள், மீனவர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர், அமைப்புசாராத் தொழிலாளர்கள், பனைத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், முன்னாள் படை வீரர்கள், சிறு வணிகர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையோர், இலங்கைத் தமிழர், தூய்மைப் பணி புரிவோர் மற்றும் அரவாணிகள் என சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களின்மீதும் அக்கறை கொண்டு, அவரது மேம்பாடுகளுக்காகத் திட்டங்கள் தீட்டி, நிதியொதுக்கீடு செய்திருப்பது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காட்டிய வழி நின்று செயலாற்றும் டாக்டர் கலைஞர் தலைமையிலான இந்த அரசின் சமூகப் பார்வையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-05

ஒரு நாட்டின் வளர்ச்சி அனைத்துத் துறைகளிலும் ஓரே சீராக இருக்க வேண்டும். ஒரு துறையிலோ, ஒரு சிலருக்கோ ஏற்படுகின்ற வளர்ச்சி நாட்டின் மொத்த வளர்ச்சி என எடுத்துக்கொள்ளக் கூடாது. அந்த வகையில், இந்த நிதிநிலை அறிக்கை வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, கால்நடை வளர்ப்பு, பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்பு, பொது விநியோகத் திட்டம், சட்டம்-ஒழுங்கு, போக்குவரத்து, நீதிமன்றம், சட்டமன்றம், சேது சமுத்திரத் திட்டம், பள்ளிக் கல்வி, உயர் கல்வி, மக்கள் நல்வாழ்வு, தொழில் துறை, தகவல் மற்றும் தொழில்நுட்பம், சிறு தொழில், சாலை மேம்பாடு, மின்சாரம், நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல், மெட்ரோ இரயில் திட்டம், வீட்டு வசதி, ஊரக வளர்ச்சி, வருவாய் நிருவாகம், சுனாமி நிவாரணப் பணி என அனைத்துத் துறைகளினுடைய செயல்பாட்டிலும், வளர்ச்சியிலும் கவனம் செலுத்தியுள்ளது பாராட்டுதலுக்குரிய அம்சம் ஆகும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று பொது விநியோகத் திட்டத்திலே, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலேதான் துவக்கி வைத்தார்கள். இன்றைக்கு இந்தத் திட்டம் அனைத்து இந்தியாவிலும் வரவேற்கப்பட்டு, அண்மையில் ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் அவருடைய மாநிலத்திலும் இன்றைக்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குகிறார்கள் என்றும், அதேபோல, வட இந்திய மாநிலங்களிலே ஒரு கிலோ கோதுமை 3 ரூபாய்க்கு வழங்குவோம் என்று அந்த மாநில முதலமைச்சர்கள் சொல்கிறார்கள் என்றால், இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய திட்டத்தை வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுக்காக 7,000 கோடி ரூபாய் கடன்களைத் தள்ளுபடி செய்தார்கள். இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் தள்ளுபடி செய்யவில்லை. அதனால்தான் நாடாளுமன்றத்திலே, விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிறார்களே, அதை எப்படிப் போக்குவது என்பதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு, நம்முடைய மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைப்போல அவர்களுக்கெல்லாம் இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நாடாளுமன்றத்திலேயே சொன்னார்கள் என்றால், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அப்படிப்பட்டதொரு சிறப்பான திட்டத்தைக் கலைஞர் அவர்கள் வழங்கியதன் காரணமாகத்தான், இன்றைக்கு மத்திய அரசாங்கம் விவசாயிகளுக்காக 60,000 கோடி ரூபாய் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கின்றது என்றால், அதற்கு வழிகாட்டியாகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய திட்டங்கள் விளங்குகின்றன என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேளாண் விவசாயிகளின் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பல்வேறு வல்லுநர் பரிந்துரைத்த கருத்துகளைப் பின்பற்றுகிற முதல் மாநிலமாக இன்றைக்குத் தமிழகம் திகழ்கிறது. உழவர் சந்தைகள் விவசாயிகளுக்காகச் சிறப்பாகப் பணியாற்றியது என்பதால், கடந்த கால ஆட்சியாளர்கள் அவற்றையெல்லாம் மூடினார்கள். ஆனால், மீண்டும் உழவர் சந்தைகளைத் தலைவர் கலைஞர் அவர்கள்



திறப்பதாக உறுதியளித்து, அதுவும் குளிர்சாதன வசதியோடு அமைப்போம் என்று விவசாயிகளுக்காக இன்றைக்கு சிறப்பான திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள்.

சித்தாந்தங்களைக் கூறுவது மட்டும் தலைமையின் இலக்கு அல்ல. புதிய சிந்தனைகளின் பிறப்பிடமாகவும் அவர் திகழவேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில், விவசாயிகள் வாழ்வு மலர 10,000 சுய உதவிக் குழுக்களை அமைக்கப் புதியதோர் திட்டம் தீட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு 10 கோடி ரூபாய் சுழல் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், கூட்டுறவு வங்கிகள்மூலம் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன்கள் சென்ற நிதியாண்டில் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், புதிய பயிர்க் கடன்கள் இந்த ஆண்டு வழங்குவதற்காக 1,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். மேலும், பயிர்க் கடனுக்கான வட்டி வீதம் 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் விவசாயிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் சிறந்த சலுகையாக இதை அறிவித்துள்ளார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இயற்கைச் சீற்றங்களின் இடர்ப்பாடுகளில் பாதிக்கப்படும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், 25 இலட்சம் உழவர்களுக்கு உதவிடும் வகையிலும், பயிர்க் காப்பீட்டு வசதிக்கென ரூபாய் 40 கோடி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கும் திட்டத்தை அறிவித்தபோது, நிலமே கிடையாது, இது வெறும் கண் துடைப்பு என்று பேசியவர்கள் வாயை மூடும் வகையில் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் 1 இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் நிலம், 1 இலட்சத்து 51 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே ஒரு சரித்திரத்தை கலைஞர் அவர்கள் படைத்திருக்கிறார்கள் என்பதற்கு அதுவே ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நில வளமும், நீர் வளமும் விவசாயிகளின் வளம் செழிக்கத் தேவையானவை. நில வளம் மேம்படச் செய்யப் பல்வேறு திட்டங்களை தேசிய வேளாண்மை அபிவிருத்திக் கழகத்தின்

ஆலோசனையின்படி செயல்படுத்தி வருகிறோம். நீர் வளம் மேம்பட, நதி நீர் இணைப்புத் திட்டம் மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக, காவிரி ஆறு, அக்கினியாறு, கோரையாறு, பாம்பாறு, வைகை ஆறு, குண்டாறு ஆகியவற்றை இணைத்து, காவிரி நீர் கிடைக்க உபரி நீரைப் பயன்படுத்த கட்டளைக் கால்வாய்த் திட்டம் அமைக்க, 165 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். அதைப்போலவே, தாமிரபரணி ஆற்றில் கிடைக்கப்பெறும் உபரி நீரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள நீர்ப் பற்றாக்குறைப் பகுதிகளில் பயன்படுத்த தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு ஆகியவற்றை இணைக்க ரூ.369 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டுள்ளதை வரவேற்கிறேன். மாநிலங்கள் இடையே நதி நீர் இணைப்பு குறித்த செயல் திட்டம் வகுக்க இயலாத நிலையில், மாநில அளவில் நதி நீர் இணைப்புத் திட்டம் முதற்கட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உணர்வுடன் மேற்கண்ட திட்டத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் நிறைவேற்றியிருப்பது, விவசாயிகளின் வாழ்க்கையை முன்னேற்றக்கூடிய ஓர் அற்புதமான திட்டம் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் சீரிய செயல் திறனால் இன்றைக்கு கிராம ஊராட்சிகளின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம், கிராம ஊராட்சிகளின் அடிப்படை மேம்பாட்டு வசதிகளுக்காக ரூ.504 கோடி ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். கிராம சாலைகள் பத்தாயிரம் கிலோ மீட்டருக்கு மேல் மேம்படுத்தப்பட்டு, இதுவரை 942 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் தமிழ்நாட்டைச் சேர்ந்தோர் பலர் தம் சொந்த ஊர் மக்களுக்குப் பயனளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகின்றனர். அவர்கள் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், பொது அறக்கட்டளை ஒன்றை இந்த அரசு அமைக்கும் என்ற அறிவிப்பு, ஒரு முன்னோடித் திட்டமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற செய்தி, சுகாதார மேம்பாட்டில் இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளின் வெளிப்பாடு



என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அனைத்துப் பேரூராட்சிகளிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்களால், இன்றைக்குப் பேரூராட்சிகள் புதுப்பொலிவுடன் மாறிய நகரமாக வளர்ந்து வருகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களது வேண்டுகோளை ஏற்று, இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான மதிப்பீடு, வீடு ஒன்றுக்கு ரூ.25,000/-லிருந்து ரூ.35,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது, இதனையடுத்து, கான்கிரீட் கூரை அமைப்பதற்கான செலவினங்களில் ஏற்படும் உயர்வினைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு வழங்கும் மானியத்தை ரூ.20,000/-ஆக உயர்த்தியிருப்பதும், அதற்காக ரூ.210 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் ஏழை மக்களின் வாழ்வில் ஒளி சேர்க்கும் நல்ல திட்டமாகும்.

'கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்று சொல்வார்கள். உலகளவில் உள்ள அறிவியல் விவரங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்துகொள்ளத்தக்க வகையில் கணினி பாடப் பயன்பாட்டிற்காகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மீதமுள்ள 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 606 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினி வழங்கப்படவுள்ளது. இதைத் தவிர, முதற்கட்டமாக அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பில் உள்ள 2,200 நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினி வழங்க நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற மாணவர்களுடைய கணினி அறிவை வளர்க்கவும், கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் அமையும். இதன் காரணமாக, படிப்பைப் பாதியில் நிறுத்தும் உணர்வு கிராம மாணவர்களிடையே குறையும் என எதிர்ப்பார்க்கலாம்.

இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இலவச பாட நூல் வழங்குவது, இலவச சீருடை, இலவச மிதிவண்டி, கல்லூரி மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம் மட்டுமின்றி ஏழையெளிய மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த சலுகைகள்

என ஏறத்தாழ ரூ.7,500 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி அனைவருக்கும் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அனைவருக்கும் உயர்நிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் இலக்கை எய்திட, மத்திய அரசு அமைத்துள்ள SUCCESS திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட மாநில அரசின் பங்காக ரூ.200 கோடி ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணம் இரத்துச் செய்யப்பட்ட காரணத்தால், கிராமப்புற மாணவர்களிடையே பள்ளிக் கல்வியைப் பாதியில் விடும் மனோபாவம் முற்றிலும் நீங்கிவிடும். பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுச் சென்ற மாணவர்களின் தொழில்நுட்ப அறிவுத்திறனை வளர்க்கவும், ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் மூலம் ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.1,000 இந்தக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

மாணவர்களின் அறிவுத் திறன் வளர, நூலகங்களின் பணி சிறப்பானதாக விளங்குகிறது. இதைக் கருத்தில் கொண்டு உலகத் தரம் வாய்ந்த நூலகம் ஒன்றை சென்னையில் அமைத்திட இந்த அரசு முன்வந்துள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன். புத்தகப் பதிப்பாளர்களும், விற்பனையாளர்களும் நல்ல முறையில் நலமுடன் வாழ அவர்களுக்காக தனியாக நல வாரியம் அமைக்க முன்வந்துள்ளது பாராட்டத்தக்கது. இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே இது ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிப்போம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூறிய நேரத்தில், அது முடியாது என வாதிட்டார்கள். இன்றைக்கு ஊருக்கு ஊர் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி விநியோகிக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்று வாயடைத்துப் போய் இருக்கிறார்கள். அதைப்போலவே, இலவச வீட்டுமனைப் பட்டா, இலவச சமையல் கேஸ் அடுப்பு இணைப்பு ஆகியவையும் ஊருக்கு ஊர் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே விநியோகிக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலேதான் வாக்காளர்கள் இந்தச் சலுகைகளைப் பெறுகிறார்கள் என்பது வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கி வருகின்ற சூழ்நிலையில்,



ஏழையெளிய மக்கள் வீட்டில் இருந்தபடியே அறிவை மேம்படுத்திக்கொள்ள இந்த அரசு திட்டம் தீட்டியுள்ளதை வரவேற்கிறேன். பொழுதுபோக்கு சாதனமாகக் கருதப்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இனி வரும் காலங்களில் கிராமப்புற மக்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் சாதனமாக விளங்கும்.

முற்பகல் 11-15

கிராமப்புற மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசும் திறன், யோகா பயிற்சி, போட்டித் தேர்வுகளுக்கான பொது அறிவுப் பயிற்சி போன்றவற்றை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சேர்த்து நடத்த தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்மூலம் அரசு திட்டமிட்டு, அதற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன்.

'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற மாண்புமிகு டாக்டர் கலைஞரின் சூளுரையை அறிக்கையின் தொடக்கத்தில் சுட்டிக்காட்டிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், தமிழறிஞர்கள் 27 பேருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்று அறிவித்துள்ளதையும் வரவேற்கிறேன்.

அரவாணிகளுக்கும், நரிக்குறவர்களுக்கும் தனி நல வாரியம் மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், அவர்கள் சுய உதவிக் குழுக்களாகவோ அல்லது தனியாகவோ தொழில் செய்யவும் உதவி பெறப்படும் என்ற அறிவிப்பு ஒரு முன்னோடித் திட்டம் என்று நான் பாராட்ட விரும்புகிறேன்.

அமைப்புசாராத் தொழிலாளர் நல மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வீட்டு வசதி, கூட்டுறவுக் கடன் 25,000 ரூபாய் வரை இரத்து, மகளிர் திருமண நிதி உதவி ரூபாய் 20,000 ஆக உயர்வு, கல்வி உதவித் தொகை பெறும் மாணவர்கள் பெற்று வரும் வருமான உச்சவரம்பு அதிகரிப்பு, படை வீரர் குடும்பக் கருணைத் தொகை ரூபாய் 5 இலட்சமாக உயர்வு, கைத்தறி நெசவாளர் கடன் வட்டி விகிதம் 8 சதவீதமாகக் குறைப்பு ஆகிய திட்டங்களை அறிவித்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அத்தனை தரப்பு மக்களும் மனதாரப் பாராட்டுகிறார்கள். எல்லாவற்றுக்கும் நல வாரியமா என்று வினவுகிறார்கள். எல்லாப் பிரச்சினைகளையும் அரசே சமாளிக்க முடியாது. அந்தத் துறை சார்ந்த பிரச்சினைகளை ஆய்ந்து சீர் செய்திட அதில் தொடர்புடையவர்கள் அடங்கிய நலக் குழுக்கள், வாரியங்கள் அமைப்பதன்மூலமே நல்ல மாற்றங்களை அவர்கள் எதிர்பார்த்த

வகையில் செய்திட இயலும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் நல வாரியங்கள் அமைப்பது பற்றிய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்கள். இது அனைவராலும் வரவேற்கக்கூடியது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி, please, the House should be in order.

**திரு. கு. பிச்சாண்டி:** அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்கள் ஆர்வமுடன் எதிர்பார்த்து வந்த அகவிலைப்படி உயர்வு, மருத்துவ சிகிச்சை செலவின ஈட்டுத் தொகை, மத்திய அரசு அமைத்துள்ள 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்கீழ் மத்திய அரசு அறிவிக்கும் ஆணையை ஏற்று உரிய வகையில் மாநில அரசு ஊழியர்களுக்கும் அளிக்கும் அறிவிப்பு இந்தப் பிரிவினரிடையே மன மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

"சாலையோரத்திலே வேலையற்றதுகள்

வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்

வேந்தே! அதுதான் காலக் குறி!"

என்ற அண்ணாவின் கவலையை முடிவுக்குக் கொண்டு வர, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் ரூபாய் 99 கோடி நிதி ஒதுக்கீடும், இளைஞர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கென ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கீடு என்ற அறிவிப்பும், வேலையின்றித் தவிக்கும் இளைஞர்களின் மனதில் நம்பிக்கை ஒளியினை ஏற்படுத்தியமைக்கு இலட்சக்கணக்கான இளைஞர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இளைஞர்களின் நலன், மீனவர்களின் நலன், பெண்கள் நலன், நெசவாளர்களின் நலன், விவசாயிகளின் நலன் என, இவையெல்லாம் பொதுவாக ஆட்சியாளர்கள் சிந்திப்பதுதான். ஆனால், யாரும் சிந்திக்காத ஒரு பகுதி இந்த மண்ணில் உள்ளது. மனிதர்களாக அவர்களை யாரும் மதிப்பதே இல்லை. பிறப்பின் குற்றத்தால் வாழ்நாள் முழுவதும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு, அவமானங்களாலும், வலிகளாலும் பாதித்து வந்த அரவாணிகள்



வாழ்க்கையை இதுவரை யாரும் உணரவில்லை. அதை உணர்ந்த தலைவர் அவர்கள், அவர்களை மனித நேயத்தோடு அரவணைத்து, அரவாணிகளுக்கென தனி நல வாரியம் அமைத்தும், குடும்ப அட்டை வழங்கியும், இந்த நிதியாண்டில் இடைக்கால தங்கும் விடுதி ஒன்று தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட, பரிகாசத்திற்கு உள்ளாக்கப்பட்ட ஒரு பிரிவினர், யாரிடமும் இனி யாசகம் கேட்க வேண்டாம் என்று அரவாணிகளின் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் அறிவிப்பு வெளியாகி உள்ளதை மனித நேயம் கொண்ட யாவரும் வரவேற்பார்கள்.

விலைவாசி உயர்வும், பண வீக்கமும் தொன்றுதொட்டு நிலைபெற்று நிற்பவை. அவற்றைக் கட்டுப்படுத்த மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. குறிப்பாக, சிமெண்ட் விலை விறுவிறு என ஏறி வந்த சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சிமெண்ட் ஆலைகள் தாங்களாகவே முன்வந்து விலையைக் குறைக்க வேண்டுமென வற்புறுத்தியதோடு மட்டுமல்லாமல், குறைந்த விலையில் சிமெண்ட் விற்பதற்கும், ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதும் பாராட்டத் தகுந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக 2006-லே பொறுப்பேற்றது முதல் 2 ஆண்டு காலத்திற்குள்ளாக ரூ.17,583 கோடி முதலீட்டில் பெருந் தொழிற்சாலைகளைத் துவக்க 13 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து சாதனை படைத்துள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் 4 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைத்தல், அதிலே செய்யாறுக்கு ஒரு மண்டலம் வழங்கி இருப்பது, சிறு வணிகர்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்துக் கூட்டுறவு வங்கிகளின்மூலம் கடன் வழங்குதல் போன்ற திட்டங்களை அறிவித்துள்ளார்கள். ரூபாய் 2,300 கோடி மதிப்பில் சென்னையில் புதிய அதிவேக வட்டச் சாலை, மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு போன்ற திட்டங்களை அறிவித்துள்ளது, தொழில் துறையில் தமிழகம் இந்தியாவிலேயே மிக முன்னேறிய மாநிலமாக உயர்ந்துகொண்டிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சித்த மருத்துவ மருந்துகள், பன், ரஸ்க், வெல்லம், சோயா எண்ணெய் ஆகிய பெருட்களுக்கு வரி விலக்கு; 4 இலட்சம் மகளிரை உறுப்பினராகக் கொண்ட 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள், ரூபாய் 15 கோடி அளவிற்கு நெசவாளர்களுக்கு வீடு கட்டும் கடன் இரத்து, கேபிள் ஆபரேட்டர்களுக்கு கேளிக்கை வரி இரத்து, ரூ.11 கோடி கடன் வட்டி இரத்து போன்றவை குறிப்பிடத்தக்க சிறப்புத் திட்டங்கள் ஆகும்.

முற்பகல் 11-20

மக்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டு புதிதாக மருத்துவக் கல்லூரிகளை சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் அமைப்பதும் வரவேற்கத்தக்கது. அதேபோல, வளர்ச்சி பெறுகின்ற மாவட்டமாக திருவண்ணாமலை மாவட்டம் இருக்கின்ற காரணத்தால்--கலைஞர்தான் அந்த மாவட்டத்தை உருவாக்கியவர் என்ற முறையில் அந்த மாவட்டத்திற்கும்--ஒரு மருத்துவக் கல்லூரியைத் திருவண்ணாமலையிலே வழங்க வேண்டும்; கால்நடை மருத்துவக் கல்லூரியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் இயக்கத்தின் துவக்க நாயகன், துடிப்பு மிக்க இளைஞர்களைத் தட்டி எழுப்பிய ஆற்றல் மிக்க தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவை உலகம் வியக்கும் விழாவாக, கட்சி வேறுபாடின்றிக் கொண்டாடுவோம் என்று அறிவித்திருப்பது மன மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த பட்ஜெட், 'வெறும் வார்த்தைகளின் அணிவகுப்பு' என்றும், 'படிப்பைப் பாதியில் நிறுத்தும் குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டு வரத் திட்டம் இல்லை' எனவும், 'பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் இல்லை' எனவும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறி வருவதைப் பார்க்கிறபோது, தம் சீடர்களுக்கு ஒரு குரு கூறிய கதைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு விவசாயி இரவு காவலுக்காக வயலுக்கு வரும்போது, கையில் லாந்தர் விளக்கு மட்டும் எடுத்துக்கொண்டு வந்தான். கடுங்குளிராக இருந்ததால், சுருட்டு புகைத்தால் நன்றாக இருக்கும் என்று கருதிய நேரத்தில் மடியைத் தடவினான், தீப்பெட்டி கொண்டு வரவில்லை எனத் தெரிந்தது. விளக்கைத் தூக்கிக்கொண்டு பக்கத்து வயலுக்கு நடந்தான். அங்கிருந்த விவசாயியிடம் தீப்பெட்டி கேட்டான். அதைக் கேட்ட விவசாயி சிரித்தான். 'இதைக் கேட்கவா



இவ்வளவு தூரம் வந்தாய்; உன் கையில் உள்ள லாந்தர் விளக்கில் அதைப் பற்ற வைத்துக்கொண்டிருக்கலாமே; உனக்குத் தோன்றவில்லையா?' என்று சொல்லிச் சிரித்தான். அதைப்போல, கையில் பட்ஜெட் புத்தகத்தை வைத்துக்கொண்டு, அதிலிருக்கிற விவரங்கள் குறித்து கவனம் செலுத்தாமல் (மேசையைத் தட்டும் ஒலி) குறை கூற வேண்டுமென்பதற்காக இத்தகைய வார்த்தைகள் அடங்கிய அறிக்கைகளை வெளியிடுவது வருந்தத்தக்கது.

தலைவிதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்றால், சொந்த முயற்சி, அறிவுத் திறன் எல்லாம் அடிபட்டுப் போய்விடும். எந்த ஒரு விளையாட்டிலும் இரு சாராருக்கும் சமமான வெற்றி வாய்ப்பு இருப்பினும், அந்த ஆட்டத்தின் தலைவன் திறமை மிக்கவனாக, சரியான நேரத்தில், முறையான அணுகுமுறையைக் கையாளும் சூழ்நிலையில் அந்த அணி வெற்றி வாய்ப்பைப் பெறுகிறது. அதைப்போலவே, தமிழகத்தின் நிதிநிலைமை, அலுவலர், ஊழியர் செயல்பாடு ஆகியன மாறாத் தன்மையுடன் இருந்த நிலைமையிலும், அந்த ஆட்சித் தலைவரின் அறிவாற்றல் மிக்க அணுகுமுறை, சீரிய சிந்தனை, கவனமான திட்டமிடல் நல்ல பலன்களை அளிப்பதாக அமைகிறது. அந்த வகையிலே, எங்கள் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ளபோதுதான் ஏழைகள் ஏற்றம்பெற, அனைத்துத் தரப்பிலும் பயன்பெறத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாகப் பொறுப்பேற்று, சமர்ப்பித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த பட்ஜெட் ஆழ்ந்து சிந்தித்து உருவாக்கப்பட்ட திட்டங்களின் அணிவகுப்பு என்றும், ஏழை மக்களை ஏற்றம்பெறச் செய்யும் அபூர்வ ஒளி விளக்கு எனவும் கூறி, என் உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்ட நேரத்தில் நன்றாகப் பேசினீர்கள். வாழ்த்துகள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். 15 நிமிடங்கள். Kindly restrict your speech.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது விவாதத்தில் பேசுகிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வருடைய வழிகாட்டுதலில்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில்- -நிதிநிலை அறிக்கை கொடுத்த நாளில்கூட அது பெரிய புத்தகமாக இருந்தது. நேற்று எங்களுக்குக் கொடுத்த சிறிய புத்தகத்தில் 'புதிய திட்டங்கள்' என்கிற தலைப்பில் 116 திட்டங்களை மிக கனகச்சிதமாக எங்களுக்கு அளித்து, தமிழகத்து மக்களுக்கு நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டு போய் சேர்த்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, காங்கிரஸ் கட்சி சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிற அதே வேளையில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையை மூன்று மணி நேரம் நின்று படித்து, வெற்றிகரமாக வெளியே செல்கிறபோது, முதலமைச்சர் அவர்கள், இது ஞானதேசிகன் தயாரித்த அறிக்கையா அல்லது ஞானசேகரனுக்கு நிதிநிலை அறிக்கையா என்றுகூடச் சொன்னார்கள். அந்த அளவிற்கு வேலூரைப் பொறுத்தளவில் 1991 ஆம் ஆண்டிலிருந்து நான் வைத்த கோரிக்கை, எங்களுடைய வேலூர் பகுதி மக்களுடைய கோரிக்கை, மாநகராட்சியாக வேலூர் நகராட்சி உயர்த்தப்பட வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்த்து அதை அறிவித்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய வேலூர் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

மாநகராட்சியோடு இல்லாமல், பொதுவாக எங்கள் பகுதியில் நிறைய பொறியியல் கல்லூரிகள் வந்து, ஆயிரக்கணக்கான மாணவர்கள் இப்போது Computer Science, அதேபோல Information Technology போன்ற படிப்பையெல்லாம் படித்துவிட்டு, வேலைவாய்ப்பு என்று வருகிறபோது அவர்கள் சென்னை அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளையெல்லாம் தேடி ஓடக்கூடிய நிலையில்லாமல், எங்களுடைய வேலூர் பகுதியிலேயே அவர்கள் பணியாற்றக்கூடிய ஒரு நல்வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலேயே 'மாநகராட்சி முதலில் ஆகட்டும், மாநகராட்சி வந்தால் பிறகு தானாக I.T. Park வரும்' என்கிற கருத்தை இங்கே



சொன்னார்கள். ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையில் வேலூர் நகரில் I.T. Park அமைக்கப்படும் என்கிற அறிவிப்பைத் தந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும் ஒரு முறை காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல எங்களுடைய கோரிக்கையை எல்லாம் ஏற்று 2000 ஆம் ஆண்டு G.O. கொடுத்து, பிறகு படிப்படியாக இப்போது மூன்றாம் ஆண்டு M.B.B.S. படிக்கக்கூடிய அளவிற்கு ஒரு மருத்துவக் கல்லூரியைத் தந்த அதே வேளையில், இப்போது இரண்டு கோடி ரூபாயில் ஒரு அரசு செவிலியர் பள்ளியை வேலூருக்கு வழங்கியிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் மீண்டும் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, Government Pentland Hospital. 80 ஆண்டுகளாக இயங்கி வந்த அந்த மருத்துவமனை மூடப்பட்டு, அது அடுக்கம்பாறை பகுதிக்கு மருத்துவமனையோடு சென்றுவிட்ட பிறகு, அந்த மருத்துவமனை மூடப்பட்டுவிட்டது. தேர்தல் நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்தவுடன், அந்த மருத்துவமனை திறக்கப்படும் என்று அறிவித்து, அதற்கான ஓர் அரசாணையும் பிறப்பித்திருக்கிறீர்கள். ரூ. 7 கோடியில் விபத்து சிகிச்சை மையம் அமைப்பதற்கும் இப்போது நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் தந்திருக்கிறீர்கள். அதற்காகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆளுநர் உரையிலே, விமான நிலையம் ஒன்று வேலூரில் அமைப்பதற்கு நீங்கள் ஏற்கெனவே அறிவிப்பு செய்திருக்கிறீர்கள். ஆனால் அந்த நல்ல அறிவிப்பு வருகிறபோது எங்களோடு துணை நிற்க வேண்டிய பாட்டாளி மக்கள் கட்சி சில நேரங்களில், அங்கே அந்த நிலத்தை எடுக்கக் கூடாது என்று ஓர் உண்ணாவிரதத்தை அல்லது ஓர் ஆர்ப்பாட்டத்தை அங்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். வளர்ச்சி என்று வருகிறபோது நிலங்களை எடுத்துத்தான் சாதிக்க முடியுமேயொழிய, எதற்கெடுத்தாலும் அதைக் கெடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இல்லை. அவர் என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நண்பர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வேலூரில், இப்போது பொற்கோயில் வந்து விட்டது. 15,000 பேர் படிக்கக்கூடிய V.I.T. பல்கலைக்கழகம் ஒன்று அங்கே இருக்கிறது. பொறியியல் கல்லூரி இருக்கிறது. மருத்துவக் கல்லூரி இருக்கிறது. திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு இப்போதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். இவ்வளவு வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த வேலூருக்கு விமானப் பயணிகள் வரக்கூடிய ஒரு வாய்ப்பு வரக்கூடிய சூழலை நீங்கள் உடனிருந்து செய்ய வேண்டும் என்று நான் நம்முடைய வேல்முருகன் உள்ளிட்ட மற்ற அத்துணை நண்பர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் வளர்ச்சி என்று வருகிறபோது நிலத்தை எடுக்காமல் நாம் வளர்ச்சியைச் செய்ய முடியாது. ஆகவே நீங்கள் அதற்கெல்லாம் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு எங்களுடைய வேலூர் பகுதிக்கு வழங்கியிருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன கேட்டுவிட்டார்? துணை நிற்கச் சொல்கிறார். அதிலே உங்களுக்கு என்ன கருத்து வேறுபாடு?

**திரு. சி. ஞானசேகரன்:** I am not yielding. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. He is not yielding என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) இதோ பாருங்கள். அடுத்து ராஜா பேச இருக்கிறார். அப்போது சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பொறுங்கள். ஒரு second.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில், அரசு கொண்டு வருகின்ற எந்த நலத் திட்டங்களையும், விமான விரிவாக்க நிலையங்களையும் அடியோடு எதிர்க்க வேண்டும் என்பது எங்களுடைய நோக்கமல்ல. எங்கள் அய்யாவின் நோக்கமல்ல.



பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில், பாட்டாளி மக்களுக்கு பாதிப்பு இல்லாத அளவிற்கு, அப்பகுதியில் வாழ்கின்ற, ஆண்டாண்டு காலமாகக் குடி வாழ்கின்ற மக்களை அப்புறப்படுத்தாமல், அதற்காக இருக்கின்ற அரசு புறம்போக்கு நிலங்கள் அல்லது மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் அல்லது தரிசு நிலங்களைப் பயன்படுத்தி, விமான நிலையங்களை விரிவாக்கிக்கொள்ளுங்கள். ஆனால், அரசு குடியிருப்புப் பகுதிகளிலே நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையேதான் அவரும் சொன்னார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முடியவில்லையே உங்களால்! Quick ஆக முடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் நீங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நோக்கம் அதுதானே தவிர, காங்கிரஸ் நண்பர்கள் கேட்பதுபோல, விமான விரிவாக்கம் வேலூர் நகரிலே வருவதை நாங்கள் வரவேற்கிறோம். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அந்த இடத்தில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்கள், மாற்று இடத்தைத் தேர்வு செய்துகொள்ளுங்கள், நாங்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்கின்ற குடியிருப்புப் பகுதி என்றுதான் வேண்டுகோள் வைக்கிறார்களே தவிர, அதிலே பாட்டாளி மக்கள் கட்சி, வேலூர் விமான நிலையம் வர வேண்டாம் என்கிற எந்தக் கருத்தையும் எந்த நேரத்திலும் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Mr. பாண்டுரங்கன், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** எனக்கு டைம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் ஒரு நாளும் பேசமாட்டேன் என்கிறார். இப்போதுதான் பேசுகிறார். சொல்லுங்கள்.

முற்பகல் 11-30

*திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலம் கனியும்போது என்னுடைய பேச்சு அவையில் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் விமான நிலைய விரிவாக்கம் சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கின்றேன். அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைத் தாங்கள் எடுத்துக்கொள்கின்றபோது, இது சம்பந்தமாக விரிவாகப் பேசவிருக்கின்றேன் என்பதை மட்டும் நான் இரத்தினச் சுருக்கமாகத் தெரிவித்துக்கொண்டு, எந்த நிலையிலும், என்னுடைய தொகுதிக்குட்பட்டிருக்கின்ற அப்துல்லாபுரம் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்கின்றபோது, அங்கிருக்கின்ற வேளாண் பெருமக்கள் மற்றும் பொது மகக்ளுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் விரிவாக்கம் செய்தால், அங்கேயிருக்கின்ற வேளாண் பெருமக்கள் மற்றும் பொது மக்களுடைய கல்லறையின்மீதுதான் அந்தப் பணி நடக்கும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு துணை சபாநாயகர்மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் ஒத்துக்கொள்கிறார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லறையைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியெல்லாம் பேசக்கூடிய சூழ்நிலையில் இப்போது நடந்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சி இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நிச்சயமாக கல்லறையில் இந்த விமான நிலையம் அமையாமல், மகிழ்ச்சிகரமாகவே, நாமெல்லாம் விமானத்தில் பயணிக்கக்கூடிய அளவிற்கு இந்த நல்லாட்சியில் நிச்சயமாக இந்த விமான நிலையத்தைக் கொண்டு வர, ஒரு சூழலை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே நூற்றுக்கணக்கான குடியிருப்புகள் இல்லை. அங்கே ஏற்கெனவே விமான நிலையம் இருக்கிறது. இருப்பதைத்தான் விரிவாக்கம் செய்ய முடியுமேயொழிய, இன்னோர் இடத்திற்குக் கொண்டு போய் வைப்பது என்பது இயலாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இங்கே சில கோரிக்கைகளை நான் முதலிலே வைத்துவிட்டு, பிறகு விவாதத்திற்குச் செல்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அதேபோல், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், வேலூர் நகரில் பாதாளச் சாக்கடைத்



திட்டத்திற்காக இரண்டே கால் ஆண்டுகளுக்கு முன்னாலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 30 கோடி ரூபாய் வழங்கப்பட்டுவிட்டு, இன்னும் பணி தொடங்கப்படாமல் இருக்கிறது. அதேபோல, வேலூர் பஸ் ஸ்டாண்டு இப்போது Local Planning Authority - L.P.A.-யால் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை நகராட்சிக்கு மாற்ற வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்து, இன்னும் அது செயல்படாமல், மேற்கூரையே இல்லாமல் இருந்து கொண்டிருக்கக்கூடிய காலக்கட்டத்தில், 45 இலட்சம் ரூபாயை இப்போது எம்.எல்.ஏ. நிதியிலிருந்துதான் கொடுத்திருக்கிறேன். அதை நகராட்சியே எடுத்து நடத்துவதற்கான ஆணையை உடனே அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு ஒரு சட்டக் கல்லூரியை 2000 ஆம் ஆண்டே தொடங்குவதாக ஏற்கெனவே சொல்லப்பட்டு, அறிவிக்கப்பட்டு அப்படியே நின்றுகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு எங்களுடைய மண்ணின் மைந்தரே சட்டத் துறை அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே, அந்த இடத்தில், இந்த ஆண்டு அரசு சட்டக் கல்லூரியை வேலூரிலே கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இரண்டு மாதங்களுக்கு முன்னால் பிறப்பிக்கப்பட்ட அந்த G.O.-விற்கு நாம் உயிர் கொடுத்து, Government Pentland Hospital-ஐ உடனடியாகத் திறக்க வேண்டும். அது D.M.E. side-லே இருக்கவேண்டும்; D.M.S. side-க்கு அதை மாற்றக்கூடாது என்கிற கோரிக்கையையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது பொற்கோயில் வந்துவிட்ட காரணத்தினாலே, தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வேலூருக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். மாமல்லபுரத்தில் இருப்பதுபோன்று, வேலூரில் சுற்றுலா அலுவலர் ஒருவரை நியமித்து, சுற்றுலா அலுவலகத்தைப் பெரிய அளவில் அங்கே திறந்து, சுற்றுலாத் துறைமூலமாக 15 பேருந்துகளை இயக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே ஒரு Circuit House இருக்கிறது; அது போதவில்லை. இப்போது இருக்கக்கூடிய Circuit House வரக்கூடியவர்களுக்கே சரியாகப் போய்விடுகிறது. ஆகவே, புதிதாக ஒரு Circuit House-ஐ இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நீங்கள்

கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொற்கோயிலுக்குச் செல்வதற்காக வேலூரைச் சுற்றி உடனடியாக ஒரு ring road அமைக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வைத்துவிட்டு, இப்போது விவாதத்திற்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு பேணப்படவேண்டும் என்கிற கருத்தை நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, நிதி அமைச்சர் அவர்கள் சொல்லி, அதிலே பல கோடி ரூபாய் இன்றைக்குக் காவல் துறைக்காக ஒதுக்கப்படுகிறது. இப்போது காவல் துறை ஆங்காங்கே செயல்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, ரியல் எஸ்டேட்—ஒரு ஏக்கர் நிலம் இன்றைக்கு ரூ.5 கோடி, ரூ.6 கோடி என்ற அளவிற்கு விலை ஏறிவிட்ட பின்னால், இப்போது எங்கு பார்த்தாலும், கூலிப் படையை ஏவிவிட்டு சில பேர் சில குற்றங்களைச் செய்து, சில பேர் உயிரை எடுப்பதும், கை, கால்களை எடுப்பதும் போன்ற செயல்களில் இறங்கிக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, கூலிப் படைகளுடைய அட்டகாசம் இப்பொழுது ஆங்காங்கே பெருகிக்கொண்டிருக்கக்கூடிய நிலையைக் காவல் துறை இரும்புக் கரம் கொண்டு அடக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, rowdy list-ஐ இப்பொழுது இரண்டு மாதத்திற்கு முன்னாலேகூட எடுத்தார்கள். பழைய rowdy list-ஐ எல்லாம் எடுத்து, நீங்கள் அவர்களையெல்லாம் கண்டித்து வைத்தால்தான், சட்டம்-ஒழுங்கைச் சரியான முறையிலே நாம் பாதுகாக்க முடியும் என்கிற கருத்தையும் சொல்லி, இங்கே rowdy list-ஐ மீண்டும் நீங்கள் பரிசீலனை செய்யக் கேட்டுக்கொள்கிறேன். N.B.W. ரொம்ப நாள் நிலுவை—நேற்றைக்குக்கூட ஒரு பத்திரிகையில் படித்தேன்; இப்போது தூத்துக்குடியிலே ஜெயக்குமார் என்கிற rowdy மேலே 13 பிடிவாரண்டுகள் இருக்கின்றன; 13 கொலை வழக்குகள் இருக்கின்றன. இப்படியெல்லாம் இருக்கக்கூடியவர்கள் எங்கோ ஒளிந்துகொண்டு, சில பேர் சில கூட்டாளிகளை வைத்துக்கொண்டு, அவர்கள் மிரட்டிப் பணம் பறிக்கக்கூடிய சூழல் எல்லாம் இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த rowdy-களை அடக்குவதற்கும், அதேபோல கூலிப் படைகளை வேரறுப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 11-35

அதேபோல, பாலியல் பலாத்காரம்; பாலியல் பலாத்காரத்தைப் பொறுத்தளவில், இப்பொழுது ஐந்து நிமிடங்களுக்கு ஒன்று தமிழகத்தில் நடைபெறுவதாக 'ஜூனியர் விகடன்' பத்திரிகையிலே ஒரு கட்டுரையிலே செய்தி வந்தது. அதிலே தேசிய குற்றப் புள்ளிவிவரப் பிரிவு விவரத்தைப் பார்த்தால் நான்காவது இடத்தை, இந்தியாவே வகிக்கிறது என்றுகூடச் சொல்லுகிறார்கள். இப்படி இருக்கக்கூடிய நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், ஆங்காங்கே இருக்கக்கூடிய சிறு, சிறு வழக்குகளைக்கூட பாலியல் பலாத்காரக் கணக்கிலே கொண்டு வந்து சொன்னாலுங்கூட, உலக மகளிர் தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடிக்கொண்டிருக்கிற இந்த வேளையில், அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பை உருவாக்கக்கூடிய வகையில், பாலியல் பலாத்காரங்களை அறவே தடுப்பதற்குக் காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மாவோயிஸ்ட். இப்பொழுதெல்லாம் பார்த்தால், ஆந்திரா பக்கத்தில் இருக்கக்கூடிய காரணத்தினாலே சில காடுகள், குறிப்பாக, எங்களுடைய ஆந்திரா பார்டரில் இருக்கக்கூடிய காடுகளில் மாவோயிஸ்ட்கள் நிறைய training camp-களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த training camp-களில் தமிழ்நாட்டு இளைஞர்களையும் ஈர்ப்பதற்கான ஒரு சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலை வந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எங்களுடைய மாவட்டம் வறட்சியிலே இருந்துகொண்டிருக்கக்கூடிய ஒரு மாவட்டம். நேற்றுகூட விவாதம் பண்ணுகிறபோது, எங்கு பார்த்தாலும் மழை; எங்கு பார்த்தாலும் வெள்ளம்; ஆனால், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தளவில், வாரத்திற்கு ஒரு முறைகூட குடிநீர் கிடைக்காத ஒரு சூழல் இருந்துகொண்டிருக்கக்கூடிய அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது.

நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர்தான் அடிக்கடி சொல்வார்கள், சங்க இலக்கியங்களில் வருவது, சங்க காலத்தில் ஒரு பக்கம் மங்கள ஓசை கேட்டுக்கொண்டிருக்கும். இன்னொரு பக்கம் ஒப்பாரி, அந்தப் பாடல், இறந்தவர்களுக்குப் பாடக்கூடிய பாடல் ஒலிக்கக்கூடிய நிலை இருப்பதுபோல, ஒரு பக்கம் வெள்ளம்; எங்களுடைய பக்கம் வறுமை. இப்போது, மாண்புமிகு உள்ளாட்சித்

துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கே ஓர் அறிக்கை வைத்தார். இங்கே ஒரு தீர்மானத்தையும் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்திலே, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகியவை வறட்சியிலே வறண்டுகொண்டிருக்கக்கூடிய மாவட்டங்கள் என்று சொல்லி, அதிலே இப்பொழுது கர்நாடகாவிலே இருக்கக்கூடிய கட்சிகள் எல்லாம் அரசியல் செய்துகொண்டிருப்பதற்காக சில எதிர்ப்புகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த எதிர்ப்பை மாண்புமிகு பிரதமருடைய கவனத்திற்குக் கொண்டு சென்ற முதலமைச்சருடைய கடிதத்தையெல்லாம் சொல்லி, இங்கே அவையிலே ஏகமனதாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்—வறண்ட மாவட்டங்கள் என்பது கிருஷ்ணகிரி, தருமபுரி மட்டுமல்ல; வேலூரும் ஒரு வறண்ட மாவட்டந்தான்; அந்த கிருஷ்ணகிரியிலாவது fluoride மட்டும் கலந்திருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் பார்த்தால், தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவு நீர் முழுமையாக 250 அடி ஆழத்திற்குச் சென்று குடிநீரையே கெடுத்துவிட்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள் இந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை, தயவுசெய்து கிருஷ்ணகிரியோடு நிறுத்தி விடாமல், எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கும் இப்பொழுதே இணைத்து எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்பான வேண்டுகோளை எங்களுடைய மாவட்டத்து மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுதே நீங்கள் வைத்தீர்களென்று சொன்னால், அதிலே ஒரு 500 கோடி ரூபாய் நீங்கள் மிச்சப்படுத்தலாம் என்றுகூட சொல்கிறார்கள். காரணம், இப்பொழுதே அதற்கான pipe design, அதேபோல pumping station போன்றவற்றையெல்லாம் நிர்மாணிக்கிறபோது, வேலூர் மாவட்டத்திற்கும் சேர்த்து நீங்கள் அதைக் கொண்டு வர வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கிறபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறபோது இதே அவையில் பேசியிருக்கிறார்கள். சென்னைக்கும் அந்த ஒகேனக்கல் குடிநீர்தான் ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று பேசியிருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் நெம்மேலியில் கடல் நீரை சுத்தப்படுத்த வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டாலும் சரி, அல்லது மீஞ்சூரிலே கொண்டு வந்தாலும் சரி, இந்த சென்னை மாநகரம் பெரிய அளவில் வளர்ந்து வந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, இந்தத் தண்ணீர் போதாது. ஆகவே, சென்னைக்கும்கூட எதிர்காலத்தில் நீங்கள்



ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தை இப்போதே தீட்டினால்தான் எதிர்காலத்தில் சென்னையும் தாக்குப் பிடிக்கும். ஆகவே, இப்பொழுதே அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது சொன்ன அந்தக் கருத்தை, நீங்கள் இப்பொழுது முதல்வராக இருக்கிறபோது சென்னைக்கும் சேர்த்து, எங்களுடைய வேலூருக்கும் சேர்த்து அதை நிறைவேற்றுவதற்கான முழு முயற்சியை இப்பொழுதே எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட time முடிந்து விட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடுகள் இருந்தன. அதையெல்லாம் கொஞ்சம் கழித்துக்கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதற்கெல்லாம் ஒரு நிமிடம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் இன்னொரு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக எல்லாருக்கும் நல வாரியம் வந்துவிட்டது. 166 அறிவிப்புகள். எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இப்பொழுது என்னை அதைப் பேசு, பேசு என்கிறார்கள். எல்லோரையும் பார்த்துவிட்டீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒரு நல வாரியம் அமைக்காவிட்டால் போகிறது. ஐதராபாத்தில் இருப்பதுபோல, பெங்களூரில் இருப்பதுபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு காலனியாவது அமைத்துக் கொடுங்கள் என்று பணிவன்போடு இப்பொழுதே கோரிக்கை வைக்கிறார்கள். ஏனென்றால், கடைசி நாளில் கோரிக்கை வைத்தால், நீங்கள் ஒரு நாளில் அதை decide பண்ணி முடிக்க முடியாது. ஆகவே 45 நாள் நீங்கள் அதை சிந்தனை செய்து—ஐதராபாத்தில் இரண்டு கிரவுண்ட் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், பெங்களூருவிலே கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று ஒரு காலனியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைத்துக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு

வட்டியில்லாக் கடன் ஐதராபாத்திலே முன்பு ரூ.15 இலட்சம் கொடுத்தார்கள். இப்பொழுது ரூ.15 இலட்சத்தில் வீடு கட்ட முடியாது. காரணம் சிமெண்ட் விலை, கம்பி விலை எல்லாமே ஏறிப் போயிருக்கிற காரணத்தினாலே, 50 இலட்சம் ரூபாய் வீடு கட்டுவதற்காக வட்டி இல்லாக் கடனையும் நீங்கள் கொடுப்பதற்கு இப்பொழுதே ஆணையிட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற நிகழ்வுகள். இப்பொழுது நீங்கள் கலர் டி.வி. எல்லா வீட்டிற்கும் கொடுத்துவிட்டீர்கள். கலர் டி.வி. கொடுத்துவிட்டு இப்பொழுது அதிலே யோகா பயிற்சி போன்றவற்றையெல்லாம் திறந்தநிலைப் பல்கலைக் கழகக் குழுவால் நீங்கள் நடத்துவதாகக்கூட . . .

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நேரம் முடிந்துவிட்டது. நீங்கள் பட்ஜெட்டுக்கே வரவில்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடம். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகளை நேரிடையாக ஒளிபரப்புச் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி ஒதுக்கீட்டைச் செய்து, உடனடியாக ஆணையிட வேண்டுமென்கிற கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் கொஞ்சம் late ஆகும் என்கிற காரணத்தினால், கலைஞர் டி.வி.யிலாவது நீங்கள் daily ஒரு மணி நேரம் இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்கு அதற்காக, நீங்கள் slot time-ஐக் கொடுத்து, நீங்கள் அதையும் வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று, மழையால் பாதித்த விவசாயிகளுக்குப் பொதுவாக நெல், மிளகாய் போன்ற எல்லாவற்றிற்கும் இப்போது ஏழாயிரம் ரூபாய் ஒரு எக்டேருக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். (குறுக்கீடு) ஏழரை ஆயிரம் ரூபாய். அதுபோல உரிய விலை கொடுத்தாலும்கூட, விவசாயிகளுக்கு பயிர்க் கடனை இப்போது எல்லாக் கூட்டுறவு வங்கிகளிலும் கொடுத்தால்தான் அவர்கள் பயிர் செய்ய முடியும். உரிய விலை - நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று நீங்கள் மத்திய அரசை



வலியுறுத்திக்கொண்டிருக்கிறீர்கள். இப்போதே நெல் கொள்முதலுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கும், கரும்புக்கு 1,500 ரூபாய் டன் ஒன்றுக்குக் கொடுப்பதற்கும் நீங்கள் உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு, சிமெண்ட் விலை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா, நீங்கள் பேசுங்கள். உங்களுக்குப் பத்து நிமிடங்கள்தான்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், தலைவர் ஜி.கே. மணி அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை*
*நாடி இனிய சொலின்"*

நல்லவைகளை விரும்பி, இனிய சொற்களைக் கூறினால், கேடுகள் ஒழிந்து நல்லது பெருகும் என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கிறார். அந்த வகையிலே, இந்த ஆட்சியிலே ஏற்படுகின்ற நல்ல காரியங்களைப் பாராட்டி, இந்த ஆட்சிக்குச் சொல்ல வேண்டிய கருத்துகளைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நீண்ட காலக் கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதற்கு இந்த அரசை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல, சமச்சீர்க் கல்வி முறையை இந்த ஆண்டே கொண்டு வருவோம் என்ற உத்தரவாதத்தை வழங்கியிருக்கிறீர்கள். அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். வேளாண்மைத் துறைக்கு 7,892 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. மக்கள் நல்வாழ்வுக்காக 2,741 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறோம். அதே வேளையிலே, மொத்த வருமானத்திலே 7 சதவீதத்தை மக்கள் நல்வாழ்வுக்காக ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், insurance திட்டத்தைக் கொண்டு வந்ததற்காகவும், 4 சதவீத வேளாண் கடனை வழங்குவதற்காகவும் இந்த அரசு சொல்லியிருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிழல் நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு அம்சங்கள் தமிழக நிதிநிலை அறிக்கையிலே இடம்பெற்றிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

இப்பொழுது எனக்கு முன்பாக பேசிய அண்ணன் ஞானசேகரன் அவர்கள், வேலூரிலே விமான நிலையம் வர வேண்டாம் என்று, நாங்கள் தடுப்பதாகச் சொன்னார்கள். நான் அவருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன், அங்கே மூன்று பஞ்சாயத்துகள் போகின்றன; ஆயிரம் வீடுகள் இடிக்கப்பட இருக்கின்றன; மூன்று ஏரிகள் அந்த விமான நிலையத்திற்காக எடுத்துக்கொள்ளபட இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் எந்த நீர் நிலைகளையும் எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், 1,000 குடும்பங்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படக் கூடாது; விமான நிலையம் வேண்டாம் என்று சொல்லவில்லை; மாற்று இடத்திலே எடுத்துக்கொள்ளுங்கள். நான்கு பணக்காரர்களுக்காக ஆயிரம் பேரை அனாதைகளாக்க வேண்டாம் என்பதைத்தான் பாட்டாளி மக்கள் கட்சி தெரிவித்துக்கொள்கிறது. V.I.T.யிலே யாராவது தமிழ்நாட்டுப் பிள்ளைகள் படிக்கிறார்களா? பொற்கோயிலுக்குத் தமிழ்நாட்டுக்காரர்கள் வருகிறார்களா? தோல் தொழிற்சாலை அதிபர்களை வாழ வைப்பதற்காக அல்லது உயர் கல்வியைப் பெறாத ஏழைகளை அழித்துவிட்டு, பணக்காரர்கள் விமானத்திலே பறப்பதற்கு, ஏழைகளுடைய ஆதாரத்தை அழிக்கக்கூடாது என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்து. அந்தத் திட்டத்தை மாற்றுத் திட்டமாகச் செய்யுங்கள் என்று சொன்னோமேயொழிய, வேண்டாம் என்று சொல்லவில்லை என்பதை அண்ணன் ஞானசேகரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய சேவைத் துறை, தொழில் துறை வளர்வதால், வேளாண்மைத் துறை இன்றைக்கு நலிந்துகொண்டிருக்கிறது. 1993-94-லே 25 சதவீதமாக இருந்த வேளாண்மைத் துறை இன்றைக்கு 13.3 சதவீதமாகக் குறைந்து இருக்கிறது. அது மட்டுமல்ல; பயிர் செய்யக்கூடிய மக்களுடைய விகிதாச்சாரமும் குறைந்து கொண்டே



வந்துகொண்டிருக்கிறது. நிலத்தினுடைய பரப்பளவும் குறைந்துகொண்டே வந்திருக்கக்கூடிய காரணத்தினாலே, இது கவலைக்குரிய விஷயமாக இருக்கிற காரணத்தினாலே, இந்த நாட்டினுடைய முதுகெலும்பு வேளாண்மை என்பதால், அதற்கு அதிகமாகக் கவனம் செலுத்தி, தனி பட்ஜெட்டை உருவாக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-45

கோதுமைக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு சன்ன இரக நெல்லுக்கு அந்த விலை கிடைக்கவில்லை. எனவே, நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் விலை வழங்க வேண்டும். இன்றைக்கு, ஒரு பைசா செலவில்லாமல் வளரக்கூடிய வேலிக்காத்தான் முள்கூட 2,000 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், இரவு, பகல் பாராமல், கஷ்டப்பட்டு, தண்ணீர் கட்டி, உரம் வைத்து, உழுகின்ற விவசாயியினுடைய கரும்பிற்குப் பார்த்தால், ஆயிரம் ரூபாய்கூட முழுமையாகக் கிடைக்கவில்லை. எனவேதான், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,800 ரூபாயை அரசாங்கம் வழங்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல, மாநிலத்தில் நிலவுகின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். On-line trading என்ற முறையிலே, இன்றைக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வருகின்ற காரணத்தினாலே, விலைவாசி உயர்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த On-line trading என்பதைத் தடை செய்ய வேண்டுமென்று நான் தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மானியமும், இலவசமும் கொடுப்பதோடு, வேலைவாய்ப்பையும் கொடுத்து, உற்பத்தியையும் பெருக்கி, வாங்கும் சக்தியை உருவாக்க வேண்டும். வறுமையை ஒழிக்க வேண்டும். ஒருவனுக்கு மீன் துண்டை இலவசமாகக் கொடுப்பதைவிட, அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவன் எப்படியாவது மீன் பிடித்துப் பிழைத்துக்கொள்வான். எனவேதான், வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தைத் தமிழக அரசு நடைமுறைப்படுத்தினால், ஓரேயாண்டிலே அனைவருக்கும் வீடு

கட்டித் தர முடியும். பெருகி வரும் வேலையின்மை மனித வளத்தை வீணடிப்பதோடு, சமூகத்தையும் சீரழிக்கிறது. புள்ளிவிவரங்களின்படிப் பார்த்தோமானால், 1.2 கோடி பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதிலே, எம்.பி.சி., எஸ்.சி. என அதிகமாக இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே வேலைக்காகப் பதிவு செய்து காத்திருப்போர் 48 இலட்சத்து 4 ஆயிரம் பேர். அதிலே பி.சி. 20 இலட்சம் பேர். எம்.பி.சி. 10 இலட்சம் பேர். எஸ்.சி., எஸ்.டி. 11 இலட்சம் பேர். இதரப் பிரிவினர் 5 இலட்சம் பேர். ஆண்டொன்றுக்கு 12 ஆயிரம் பேர் முதல் 14 ஆயிரம் பேருக்குத்தான் அரசாங்கம் வேலை தருகிறது. ஆண்டாண்டு படித்துவிட்டு வெளியே வரக்கூடியவர்களின் நிலைமை இன்றைக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே, தமிழக அரசு அனைவருக்கும் வேலை கொடுக்கிற அந்த நிலைமையை இன்றைக்கு உருவாக்க வேண்டும்.

உபரி நீர் வீணாகாமல் இருக்க ஆறுகள் இணைப்பை வரவேற்கிறோம். ஆனால், காவிரி—பாலாறு இணைப்பாவதைக் கண்டித்து எங்களுடைய வேலூர் மாவட்ட மக்களெல்லாம் மிகுந்த வேதனையிலே இருக்கிறார்கள். இன்றைக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி வரை வந்திருக்கிறது. ஆனால், வேலூர் வர மறுக்கிறது. மழைதான் வேலூருக்கு வர மறுக்கிறதென்றால், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்கூட வேலூருக்கு வர மறுக்கிறது.

வேலூர் மாவட்ட மக்களெல்லாம், வட மாவட்ட மக்களெல்லாம் இந்த பட்ஜெட்டிலே புறக்கணித்துவிட்டதாக நினைக்கிறார்கள். கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் மிக, மிகப் பின்தங்கியிருக்கிற விழுப்புரம், வேலூர், சேலம் மாவட்டங்களையெல்லாம் பிரிப்பார்களென்று அந்த மக்களெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த மாவட்டங்களையெல்லாம் பிரிக்காமல் இன்றைக்கு வஞ்சித்துவிட்டதாக அந்த மாவட்ட மக்கள் கருதுகிறார்கள். தி.மு.க. உருவானபோது, வட மாவட்ட மக்கள்தான் அதிகமாக தி.மு.க.வைத் தாங்கிப் பிடித்தார்கள். தி.மு.க. முதன்முதலிலே தேர்தலிலே நிற்கும்போது, வட மாவட்ட மக்கள்தான் தி.மு.க.வை வெற்றிபெறச் செய்தார்கள். இரண்டாவது முறையும் தி.மு.க.வை வெற்றிபெறச் செய்தார்கள். இன்றைக்கு ஐந்தாவது முறையாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்து முறை ஆட்சி செய்துவிட்டது. ஆனால், இன்றைக்கும் வட



மாவட்ட மக்கள், எழுத்தறிவிலே, படிப்பிலே, வேலைவாய்ப்பிலே, கல்வியிலே, பொருளாதாரத்திலே பின்தங்கியிருக்கிறார்கள். அப்படியென்று சொன்னால், இந்த அரசாங்கம் பின்தங்கிய மாவட்டங்களைத்தான் முதலிலே பிரித்திருக்க வேண்டும். மாறாக, வளர்ந்த மாவட்டங்களைப் பிரிக்கிறார்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், எங்கள் மாவட்டத்தின்மீது, வட மாவட்டத்தின்மீது இந்த ஆட்சிக்குக் கோபமோ, என்னவோ என்று தெரியவில்லை. எனவே, நீங்கள் தயவுசெய்து எங்கள் வட மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய திருப்பத்தூரிலே இதுவரையிலும் ஒரு கல்லூரி கிடையாது. சுதந்திரம் கிடைத்து 60 வருடங்கள் ஆகின்றன. ஒரு அரசாங்கக் கல்லூரி கிடையாது. நானும் பல முறை கேட்டேன். எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களும், கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், கல்லூரி கொடுக்கவில்லை. இப்படியிருந்தால் எப்படி? கல்வியின் தரம் பின்னோக்கித்தான் சென்றுகொண்டிருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இரண்டு தூண்களாக இருக்கின்ற பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய மாவட்டத்தின் மண்ணின் மைந்தர்கள். உங்களுடைய மாவட்டம், கல்வி பொருளாதாரத்திலே பின்தங்கியிருப்பதை உங்களால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடிகிறது என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அந்த மண்ணின் மைந்தர்கள் அல்லவா? அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சி எண்ணம் உங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இந்த அவையில் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். திருப்பத்தூரிலே ஒரு கல்லூரி வரவேண்டும், அரசுக் கல்லூரி. அரசுக் கல்லூரி வர வேண்டுமானால், அதற்கு சில நியதிகள் இருக்கின்றன, இத்தனை ஏக்கர் நிலம் இருக்க

வேண்டும், இடங்களும், அதற்குப் பணம் கட்ட வேண்டுமென்று. அப்பொழுது நாங்கள் சொன்னோம், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; முதலில் மாண்புமிகு உறுப்பினர் இடத்தைத் தயார் செய்துகொண்டு வரட்டும், அதற்கு நிதி பற்றி நானும், துரைமுருகனும் உதவி செய்கிறோம் என்று சொன்னார்கள். அவர் அதைப்பற்றியே கவலைப்படாமல் இருந்துவிட்டார். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்களுக்கு அக்கறை இருந்தால், இப்பொழுதுகூட இடத்தைத் தயார் செய்துகொண்டு வாருங்கள்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அமைச்சரிடம் நான் பேசி ஜெயிக்க முடியாது. இடத்தைத் தேர்வு செய்தாகிவிட்டது என்று சொல்லிவிட்டோம். ஐந்து ஏக்கர் இடத்தைத் தேர்வு செய்துவிட்டோம். ரூபாய் ஒரு கோடி கொடு என்று சொல்கிறார்கள். இந்த ரூபாய் ஒரு கோடி டெபாசிட்டுக்கு நாங்கள் எங்கே போய்க் கேட்பது? இப்பொழுதுகூட பட்ஜெட்டிலே ஐந்து பொறியியல் கல்லூரிகளை அறிவித்திருக்கிறீர்கள். அந்த அடிப்படையிலே, நீங்கள் கொடுக்க வேண்டும். ஒரு கோடியைக் காரணம் காட்டி, எங்கள் பகுதியை நீங்கள் வஞ்சிப்பது நியாயமல்ல, தர்மம் அல்ல, நீதி அல்ல, இது சமூக அநீதி என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இது என்ன தப்பாகப் போச்சு? ஒரு அரசாங்கக் கல்லூரி என்றால் 10 ஏக்கர் நிலம், ஒரு கோடி ரூபாய் கட்ட வேண்டிய நியதி வைத்திருக்கிறோம். எல்லா ஊரிலும் அப்படித்தான் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு நாங்கள் என்ன சொல்கிறோம், இடத்தையாவது கொண்டு வந்து கொடுங்கள் அய்யா, கட்டுவது எப்படியாவது நானும், வீராசாமியும் சேர்ந்து அதைக் கட்டுகிறோம் என்று சொல்லி வருஷம் ஒன்று ஆகிவிட்டது. இப்பொழுதும் சொல்கிறோம், நீங்கள் இடத்தைத் தேர்வு செய்யுங்கள். நிதி பற்றி நானும், மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்களும் முன்னின்று ஏற்பாடு செய்து மேற்கொண்டு கட்டுகிறோம் என்று சொல்கிறோம். இதற்கு மேலே என்ன பண்ணுவது? வஞ்சிக்கிறோம், தவறு செய்கிறோம் என்று இப்படியெல்லாம் சொன்னால் என்ன செய்வது? வஞ்சிக்கவில்லை, நன்றாகச் செய்கிறோம், நன்றாகச் செய்கிறோம்.



**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் வருவதற்கு எங்களுடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன். . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் கல்லூரியை வாங்குங்கள். பிரித்துவிட்டால் அப்புறம் வராது. அதனால், இடத்தைப் பிடித்துக் கல்லூரியை வாங்குங்கள். பிறகு பிரித்துக்கொள்ளலாம்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இலட்சம் குடும்பங்கள், பணிபுரிகின்ற கட்டுமானத் தொழிலாளர்கள் எல்லாம் இன்றைக்கு விலைவாசி உயர்வால் நடுத் தெருவிலே நிற்கிறார்கள். 30,000 ரூபாய் விற்றுக்கொண்டிருந்த கம்பியின் விலை 54,000 ரூபாய். அரசாங்கத்திடம் contract எடுத்த Contractors எல்லாம் இன்றைக்குக் கட்டடம் கட்ட முடியாமல் ஓடிவிட்டார்கள். காரணம், விலை ஏறிக்கொண்டே போயிருக்கிறது. மணல் விலை, ஜல்லி விலை தாங்க முடியவில்லை. நடுத்தர, ஏழைக் குடும்பங்கள் வீடு கட்ட முடியாமல் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தக் கம்பி விலையைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் கடன் பெற்ற அந்தக் கடனாளிகள் எல்லாம் கடனிலே மூழ்கி, இன்றைக்குச் சொந்த வீடுகளை விட்டு அகதிகளாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். எனவே, வீட்டு வசதி வாரிய சங்கத்திலே வாங்கப்பட்ட கடனையெல்லாம் இரத்துச் செய்து, அந்த மக்கள் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும். இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வாய் உள்ள மனிதனுக்கு இரண்டு ரூபாய்க்கு அரிசி போடுகிறார்கள், மனித ஜீவனத்திற்கு. ஆனால், வாயில்லாத கால்நடைகள், 11 கோடி கால்நடைகள் இந்த நாட்டிலே இருக்கின்றன. அதற்கான விலைவாசியைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், அந்த மாடுகள் ஓவென்று கத்தி அழுகின்றன. பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ பிண்ணாக்கு 22 ரூபாய், புளியங்கொட்டை நொய் 12 ரூபாய். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி. (குறுக்கீடு)

**திரு. தி.க. ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசி முடியுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாயில்லா ஜீவன்களுடைய அந்த உணவுப் பொருட்கள் விலை மிக அதிகமாக இருக்கின்றது. மனிதனுக்கே இரண்டு ரூபாய்க்கு அரிசி கொடுக்கிற கலைஞர் அவர்கள், வாயில்லாத ஜீவன்களை வாழ வைக்க வேண்டும். அதற்கான விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களுக்கு நியாய விலைக் கடைகளிலே தவிடு, பிண்ணாக்கு போன்ற பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். மக்கள்மீது புதிய வரிகள், புதிய சுமைகளை ஏற்றாத இந்த நிதிநிலை அறிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

குறிப்பாக, பெண்கள் ஆணையத்திற்குச் சட்ட அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் இதே மன்றத்தில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி வந்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, பெண்கள் ஆணையத்திற்குச் சட்ட அந்தஸ்து வழங்கியிருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கை என்பது பாராட்டுக்குரியது மட்டுமல்ல, வரவேற்பிற்குரியது என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களது கோரிக்கை வெற்றி பெற்றது என்பது மகிழ்ச்சி அளித்தாலும், அதனை நிறைவேற்றித் தந்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு உரியது என்ற முறையிலேதான் அந்தப் பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றேன்.



அதே வழியில், மத்திய அரசினுடைய 9-வது ஐந்தாண்டுத் திட்டம், மகளிருக்கான சிறப்புக் கூறுத் திட்டமாக பாலின அடிப்படையில் மாநில அரசுகளினுடைய நிதிநிலை அறிக்கை அமைய வேண்டுமென்று கடந்த காலத்திலே வலியுறுத்தியிருக்கிறார்கள். 11-வது திட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டு வருடாந்திரத் திட்ட வடிவமைப்பில், அனைத்து மாநில அரசுகளையும் தங்களுடைய திட்ட வடிவமைப்பில் பாலின வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டை ஒரு பகுதியாக அமைக்க அரசு முடிவு செய்ய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலின திட்டமிடுதல் என்பது தனி நிதி ஒதுக்கீட்டைக் கோரவில்லை. பெண்களுக்கான அரசின் வருவாய் மற்றும் செலவுகளால் ஏற்படும் பலன் என்ன என்பதை ஆராய்வதற்கு, பாலின பயன்பாட்டுத் திட்டமிடுதல் வழி செய்கிறது. ஆகவே, தமிழக அரசு அடுத்த நிதிநிலை அறிக்கையைப் பாலின அடிப்படையில் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, வேலைவாய்ப்பு, தொழில் என்ற முக்கியத் துறைகளில் 30 சதம் பெண்கள் ஒதுக்கீடாக அமைத்து, தாக்கல் செய்வதற்கு முன்வரவேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அதே நிதிநிலை அறிக்கையில் மகளிர் நலன் என்ற தலைப்பின்கீழ், இலவச சமையல் எரிவாயு, பெண்கள், ஏழைப் பெண்கள், நடுத்தர வர்க்கத்தினுடைய பெண்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பெண்களுக்கு மட்டும் மகிழ்ச்சியல்ல, ஆண்கள், குழந்தைகள் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒரு திட்டம்தான். இது மகளிர் நலன் என்ற தலைப்பின்கீழ் வருவது என்பது, பெண்கள் என்பவர்கள் சமைப்பவர்கள், ஆண்கள் என்பவர்கள் சாப்பிடுகிறவர்கள் என்ற கருத்தையும் இதிலே தோற்றுவிக்கிறது. ஆகவே, இதுபோன்ற தலைப்பை பொதுத் தலைப்பின்கீழ்க் கொண்டு வருவது என்பதுதான் பெண் உரிமைக்கு தனித் தலைப்பாக அமைய முடியும்.

அதேபோல, தமிழகத்தினுடைய வேளாண்மை என்பது மிகக் குறுகிக்கொண்டு வருகிறது. அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களுக்கு இதுவரை நியாயமான விலை என்பதே கிடைக்கவில்லை. நான் சார்ந்திருக்கக்கூடிய திண்டுக்கல் மாவட்டத்தில் பூக்கள் முதல் வேர்க்கடலை, அதேபோன்று பல்வேறு வகையான பயிர்கள், விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தக்காளி, வெங்காயம் உட்பட. ஆனால் அவற்றிற்கு நியாய விலை கிடைக்கவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறையினுடைய தலைப்பின்கீழ், நெல் நாற்று நடுவதற்கும், களை பறிப்பதற்கும் இயந்திரங்கள் புகுத்தப்படும், இயந்திரங்களைப் பயன்படுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள்தான் நாற்று நடுவதற்கும், களை பறிப்பதற்குமான வேலைத் திட்டத்திற்கு வருகிறார்கள்; அவர்களுடைய வேலையை பறிக்கக்கூடிய வகையில் இயந்திரங்களைப் புகுத்தக்கூடாது என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த இயந்திரங்களைப் உற்பத்தி செய்பவர்களுக்குக் கூடுதல் சலுகை வழங்கப்படும் எனறு தெரிவிப்பது எங்களுக்குக் கவலையளிப்பதாக இருக்கிறது. ஆகவே, வேளாண்மைத் துறையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு, வேளாண்மைத் தொழிலுக்குக் கூலியாட்கள் கிடைப்பதில்லை; ஆகவே, உரிய காலத்தில் பயிர் நட முடியவில்லை; களை எடுக்க முடியவில்லை; அறுவடை செய்ய முடியவில்லையென்ற கோரிக்கை, விவசாயிகள் மத்தியிலேயிருந்து நாள்தோறும் வந்தவண்ணம் இருக்கிறது; நாமும் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இந்த நிலையைத் தவிர்க்கத்தான், விவசாயிகளுக்கு உதவியாக, அவர்கள் உற்பத்தியிலே அதிக ஆர்வத்தோடு ஈடுபடுவதற்குக் கருவிகள் பயன்படுத்தப்படும் என்று சொல்கிறோம். ஆகவே, இதனால் ஒன்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு வராது. விவசாயத் தொழிலாளிகளுக்கு எவ்வளவு கூலி முன்பெல்லாம் கொடுத்தோமோ, இப்போது அதைவிட மூன்று மடங்கு, நான்கு மடங்கு, ஐந்து மடங்கு என்று கூலி உயர்த்திக் கொடுத்தாலும்கூட கூலியாட்கள் கிடைப்பதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதனால் செய்ய முடியாத வேலைகளுக்கு உதவுவதற்கு என்று இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். மனிதனால் செய்யக்கூடிய வேலைகளுக்கு, இந்த இயந்திரங்களைப் புகுத்த வேண்டுமா என்ற கேள்வி இருப்பதோடு,



மதுரை புறநகர் போன்ற பகுதிகளில் எண்ணற்ற விவசாயக் கூலி பெண்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று தினசரி கூறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறேனே தவிர, வேறு நோக்கமல்ல.

அடுத்ததாக, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்பது இன்றைக்கு கிராமப்புறங்களில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், ஆளுநர் உரை அறிக்கையில், 80 ரூபாய் கூலி தரப்படுகிறது என்று எழுதப்பட்டிருந்தது. ஆனால், இப்போது நிதிநிலை அறிக்கையில், அந்த எட்டு, ஜீரோ என்பதை எடுத்துவிட்டு, குறைந்தபட்சக் கூலி என்று போடப்பட்டிருக்கிறது இதுதான் தற்போது நிலைமையாகவும் இருக்கிறது. கடந்த நான்கு மாத காலமாக 50 ரூபாயும், 65 ரூபாயுமே தரப்பட்டு வருகிறது. மத்திய அரசு அதிகாரிகளும், மாநில அரசு அதிகாரிகளும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு எதிராக, மாநில அரசினுடைய கொள்கைக்கு எதிராக, மத்திய அரசினுடைய கொள்கைக்கு எதிராக, நாங்கள் இவ்வளவுதான் கூலி கொடுப்போம் என்று சொல்வது பொருத்தமற்ற ஒன்று. சட்டக் கூலி என்பது 80 ரூபாய். இந்த 80 ரூபாய் தருவதற்குத்தான் அளவு நிச்சயிக்கப்பட வேண்டுமே தவிர, 80 ரூபாயைக் குறைத்துக் கொடுப்போம் என்று சொல்லக்கூடிய இந்த நிலப் பிரபுத்துவ சிந்தனை என்பது அரசு அதிகாரிகளிடத்தில் இருந்துகொண்டிருக்கிறது; அது மாற்றப்பட வேண்டும். கட்டாயமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரில் 80 ரூபாய் கூலி என்பதை உத்தரவாதப்படுத்தக்கூடிய சட்டத்தின் கருத்திற்குப் பதிலுரை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோன்று, தொழில் வளர்ச்சி குறித்துப் பல கருத்துகள் சொல்லப்பட்டிருந்தாலும், பல்வேறு மாவட்டங்களில் பாரம்பரிய மிக்க தொழில்கள் நலிவடைந்துகொண்டிருக்கின்றன. பஞ்சாலைகளில் புதிய தொழில் நெருக்கடி ஏற்பட்டு வருகின்றது. அது மட்டுமல்லாமல், திண்டுக்கல், திருச்சி போன்ற இடங்களில் தோல் தொழில் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் 15 சதமான சுங்க வரியை E.I. தோல்களுக்குப் போடுவதன்மூலமாக, இப்போது

இஸ்லாமியர், தலித் கிறித்துவர், சாதாரண இந்துக்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழக்கூடிய இந்தத் தோல் பதனிடக்கூடிய தொழிலில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலை என்பது பறிபோய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற தொழில்களைப் பாதுகாப்பதற்கு, மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுங்க வரியை நீக்குவதற்குக் கடிதம் எழுதி கோரிக்கையை வற்புறுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 2008 பிப்ரவரி வரை தமிழகத்தில் பதிவு செய்த வேலையற்றோர் எண்ணிக்கை 49 இலட்சத்து 58 ஆயிரத்து 48 பேர். இவர்களுக்கு நிவாரணம் தருகிறோம். 10 ஆம் வகுப்பும், பிளஸ் 1-ம் முடித்தவுடன் ஆயிரக்கணக்கில் கியூவிலே நின்று பதிவுக்கு வருகிறார்கள். வேலை தரக்கூடிய இந்த அலுவலகத்தில் 1,101 பேர் வேலைக்குப் பணியாளர்கள் இருக்க வேண்டும். ஆனால், இந்த வேலைவாய்ப்புத் துறையிலே 405 பணியிடங்கள் இன்னமும் காலியாக இருக்கின்றன. ஆகவே, நம்பிக்கையோடு வரக்கூடிய இளைஞர்களுக்கு, காலத்திலே அவர்களுடைய பணியை முடித்துக் கொடுக்க இந்தத் துறையில் 405 பணியிடங்களை நிரப்பாமல் இருப்பது என்பது கவலை அளிப்பதாகும். உடனடியாக, தேவையான துறைகளில், தேவையான ஊழியர்களை நிரப்புவதற்கு நமது தமிழக அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளில் வீடுகளுக்கு 25 சதம், வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு 100, 150 சதம் என்று சொத்து வரி உயர்வு போடப்பட்டிருக்கிறது. இது மிகக் கடுமையாக இருக்கிறது. இது குறித்துத் தமிழக அரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சுற்றுச்சூழல்; தமிழகத்தினுடைய சுற்றுச்சூழல். காவிரித் தண்ணீரைப்பற்றி நாம் பெருமையோடு பேசுகிறோம். ஆனால், திண்டுக்கல்லுக்கு வரக்கூடிய காவிரித் தண்ணீர் 5 சதம் கடுமையான உப்பு நீராக இருக்கிறது. இந்தக் காவிரித் தண்ணீரில் பல்வேறு வகையான இரசாயன நீர் கலந்து, இப்போது புற்றுநோய் போன்ற நோய்களை உருவாக்கி வருகிறது. தாமிரபரணித் தண்ணீர், கங்கைகொண்டானில் 9 இலட்சம் லிட்டர் தண்ணீரை இப்போது Coca Cola கம்பெனி விற்றுக்கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, கூவம் என்பது அருமையான ஒரு சிறு நதி. அந்த நதி சென்னைக்குள்ளே வருகிறபோதுதான் அது மிக மோசமாக



மாறுகிறது. ஆகவே, பெரு நகரங்களுடைய கழிவு, ஆற்று நீரை மிக மோசமாக மாற்றிக்கொண்டிருக்கிறது. தமிழக சுற்றுச்சூழல் கழகம் என்பது ஒவ்வொரு மாவட்டத்தினுடைய ஆறுகளை, நீர்நிலைகளை ஆய்வு செய்து ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கிறது, நீராதாரப் பாதுகாப்பு அமைச்சகம் என்பது உருவாக்கப்பட வேண்டும் என்று. இதை பொதுப் பணித் துறைக்குப் பங்கு கேட்கக்கூடிய ஒரு கோரிக்கையாக நான் பார்க்கவில்லை. இது தமிழகத்தினுடைய, எதிர்கால சமூகத்தினுடைய வளத்திற்கு மிக முக்கியமான கோரிக்கை என்ற முறையிலே நான் வலியுறுத்திக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியம் 23 ஆண்டுகளுக்கு முன்னால் என்ன விலையை நிலத்திற்கு நிச்சயித்ததோ, அதே விலைக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து பத்திரம் வழங்க முன்வரவேண்டும். தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுடைய கல்விக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டும். குறைகளை rectify செய்ய அவகாசம் கொடுக்க வேண்டும். நீர்வழிப் புறம்போக்குகளில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீட்டுப் பட்டா வழங்குவதற்கு விதிகளைத் தளர்த்த வேண்டும். மலைகளில் இரண்டு ஏக்கர் திட்டம் அமல்படுத்துவதற்குள்ள தடையாணையை நீக்க வேண்டும். இஸ்லாமிய மாணவிகளுக்கு மாவட்டங்களில் தலா ஒரு விடுதி கட்டித் தருவதற்கு தமிழக அரசு முன்வரவேண்டும். டாஸ்மாக் ஊழியர்களுக்கு 8 மணி நேர வேலை என்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

1988 முதல் 1997 வரை உள்ள ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணப் பயன்கள் கிடைப்பதற்கான கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டும்.

குடியாத்தம் தீப்பெட்டித் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழந்த 5 பேர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை கவனிக்க முன்வரவேண்டும்.

நீதிமன்றத்தைவிட சட்டமன்றம் உயர்ந்தது அல்ல; சட்டமன்றத்தைக் காட்டிலும் நீதிமன்றமும் உயர்ந்தது அல்ல. ஆகவே, மக்கள் பிரதிநிதிகளை, நிருவாகத்திற்கு இணையாக அவர்களுடைய விழாக்களிலே பங்கெடுக்கச் செய்வதற்கு உயர் நீதிமன்றத்திற்கு நமது சட்டமன்றம் தீர்மானத்தின்மூலம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

நேற்று நடந்த விவாதத்திலேகூட, அமைச்சர்களையே விழாவுக்குக் கூப்பிடுவதில்லை என்று வருத்தத்தோடு சொல்லியிருக்கின்றார்கள். இத்தகைய போக்கை அனுமதிக்கக்கூடாது. நீதிமன்றங்களை நாம் மதிக்கின்றோம். அதை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கின்றோம். அப்படி இருக்கின்றபோது, அவர்களும், அரசியல்வாதிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், அமைச்சர்களையும், அவர்களுக்குரிய தன்மையோடு அவர்களுடைய விழாக்களுக்கு அழைக்க முன்வரவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பேச்சிலே குறுக்கிடக்கூடாது என்பதற்காகத்தான் இப்போது நான் என்னுடைய கருத்தைச் சொல்கின்றேன். இந்த 100 நாள் வேலை உறுதித் திட்டத்திலே 80 ரூபாய் minimum கூலி என்று போடப்பட்டிருக்கின்றது. ஆனால், அதிகாரிகள் 65 ரூபாய், 70 ரூபாய்தான் கொடுக்கின்றார்கள் என்று உறுப்பினர் சொன்னார். உண்மை என்னவென்று சொன்னால், minimum 80 ரூபாய் கூலி கொடுக்கவேண்டும். ஆனால், இப்பொழுது நடைமுறையில் என்ன இருக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு சொல்லிவிட்டது, மாநில அரசு சொல்லிவிட்டது என்பதற்காக, காலையிலே தட்டு, மண்வெட்டியோடு வந்து, வேலையே செய்வதில்லை என்ற நிலை சில இடங்களில் இருக்கின்றது. நாங்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று வாக்குகளைப் பெற்று வந்திருக்கின்றோம். அங்கிருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவர், ஆணையாளர் பணிகளைச் செய்கின்றார்கள். ஆக, காலையிலே தட்டு, மண் வெட்டியோடு வந்துவிட்டு, 80 ரூபாய் minimum கூலி என்று சொல்லிவிட்டு, வேலையே செய்யாத நிலைமை கிராமப் பகுதிகளில் இருக்கின்றது. அதனால் 80 ரூபாய் minimum கூலி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. 80 ரூபாய்தான் அரசாங்கத்தினுடைய திட்டம். அதைத்தான் கொடுக்கின்றோம். அதே நேரத்தில் உங்களிடத்திலே புகார் சொல்பவர்கள், 80 ரூபாய்க்கு உரிய வேலையைச் செய்யவேண்டும். அந்த வேலைகள் குறைகின்றபோது, அதிகாரிகள்



கணக்கெடுத்து, 65 ரூபாய்க்குத்தான் வேலை செய்திருக்கின்றீர்கள் என்று 65 ரூபாய், 70 ரூபாய் என்று கொடுக்கின்ற நிலை இருக்கிறது. எனவே அவர்களும் அரசாங்கம் சொல்கின்ற அளவுக்கு வேலைகளைச் செய்யவேண்டும். இந்த அரசு கட்டாயம் 80 ரூபாய் கூலியைத் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், இந்த அறிக்கையில் இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது என்று எப்படி எழுத முடியும்? அவர்கள் ரோடு போட்டு, குளங்களை, கண்மாய்களைத் தூர் வாரி, சரியாகச் செய்ததால்தானே எழுதி வைத்தோம்? ஆகவே, இது அதிகாரிகளால் பரப்பப்படக்கூடிய வதந்தி. தமிழகத்து மக்கள் உழைப்பாளிகள், கூலியாட்கள் நின்றுகொண்டே, வேலை செய்யாமல் வேலை செய்துவிட்டோம் என்று சொல்வதில்லை. அதிகாரிகள் 8 files பார்க்கும் இடத்தில் 4 files பார்த்தால், உங்களுக்கு அதற்குரிய சம்பளம்தான் என்று சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா? ஆகவே, ஒட்டுமொத்த வேலையைத்தான் பார்க்கவேண்டுமென்று சட்டம் சொல்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் தரப்பில் சொல்லக்கூடிய வதந்திக்கு இரையாக வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. அதிகாரிகள் தரப்பில்தான் சொன்னேன். எப்படி நீங்கள் ஒரு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று வந்திருக்கின்றீர்களோ, அதைப்போல நாங்களும் சட்டமன்ற உறுப்பினராக ஒரு தொகுதியில் வெற்றி பெற்று வந்திருக்கின்றோம். என்னுடைய தொகுதியில் 98 ஊராட்சிகள் இருக்கின்றன. ஊராட்சி மன்றத் தலைவர்களும், ஆணையாளர்களும் அங்கே வேலைகளைப் பார்க்கின்றார்கள். மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற காரணத்தால் நானும் நேரடியாகப் போகிறேன். அனைத்து இடங்களிலும் இதுபோன்ற புகார்கள் வருவதில்லை. பல ஊராட்சிக்ளில் ஒழுங்காக வேலைகள் நடக்கின்றன, பணமும் சரியாகக் கொடுக்கப்படுகின்றது. சில இடங்களில் வேலை

நடக்காமல், சிலர் தகராறு செய்கின்றார்கள். அங்கே 80 ரூபாய் பணம் கொடுக்கிறார்கள், நீங்களும் கொடுத்தாகவேண்டும், வேலை செய்கிறார்களா, இல்லையா என்றெல்லாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்றெல்லாம் நிலைப்பாடு இருக்கிறது. பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுவெல்லாம் தெரியும். ஆனாலுங்கூட, கட்டாயம் வேலையைச் செய்யவேண்டும். வேலையே செய்யாமல் பணம் கொடுக்க முடியாது. அவ்வாறு கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டால், அனைத்து இடங்களிலும் இந்தப் பிரச்சினை வந்துவிடும். பணத்தைக் கொடுங்கள், வேலை இல்லையென்ற நிலை ஏற்படும். இதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு அமைச்சருடைய பதில் இந்த அரசுக்கு உதவியாக இருக்காது. கஷ்டத்தை உண்டாக்கும். பெரும்பாலான மக்களுடைய எதிரியாக நாம் மாறிவிடுவோம். விதிவிலக்குகள் வழிகாட்டியாக முடியாது என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். எங்கோ ஒன்றிரண்டு இடத்தில் ஒன்றிரண்டு ஆட்கள் அவ்வாறு செய்திருக்கலாம். (குறுக்கிடு) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், நீங்கள் உட்காருங்கள். என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் எழுந்திருக்கக்கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 20-3-2008 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கின்றேன். நிதிநிலை அறிக்கையில், மத்திய அரசு கோதுமைக்கு குவின்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதைப்போல, நெல்லுக்கும் ஆயிரம் கேட்பதைப் பாராட்டுகின்றோம். விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி 4 சதவிகிதம் என்றும், 1,500 கோடி ரூபாய்க்குப்



புதிய கடன் என்பதையும் பாராட்டுகின்றோம். விவசாயிகளுக்கு சுய உதவிக் குழு அமைப்பதையும், சுழல் நிதிக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் வரவேற்கின்றோம். வட்டாரக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் 25 ஆயிரம் ரூபாய் வரை கடன் பெற்ற அனைவருக்கும் தள்ளுபடி செய்திருப்பதையும் வரவேற்கின்றோம். வைத்தியநாதன் குழு சிபாரிசின்படி கூட்டுறவுத் தேர்தலை உடனே நடத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 12-10

தமிழகத்தில் 3 இலட்சம் பேருக்குப் பட்டா வழங்க இலக்கு இருந்தும், 3,98,000 பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது பாராட்டிற்குரியது. 10 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள் என்று மாற்றியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோல, எனது தொகுதியில் உள்ள சில பிரச்சினைகளை முன் சொல்லி, பின்னாலே நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றேன். கடந்த பல ஆண்டு காலம் திருத்துறைப்பூண்டி தொகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரிகூட இல்லை என்ற கோரிக்கை வந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) குறிப்பாக சுதந்திரம் பெற்ற பின்னாலும், இன்றும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லாத சூழல் இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி என்று அறிவித்திருக்கிறார்கள். அதேபோல, எந்தவொரு அரசுக் கலைக் கல்லூரியோ, தனியார் கல்லூரியோ இல்லாத தொகுதிகளில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க ஆவன செய்ய வேண்டுமாய். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள் எல்லோரும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** அமைக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, முத்துப்பேட்டை, ஆதிச்சபுரம் ஆகிய இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன.

அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்படவேண்டும். ஏனென்று சொன்னால், கடந்த 10 ஆம் தேதி என்னுடைய தொகுதியில் ஏற்பட்ட விபத்தில், அந்த முத்துப்பேட்டை அரசு மருத்துவமனையில் போதிய வசதி இல்லாத காரணத்தினாலே நாங்கள் பட்டுக்கோட்டைக்கும், திருத்துறைப்பூண்டிக்கும் செல்ல வேண்டிய சூழல் இருக்கிறது. ஆகவே, முத்துப்பேட்டை, ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயம், அறிக்கையில் சில ஆக்கபூர்வமான யோசனைகளையும், கருத்துகளையும், நியாயமான கோரிக்கைகளையும் முன்வைத்திடவேண்டிய நிலையில் உள்ளோம். தேசிய நதி நீர் இணைக்கப்படுவது ஒன்றுதான் நீர்ப் பற்றாக்குறையினையும், நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வாகும் என்று மதிப்பிட்டுள்ள நிதிநிலை அறிக்கை, இதன்மீது வலிமையான மக்கள் இயக்கத்தினைக் கட்டியமைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கவேண்டும். நீண்ட பல ஆண்டு காலமாக காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை தீர்வு காணப்படாமல் உள்ள நிலையில், தற்போது முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற பிற மாநிலங்கள் தொடர்புடைய நதி நீர் ஆதாரத்திலும் பிரச்சினைகள் ஏற்பட்டு, தீவிரமடைந்து வருகின்றன.

சமீப சில ஆண்டு காலமாக இயற்கை வளமான மழை நீர் வற்றாததால் பிரச்சினையின் கடுமை நிலை வெளிப்படாமல் உள்ளது. ஒரு வேளை புவியின் வெப்பத் தன்மை அதிகரித்து வரும் சூழல் காரணமாக, சில வருடங்களுக்குத் தொடர்ச்சியான வறட்சியை சந்திக்கும் நிலை ஏற்பட்டால், எண்ணிப் பார்க்கவும் பேரபாயமாக உள்ளது. இந்த நிலைக்கான எல்லாக் கோணங்களிலும் மதிப்பீடு செய்து, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்தக் கருத்துகளையும் ஒருமித்த முறையில் முன்வைத்துத் தீர்வு காணும் வகையில், நடுவண் அரசின் தலையீட்டையும், அண்டை மாநில மக்களின் சகோதரப் பூர்வமான ஒத்துழைப்பையும் பெறுவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்குவது அவசியம் என்று வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாட்டின் அவசியத் தேவைகளுக்கு சரியான செயல் வடிவம் தருவதற்கு அரசியல் வழித் தடத்தில் நீண்ட பயணம் செய்து, களைப்பின்றி முன்வரிசையில் மிடுக்கோடும், இளமைத் துடிப்போடும்



சென்று வரும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன் முயற்சி எடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு, கடுமையாகப் பாடுபட்டும், தலைமுறை தலைமுறையாகக் கடன்காரர்கள் என்ற பட்டத்துடன் வாழ்ந்து வந்த விவசாயப் பெருங்குடி மக்கள் சுமார் 7,000 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வாழ்த்துகிறார்கள். இந்த ஆண்டு புதிய கடன் ரூபாய் 1,500 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டிற்குரியது. இன்னும் கூடுதல் நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். வேளாண்மைத் துறையில் இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு நிதிநிலை அறிக்கையில் ஊக்கம் அளித்துள்ளது. இது விவசாயத் தொழிலாளர்கள் சமூக வாழ்க்கையில் உருவாகும் எதிர்மறை விளைவுகளைப் பற்றியும் யோசிக்க வேண்டுகிறோம். வளர்ந்து வரும் விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியோடு இணைந்து செல்வது என்ற கருத்து சரியானதுதான். ஆனால், அறிவியல் வளர்ச்சியின் பலன் சமூகத்தில் எல்லாத் தரப்பு மக்களுக்கும் சமமாகக் கிடைக்கும் ஒரு நிலைதான் சாத்தியமாகும்.

அண்மையில் மத்திய அரசு அமைத்த அர்ஜுன் சென் குப்தா தலைமையில் அமைந்த ஆணையம் நாட்டின் மக்கள்தொகையில் 77 சதவீதத்தினர் சுமார் 80 கோடி பேர், நாள் ஒன்றுக்கு ரூபாய் 20-க்கும் குறைவான வருமானத்தைப் பெற்று வருகின்றார்கள் என்றும், இந்தக் கணக்கில் ரூபாய் 6, 8, 12 என்ற அளவில் ஒரு நாள் வருமானம் என்று பெறுகின்றவர்கள் எண்ணிக்கையையும் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கீட்டின்படி, 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் தற்போது ஒரு கோடிக்கும் அதிகமாகி இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு ஆண்டில் அதிகபட்சம் 120 நாட்கள்தான் வேலை கிடைக்கிறது. இந்த நிலையில் நெல் நடவு, அறுவடை, கரும்பு வெட்ட என்று இயந்திரங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதால், கிடைக்கின்ற அரைகுறை வேலைவாய்ப்பும் பறிபோகின்ற அபாயம் உள்ளது. இதனால் கிராமப்புறங்களில் அமைதியற்ற நெருக்கடி உருவாகும். ஆதலால், வேளாண்மையில் இயந்திரங்கள் அவசியமா என்பதை அறிந்து பரிசீலிக்கவேண்டும். எந்த அளவிற்கு அவசியம் என்பதையும்,

அனுமதிக்கலாம் என்பதைப் பற்றியும் ஒரு விரிவான விவாதம், கலந்துரையாடல் அவசியமானது என்றும் கருதுகிறோம். இதேபோன்ற கோரிக்கைகள்மீது திரு. பெ. கோலப்பன், ஐ.ஏ.எஸ். தலைமையிலான வேளாண் தொழிலாளர் தனிக் குழு 1997 ஆம் ஆண்டில் ஆய்வு செய்துள்ளது. பல துறை நிபுணர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் கொண்ட உயர்மட்டக் குழு விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க 43 பரிந்துரைகளை 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. கோலப்பன் குழுவின் இந்தப் பரிந்துரைகள் 10 ஆண்டுகளாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாதது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. இதன் அவசியம் கருதி கோலப்பன் குழுவின் பரிந்துரைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

*பிற்பகல் 12-15*

விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க நடவடிக்கை; மகிழ்ச்சி அளிக்கிறது. வாரியச் செயல்பாடு திருப்திகரமாக இல்லை. ஒவ்வொரு தொழிலாளருக்கும் தனித் தனி அடையாள அட்டை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

சமூக நீதி நிலைநாட்டப்படுவதற்கு முதற்கட்டமாக இட ஒதுக்கீட்டு முறையில் கவனம் செலுத்துவது வரவேற்கத்தக்கது. பிற்படுத்தப்பட்டோரில் கணிசமான எண்ணிக்கை மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக உள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, முன்னதாக 1989-90-ல் அவர்களுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. சிறுபான்மை மக்கள்— இஸ்லாமியர்கள், கிருத்துவர்களுக்குத் தலா 3.5 சதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் சாதியினர் சமூகத்தில் அருந்ததியர்கள் பின்னடைந்து கிடப்பதாக வந்துள்ள கோரிக்கையும் பரிசீலிக்கப்படுகிறது. இதற்காக ஒரு நீதிபதி தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோல் மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாப்பதில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது. பள்ளிக் கல்வித் துறையில் 7,800 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. 100 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்



பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படுவது வரவேற்கத்தக்கது. அதே சமயம், தொகுதியில் கொடுத்துள்ள எண்ணிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையில் 8 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று அறிவிப்புச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. மேலும் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை ஊராட்சியைத் தாலுகா தலைநகரமாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருத்துறைப்பூண்டி தொகுதி முத்துப்பேட்டை, கோட்டூரில் தீயணைப்பு நிலையங்கள் தனியார் இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கே புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முத்துப்பேட்டை, கோட்டூர் ஆகிய இரண்டு இடங்களிலும் மின் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. சென்ற முறை அங்கே 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டோம். பணிகள் தொடங்கினார்கள். இன்று வரை அது நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே அவற்றைச் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி உரையை முடித்துவிடுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அரியலூர் மாவட்டத்தைத் தந்து, அந்த அரியலூர் மாவட்டத்தைத் துவக்கி வைக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை அனுப்பி, மாவட்டத்தைத் தொடங்கி வைத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே மாவட்டத்திற்கு நிதியொதுக்கீடு செய்து, அரியலூர் நகருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு நிதியொதுக்கீடு தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் அரியலூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை என்றாலே என்ன, என்ன புது வரிகள் இருக்குமோ, எந்தப் பொருட்களின் விலை ஏறுமோ என்று காலம், காலமாக மக்கள் அச்சப்படுவதும், எதிர்பார்ப்பதும் வழக்கம். அவர்கள் வயிற்றில் பால் வார்ப்பதுபோல, புது வரிகள் இல்லாத, வரி விலக்கு நிறைந்த 2008-2009 நிதிநிலை அறிக்கையை காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறேன்.

முதலில் தொகுதி, மாவட்டத்துப் பிரச்சினையைப் பேசிவிடுகிறேன். அரியலூர் மாவட்டத்திற்கு எப்படி மாவட்ட வளாகம் அமைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கினீர்களோ, அதேபோல மாண்புமிகு முதல்வர் அவர்கள் மானியக் கோரிக்கையை அறிவிக்கின்றபோது அரியலூர் மாவட்டத்திற்குப் புதியதாக ஒரு பொறியியல் கல்லூரி அமைப்பதற்கு ஆணையிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருமானூரில் தீயணைப்பு நிலையம் புதியதாக அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, விளாங்குடி கைகாட்டி, சுண்டக்குடி, ஏலாங்குறிச்சி ஆகிய இடங்களில் புதியதாகக் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருமானூரில் பல ஆண்டு காலமாக இயங்கி வருகின்ற காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிதியொதுக்கீடு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருமானூரில் புதிய வட்டம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகள் அதிகமாக இருப்பதால் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரியலூரில் மிகவும் இலாபகரமாக இயங்கி வரும் அரசு சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்தி, மேலும் இலாபத்தில் இயங்குவதற்கு அரசு போதுமான நிதியொதுக்கீடு செய்து தர



வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடத்தில் இருந்து பல ஆயிரம் க[illegible] அடி நீர் மழைக் காலங்களில் கடலில் கலக்கின்றது. அந்த வீணாகும் நீரைத் தேக்கி, விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற வகையிலே கதவணை கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடத்தில் இருந்து அரியலூர் நகருக்கு வருகின்ற குடிநீர்க் குழாய்கள் பல ஆண்டு காலமாகப் பழுதடைந்து விட்டன. அதனால் குடிநீர் வீணாகி, மக்களுக்குக் குடிநீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, அந்தக் குழாய்களைப் புதுப்பிப்பதற்கு நிதியொதுக்கீடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அருங்கால், கள்ளக்குடி, சுப்பராயபுரம் குந்தபுரம் ஆகிய பகுதிநேர அங்காடிகளை முழுநேர அங்காடிகளாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நரசிங்கபுரம், ஆதனூர், தேளூர், ராஜீவ் நகர் ஆகிய கிராமங்களுக்குப் பகுதிநேர அங்காடிகள் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுண்டக்குடி-அம்பலக்கோட்டை, கட்டளை, ஆதனூர்-மணவாளம் இடையே மருதையாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மணக்குடி, கோவிலசன்ன, நாகமங்கலம், வெள்ளூர், தூத்தூர் வி.கைகாட்டி, நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குடியில், எம்.எஸ். உதயமூர்த்தி என்ற தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அவர்கள் தேர்வு எழுதியும் சான்றிதழ் வழங்கப்படவில்லை. அரசு தலையிட்டு உடனடியாக அந்தப் பள்ளியிலே பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் கிடைக்கவும், தேர்வு எழுதாத மாணவர்கள் தேர்வு எழுதவும் அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2 வாரங்களாக எங்கள் மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக, குறிப்பாக டெல்டா பகுதி மற்றும் ஏரிப் பாசனப் பகுதியிலும் கிட்டத்தட்ட அறுவடைக்குத் தயாராக இருந்த பல ஆயிரம் ஏக்கர் நெல் முற்றிலும் தண்ணீரில் மூழ்கி, விவசாயிகள் பெரிய பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். நெல், 2,940 எக்டேர், பயறு வகைகள் 2,728 எக்டேர், மிளகாய் 21 எக்டேர், தர்ப்பூசணி 295 எக்டேர், கடலை 150 எக்டேர், எள் 340 எக்டேர் மற்றும் முந்திரி போன்ற பயிர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் வேதனைக்குள்ளாகி இருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்குப் போதிய

நிவாரணம் கிடைக்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயி ஒரு ஏக்கர் பயிரிடுவதற்குக் கிட்டத்தட்ட ரூ.11,000 செலவாகிறது. ஆகவே, அவர்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

நரிக்குறவர்கள் நலனைக் காக்க, புதியதாக நல வாரியத்தை இந்த அரசு அமைத்திருப்பதை மனதார வரவேற்கிறோம். அதேபோல, அவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து, அவர்களும் சமுதாயத்தில் சமமாக வாழ்வதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உழவர்களுக்கு 4 சதவிகிதம் வட்டியிலே கடன் என்ற செய்தி உழவர் காதில் தேன் வார்த்ததுபோல் தித்திக்கிறது. ரூபாய் 7,000 கோடிக்குமேல் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்து, விவசாயக் குடும்பங்களை வாழ வைத்த இந்த அரசு, வீடுகள் கட்ட வாங்கிய கடனில் பெரும் பகுதியைத் தள்ளுபடி செய்ததையும், நலிந்தவர்களுக்கும் நன்மை செய்ததையும் பாராட்டுகிறேன். கர்ப்பிணிப் பெண்களுக்கும், கணவனைக் கரம் பிடிக்கும் கன்னியருக்கும், கற்கின்ற மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதை உளமார வரவேற்கிறேன்.

தங்கத்தின் விலை விண்ணைத் தொட்டு வரும் இவ்வேளையில், அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களும் பயனடையும் விதத்தில், மங்கல நகைகளுக்கு வரி விலக்கு அளித்ததற்கும், ஏழைப் பெண்களின் திருமண உதவித் தொகையினை ரூ.20,000 ஆக உயர்த்தியதற்கும், தமிழக மக்களின் சார்பாக நன்றியை உரித்தாக்குகிறேன். பொதுவாகத் தமிழக மக்களுக்கு ஏற்றந்தரும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

***திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களையும் தனது உயிர் மூச்சாகக் கொண்டு, அரசியல் சூறாவளி சுழன்று அடித்தாலும், புயல் வந்தாலும், பூகம்பங்கள் ஏற்பட்டாலும், ஊழிப் பிரளயமே ஏற்பட்டாலும் எதற்கும்



அஞ்சமாட்டோம், மக்களுடைய நன்மைகளைக் கருத்தில் கொண்டு, மக்களின் உணர்வுகளை அறிந்து கொண்டு, பொது மக்களுக்குப் பணியாற்றுவதே எங்கள் குறிக்கோள் எனப் பந்தயக் குதிரை வேகத்தில் வெற்றி முகட்டை நோக்கிச் செல்லும் வீரனைப்போலப் பணியாற்றி வரும் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தந்துள்ள நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பினைத் (மேசையைத் தட்டும் ஒலி) தந்தமைக்கு மாண்புமிகு ஐந்தமிழ் அறிஞர் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களும் தந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை செல்வக் களஞ்சியமாக, காலக் கண்ணாடியாக விளங்குகிறது என்றால், அது மிகையாகாது. திருக்குறளைப் பற்றிச் சொல்லுகிறபோது திருக்குறளிலே இல்லாதது எதுவுமே இல்லையென்று சொல்லலாம். அதைப்போல, இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லாதது எதுவுமே இல்லை. இதில் அனைத்து அம்சங்களும் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலை அறிக்கை வேளாண் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை இரத்துச் செய்தமைக்கு, 3,304 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வங்கிகளுக்கு வழங்கப்பட்டு ஈடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மேலும் 1,150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டுக்கு பயிர்க் கடன்களின் வட்டி விகிதம் 5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்து, ரூபாய் 1,500 கோடி வழங்கப்பட உள்ளது. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்க, கல்வி உதவி, திருமண உதவி, ஓய்வூதியம், ஈமச்சடங்கு உதவி, இழப்பீட்டுத் தொகை ஆகிய இந்த உதவிகளுக்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே 152 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன்.

குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி, உற்பத்திச் செலவைக் குறைத்து அதிக விளைச்சலைத் தருவதற்கு, இந்நிதியாண்டில் 18.75 இலட்சம் ஏக்கரில் செம்மை நெல் சாகுபாடி முறையைக் கடைப்பிடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்கின்ற அறிவிப்பு கண்டு நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். துல்லிய பண்ணை

முறை, விவசாயிகள் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 10 கோடி ரூபாய் எனப் பல அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வேளாண்மைத் துறையிலே புரட்சியை ஏற்படுத்தும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூபாய் 4,792 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எதைக் காட்டுகிறது, என்றால், தமிழகத்திலே பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பி அல்லவா நீங்கள்! அண்ணா அவர்களின் கைவண்ணத்தில் உருவான 'ஓர் இரவு' திரைப்படத்திலே, நாட்டு நிலைமையை விளக்கும் வகையில் ஒரு காட்சி வரும். பண்ணையாருக்குச் சொந்தமான வயற்பரப்பில் பண்ணையாட்களாக வேலை செய்யும் உழவனும், அவனது மனைவியும் அமர்ந்திருந்தபோது, காற்று இரம்மியமாக வீசிக்கொண்டிருந்த நேரம். இரவு நேரம், நிலவு பகலென ஒளி வீசிக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில், வானத்தைப் பார்த்து நிலா தெரிகிறது பார், அரிசிச் சோற்றைப் பார்ப்பதைப்போல இருக்கிறது என்று உழவன் சொல்கிறான். அதற்கு அவன் மனைவி சொல்கிறாள், வெள்ளை வெளேர் என்று அரிசிச் சோறுபோல நிலா இருந்துவிட்டுப் போகட்டும், நீ இந்தக் கூழைக் குடி என்று சொல்லுகிறாள். அந்தக் காட்சியின்மூலம் அண்ணா அவர்கள் விளக்கிய கருத்து என்னவென்றால், உழவனுக்கு நிலம் சொந்தமில்லை, உழுபவனுக்கு நெல் சோறு தின்பதற்கு வாய்ப்பில்லை, கூழைத்தான் குடிக்க வேண்டியிருக்கிறது என்பதை இக்கருத்தின்மூலம் விளக்குகிறார்.

பிற்பகல் 12-30

அண்ணாவின் இதயத்தைப் பெற்றுள்ள தலைவர் கலைஞர் அவர்களே, உங்கள் ஆட்சியில், ஏழைக்கு எட்டாக்கனியாக இருந்த அரிசிச் சோறு, 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குவதன்மூலம், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளியோர் அனைவரும் மகிழ்ந்திருக்கிற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர், வெற்று அறிவிப்புக்களின் விளம்பரத் தோரணம் என்கிறார்.

உள்ளாட்சித் துறையில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு, ஊரும், உள்ளமும் தூய்மையானால், உன் பேரும், பெருமையும் வாய்மையுறும் என தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய அறிவுரையை ஏற்று சிறப்பாகப் பணியாற்றுகிற நிலையைப் பார்க்கிறோம்.



மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் சுற்றிச் சுழன்று தமிழகமெங்கும் உள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளையெல்லாம் சந்தித்து, கலந்துரையாடி, அதிகாரிகளையெல்லாம் அன்போடு அரவணைத்து, ஆணையிட்டு, மக்கள் நலப் பணிகள் வேகமாக நடைபெறுவதற்குக் காரணமாக இருக்கிறார். கடந்த கால ஆட்சியிலே கவனிப்பாரற்றுக் கிடந்த உள்ளாட்சித் துறையிலே இன்றைக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறையில் ஊரக வளர்ச்சித் துறைக்கு மட்டும் 504 கோடி ரூபாய் இந்த நிதியாண்டிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 300 கோடி ரூபாய், உள்ளாட்சி அமைப்புகளுக்கு 10,165 கோடி ரூபாய் என வழங்கப்பட்டு, இன்றைக்கு வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது.

"அன்னச் சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்கிற பாரதியின் கனவுகளுக்கு உயிரோட்டம் தருகிற வகையில், பள்ளிக் கல்விக்கென 7,852 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருந்த தமிழ் மக்களுக்கு வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டியதோடு அல்லாமல், அவர்களின் எதிர்கால வாழ்வில் புத்தொளி பரவி, புதியதோர் உலகம் காண, சாதி பேதமற்ற சமத்துவ நிலை அடைந்திட, பொருளாதார வளர்ச்சி கண்டிட வேண்டும் என்று விரும்புகிற முதலமைச்சராக விளங்குவதால்தான் இவ்வளவு நிதியினை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

அதைப்போல, உணவுத் துறைக்கென அத்தியாவசியப் பொருட்கள் மானியத்திலே வாங்குவதற்கென 1,950 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். முன்னாள் முதல்வர் ஆட்சி நடத்தியபோது, தஞ்சை மாவட்டத்திலே எலிக் கறி, நத்தைக் கறி சாப்பிடக்கூடிய அவல நிலை, பட்டினிச் சாவுகள் எல்லாம் ஏற்பட்டன. அது இனி எந்தக் காலத்திலும் தமிழகத்திலே ஏற்பட்டுவிடக்கூடாது என்று எண்ணிய காரணத்தினால், சீர்மிகு திட்டங்களின்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) சீரான விநியோகம் நடைமுறைப்படுத்தப்பட்டு, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டுமென்கிற நோக்கத்தில்தான் இவ்வளவு நிதியினை ஒதுக்கித் தந்திருக்கிறார் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்.

மின்சாரத் துறையிலே தமிழகத்தின் மின் தேவை ஆண்டுதோறும் அதிகமாவதையும், நீண்ட காலத் தேவையைக் கருத்தில் கொண்டும், வட சென்னை அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து 3,700 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, சில திட்டங்கள் தொடங்கப்பட்டும், இன்னும் சில திட்டங்கள் தொடங்கப்படவும் உள்ளன. 1,720 கோடி ரூபாயிலே 90 புதிய மின் நிலையங்கள் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவையெல்லாம் முதல்வர் கலைஞர் ஆட்சியின் சாதனைகள். இவைபோன்ற திட்டங்கள் கடந்த காலத்திலே அ.தி.மு.க. ஆட்சியிலே 5 ஆண்டு காலத்தில் பாதி அளவாவது நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்றைக்கிருக்கிற மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது. இதை வள்ளுவரின் வாய்மொழிப்படி குறிப்பிட வேண்டுமெனில்,

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

செய்ய வேண்டியதை நேரத்தோடு செய்திருந்தால், இந்த மின் தட்டுப்பாடு வந்திருக்காது. ஆகவே, மின் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் அ.தி.மு.க. ஆட்சிதான் என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த கால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளெல்லாம் டப்பா வண்டிகளாக . . . (குறுக்கீடு) ஓட்டை உடைசல்களாக, பரிதாபமாகக் காட்சி தந்தன. இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள் 5,451 பேருந்துகள் புதிய பேருந்துகளாக இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையில் மேலும் 3,500 பேருந்துகள் புதிதாக வாங்கிட ரூபாய் 330 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அ.தி.மு.க. ஆட்சியில் போதுமான மின்சாரம் உற்பத்தி செய்யவில்லை; ஆகவேதான் இப்போது பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இரண்டு ஆண்டு காலமாக இவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. இரா. இராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** இந்த இரண்டு ஆண்டு காலத்திலே பல அற்புதமான திட்டங்களையெல்லாம் இந்த மின்சாரத் துறையிலே தீட்டி எதிர்கால மின்சாரத் தேவையைப் போக்குகிற அளவுக்கு அற்புதமாக நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** இன்றைக்குப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, இந்த நிதிநிலை அறிக்கையில் மேலும் 3,500 பேருந்துகள் புதியதாக வாங்கிட ரூ.330 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்ட போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அவர்கள் விரும்பியவாறு ஊதிய உயர்வு வழங்கியும், டீசல் விலை மற்றும் உதிரி பாகங்கள் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்ட நிலையிலும், பொது மக்களின் நலன் கருதி அவர்களுக்கு சுமை இருக்கக்கூடாது என்பதால், பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல், அரசுப் பேருந்துகள் என்று நம்பமுடியாத அளவிற்கு, அழகழகான பேருந்துகள், அந்தப் பேருந்துகளில் மக்கள் பயணம் செய்வதைப் பார்க்கக் கண் கோடி வேண்டும். 'வாழ்க கலைஞர்' என்று பொது மக்களும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களும் பாராட்டுகிறார்கள்.

1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்களே, உங்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவினால், இன்று தமிழகம் முழுவதும் உள்ள பெண்களைத் தலைநிமிரச் செய்தவர் நீங்கள். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று கேட்ட காலம் மாறி, 'வீட்டினிலே பெண்ணைப் பூட்டி வைப்போம்' என்கிற நிலையும் மாறி,

"பட்டங்க ளாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப, பெண்களுக்கு விடுதலைப் பெற்றுத் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். பெண்களுக்கு சொத்திலே

சம உரிமை, பெண்களுக்கு வேலைவாய்ப்பிலே 30 சதவிகிதம், பெண்களுக்கு எண்ணற்ற சலுகைகள், உரிமைகள் வழங்கிய உங்களை மாதர் குலம் என்றென்றும் நன்றியோடு பார்க்கும்.

தமிழக மனித வள மேம்பாடு ஒரு உன்னதமான நிலைக்கு முன்னேறி வருகிறது. குழந்தைகள் மற்றும் மகளிர் நலத் திட்டங்கள், மாணவர்களின் நலன் மேம்பாட்டுத் திட்டங்கள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர், உடல் ஊனமுற்றோர், மன வளர்ச்சி குன்றியோர், அரவாணிகள், நரிக்குறவர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், படித்து வேலையில்லாத இளைஞர்கள், அமைப்புசாராத் தொழிலாளர்கள், பனைத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், முன்னாள் இராணுவத்தினர், சிறுபான்மையினர், சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், தூய்மைப் பணி புரிவோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர் நலனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், ஒதுக்கீடுகள் நிரம்பவுள்ளன. இத்தகைய திட்டங்கள் அனைத்தும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில், தமிழக நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளன என்பது மிகப் பெரிய சிறப்பு அம்சமாகும். ஆகவே, தமிழகம் அனைத்திந்திய அளவில் பல்வேறு நல நடவடிக்கைகளைத் தொடர்ந்து அமல்படுத்துவதிலும், மக்கள் நலம் பேணும் அரசாக விளங்குவதிலும், தொடர்ந்து தமிழகம் இந்தியாவிலேயே முன்னோடியாக வழிகாட்டும் மாநிலமாகத் திகழ இந்த நிதிநிலை அறிக்கை மேலும் வழிவகை செய்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு, ஒரு சிறந்த வரவு-செலவுத் திட்டத்தை நாட்டு மக்களுக்கு அளிக்கிறபோது, விலைவாசி உயரும் என்கிற பயமும், சில நேரங்களில் அத்தியாவசியப் பொருட்களான உணவுப் பொருட்கள், தானியங்கள், எண்ணெய்ப் பொருட்கள் போன்ற பொருட்களின் விலை உயரும் என்கிற நிலையை எல்லாம் நாம் கண்டு வந்திருக்கிறோம். ஆனால், அத்தியாவசியப் பொருட்களுக்கான, உணவுப் பொருட்களுக்கான வரியை நீக்கி, கடந்த மூன்று ஆண்டு காலமாக வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையை வரிசையாக மக்களுக்கு சமர்ப்பித்துள்ள ஒரு மகத்தான அரசு இருக்கிறது என்று சொன்னால், அது மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு மட்டும்தான் என்பதை அறுதியிட்டு சொல்லிக்கொள்ள முடியும்.



வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கலுக்குப் பிறகு, பண வீக்கம் வரும், தனி நபர் வருமானம் குறையும் என்றெல்லாம் அஞ்சிய நிலை போய், விலைவாசி ஏறாமல், தனி நபர் வருமானம் பெருகவும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்களுக்கு வாங்கும் சக்தியை ஏற்படுத்தி, பொருளாதார நிபுணர்கள்கூட பாராட்டும்படி, இந்தியா முழுமைக்கும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பின்பற்ற வேண்டும் என்று பல பொருளாதார நிபுணர்கள் ஆதரிக்கிற ஒரு நிதிநிலை அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கை திகழ்கிறது.

மிகச் சாதாரண கட்சித் தொண்டனாக உள்ள எனக்கு இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். கடந்த 3 ஆண்டு காலமாக நிதிநிலை அறிக்கையினால் பொருளாதாரம் புரட்சிகரமாக வளர்ந்திருக்கிறது. இந்தியத் திருநாடு உலகமயமாக்கல் என்ற கொள்கையோடு ஒட்டிப் போகிற ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருந்தாலும்கூட, இந்தியத் திருநாட்டின் ஒரு பகுதியாக இருக்கிற தென் பகுதியான தமிழ்நாட்டில் மட்டும் நாம் எதிர்பார்த்ததைவிட தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள், தனி மனித வருமானம் பெருகுதல், பொருளாதார வளர்ச்சி, வரி விலக்கு, வரிக் குறைப்பின்மூலம் எல்லோருக்கும் வாங்கும் சக்தி என்கிற ஒரு நிலை உருவாகியிருக்கிறது என்று சொன்னால், நம்முடைய முதலமைச்சரால்தான் அந்த நிலை உருவாகியிருக்கிறது. இதைப் பாராட்டுகிறபோது, மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் பல முறை நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே தாலி, கருகமணி, சிலுவைக்கு எடை வரம்பின்றித் தங்கம் வாங்குவதற்கு வரி விலக்கு, பன், ரொட்டி, துணி உள்ளொட்டிய காகித உறை, சித்த மருந்துகள், சோயா எண்ணெய், மஞ்சள் பொடி, மிளகாய்ப் பொடி, தனியா பொடி, துருவல், தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால் பொடி, இளநீர், வெல்லம், காட்டாமணக்கு விதை, காட்டாமணக்கு எண்ணெய், இரப்பர் பூச்சுள்ள நெசவுத் துணிகள், இவற்றிற்கெல்லாம் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வறுக்காத சீவல், மொசைக் சில்லுகளுக்கும், கோப்பு அட்டைகள், பிளாஸ்டிக்கினால் ஆன சட்டங்கள், மின் உற்பத்தி இயந்திரங்கள், கட்டுமானப் பணிகளுக்கு வாடகைக்கு விடப்படும் பொருட்கள் இவற்றிற்கெல்லாம் மகத்தான வரிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-40

13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 17,583 கோடி ரூபாயிலே கையெழுத்திடப்பட்டு, இதனால் 1 இலட்சத்து 41 ஆயிரத்து 640 பேர் வேலைவாய்ப்பு பெறுவர். கூட்டுறவு வேளாண்மைக் கடனைத் தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், கூட்டுறவு வீட்டு வசதிக் கடனையும் தள்ளுபடி செய்துள்ள ஓர் அரசை நாம் எங்கு காண முடியும் என்று கேட்டால், அது தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசைத் தவிர, வேறு எங்கும் காண முடியாது என்றுதான் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயத்தில் எந்தப் பிரிவினருக்காவது இந்த நிதிநிலை அறிக்கையினால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று யாராவது விவாதம் செய்யத் தயாரா? அனைவரின் முன்னேற்றத்திற்காக அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் left over-ஏ இல்லை என்ற விதத்தில் leftist ஆன பொதுவுடைமை இயக்கக் கட்சியினரே நம்மை ஆதரித்து அறிக்கை விட்டிருக்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். இதைவிட நமக்கு வேறு என்ன வேண்டும்?

பொருளாதார மேதை என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள்கூட தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையை மையமாக வைத்து நாங்களும் தயார் செய்கிறோம் என்று சொல்லுகின்றபோது, எங்களுக்குக் கிடைக்கின்ற பெருமையைவிட வேறு என்ன வேண்டும்?

சேலத்தினுடைய ஒரு பகுதியாக இருந்த கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களின் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், தளபதி அவர்களை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்து, நிதி உதவியைப் பெற்று, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த கடந்த மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்குள்ள சில அரசியல் கட்சிகள்—அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அங்கு இருக்கிற எடியூரப்பாவை—இல்லை, இல்லை, இடையூறப்பாவை வரச் சொல்லி, தடங்கல் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இங்கு வந்த இடையூறப்பா, இடையூறு செய்தார். தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களும் இடையூறப்பாவினுடைய செய்கையைக் கண்டித்தார்கள். (குறுக்கீடுகள்) அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சொன்னார்கள். இறையாண்மைக்கு எதிரானது



என்று சொன்னார்கள். ஆனால், ஒரேயொரு கட்சியினர் மட்டும் கண்டிக்கவில்லை ஏன் அவர்கள் கண்டிக்கவில்லை என்றால், இதனால். . . (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** ஆனால், இறையாண்மைக்கு எதிரானது என்று சொன்னார்கள். அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சொன்னார்கள். ஆனால், ஒரேயொரு கட்சியினர் மட்டும் கண்டிக்கவில்லை. ஏன் அவர்கள் கண்டிக்கவில்லை என்றால், இதனால் கலைஞர் அவர்களுடைய புகழ் பரவும் என்பதை அறிந்தவர்கள். அதனால் இடையூறப்பாவை வரச் சொல்லி, தடங்கல் செய்கிறார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரால் முயற்சிக்கப்பட்ட 150 ஆண்டு கால. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களை ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. இரா. இராஜேந்திரன்:** 150 ஆண்டு காலக் கனவுத் திட்டமான சேது சமுத்திரத் திட்டத்திற்கு 2,000 கோடி ரூபாய் வரை செலவு செய்திருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களை ஒன்றும் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலே இருந்து வந்து எடியூரப்பா இடையூறு செய்கிறார் என்று சொன்னால், அதைத் தடுக்க வேண்டியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருக்கிற காவல் துறையே தவிர, அதைத் தடுக்க முடியாமல் ** நீங்கள் எங்களைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், அவர் சார்ந்த பா.ஜ.க.வைச் சேர்ந்த இல. கணேசன்கூட கண்டித்தார், அவர்கள் வந்தது தவறு என்று. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், என்ன?

**திரு. கே.ஏ. செங்கோட்யைன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கண்டித்து இன்றைக்கு அங்கே ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. இரா. இராஜேந்திரன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கோட்டையன் பேசுகிறபொழுது ** என்கிற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார். அதை நீங்கள் நீக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார். தி.மு.க. வலுவான அரசு. மக்களுக்கு நன்மை செய்கிற அரசு என்று நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும். எனவே, அந்த வார்த்தையை தயவு செய்து சபைக் குறிப்பிலிருந்து எடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் அமைதியாக இருங்கள். திரு. இராஜேந்திரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** இந்தியப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்குப் பல்வேறு நாடுகளோடு தமிழக வாணிபத் தொடர்பு ஏற்பட்டு, வளர்ச்சிப் பாதைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் அழைத்துச் செல்கிற வகையிலே இந்தத் திட்டத்தைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, 14-5-2001 ஆம் நாள் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றபோது அன்று 28 ஆயிரத்து. . .

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை, இங்கிலாந்து நாட்டிலே ''Great Charter'' என்று புகழப்படுகிற Magna Carta சாசனத்திற்கு இணையாக இன்றைக்கு ஒரு மிகப் பெரிய நிதிநிலை அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நிதிநிலை அறிக்கை பாதுகாக்க வேண்டிய கலைக் களஞ்சியம், கற்பூரப் பெட்டகம் என்பதைச் சொல்லி இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஆதரித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச அனுமதித்த தங்களுக்கும், வாழும் பெரியாராக, சமூக நீதிக் காவலராக, அனைத்துத் தரப்பு மக்களின் துயர் துடைப்பதே உயிர் மூச்சு எனத் தமிழக மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் குடும்பத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுக்கு நன்றியினைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, காவிரி ஆற்றில் வெள்ளக் காலங்களிலே ஏற்படுகிற உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கால்வாய்மூலம், அக்னியாறு-கோரையாறு-பாம்பாறு-குண்டாறு இணைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தக் காவிரியாற்றின் குறுக்கே கதவணை அமைக்க 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 255 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதை பா.ம.க. சார்பில் வரவேற்கிறோம். இதைப்போலவே, சேலம் மாவட்டம், மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து வெளியேறும் உபரி நீர் கடந்த ஆண்டில் மட்டும் 7 முறை நிரம்பி கடலில் கலந்து வீணடிக்கப்பட்டுள்ளது. இந்த உபரி நீர் சேலம் மாவட்ட விவசாயிகளுக்குப் பயன்பட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வைத்து, அறிக்கையின்மூலமும், ஆர்ப்பாட்டம்மூலமும் பா.ம.க. நிறுவனத் தலைவர் அய்யா தலைமையில் விவசாயிகள் 50,000 பேரைத் திரட்டி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் செய்தும், இதற்கான செயல் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லாதது சேலம், நாமக்கல் மாவட்டங்களின் மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் நீளம் அமைத்து, மேச்சேரி, கூனாண்டியூரிலிருந்து கால்வாய் அமைத்து, மேட்டூர் உபரி நீரை, ஓமலூர், சரபங்கா ஆறு, பொன்னி ஆறு, சேலம் மணிமுத்தாறு, வசிஷ்ட நதியை இணைப்பதன்மூலம் சேலம், நாமக்கல் மாவட்டங்கள் முழுவதும் பாசனத்திற்குப் பயன்படும். நிலத்தடி நீரை உயர்த்துவதன்மூலம் குடிநீர்ப் பற்றாக்குறை அறவே அகற்றப்படும். இதை இந்தத் தொடரிலே மாண்புமிகு முதல்வர் அறிவித்துச் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். குஜராத் மாநிலத்தில் நர்மதா நதியிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது தெரிவித்த கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலேயும் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கட்சியின் சார்பிலே தலைவர் மணி அவர்களும் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அவர்கள் குறிப்பிட்டபடி, கீழேயிருக்கிற தாரமங்கலம், நங்கவள்ளி, மேச்சேரி போன்ற இடங்களுக்குக் காவிரியிலே மிகையாக வருகிற நீரைக் கொண்டு வர முடியுமா என்பதை ஆய்வு செய்தோம். ஆனால் 120 அடிதான் நீர்மட்டம் நம்முடைய மேட்டூர் அணையில். ஆனால், இந்தப் பகுதி மேடாக 340 அடியிலே இருக்கிறது. 120 அடி, 340 அடி. ஆகவே, நீர்மட்டத்தை உயர்த்தி தண்ணீரைக் கொண்டு போக முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆய்வு செய்தவர்கள், 120 அடிக்கும், 340 அடிக்கும் இடையிலே பெருத்த வேறுபாடு இருக்கிற காரணத்தால், பம்பிங்கைத் தவிர, இதற்கு வழி கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால், பம்பிங் என்பது மிகப் பெரிய பணி. அதே நேரத்திலே மின்சாரமும், அதற்குச் செலவும் அதிகமாகும். எனவே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை ஆய்வு செய்ததில், கால்வாய்மூலம் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு சாத்தியக்கூறு இல்லையென்றுதான் தெரிய வந்திருக்கிறது. ஆனால், அவருடைய கோரிக்கை நியாயம் என்பதை நான் உணர்கிறேன், மிக வறண்ட பகுதிக்குப் போவதில்லை என்பதை. இப்போது வந்த ஆய்விலே அது இயலாமல் இருக்கிறது. மேற்கொண்டு பார்க்கலாம்.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கை நியாயமான கோரிக்கை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இந்தியாவிலே, குஜராத் மாநிலத்திலே, நர்மதா நதியிலிருந்து 700 நாட்களுக்குள் 1,400 கிலோ மீட்டர் தூரம் பிரம்மாண்டக குழாய்கள் அமைத்து நர்மதா நதி நீரை பம்ப் செய்து வறட்சியான அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீரைக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அடைந்துள்ளன. அந்த வரலாற்றுச் சாதனையை குஜராத் அரசு நிகழ்த்தியுள்ளது.

பிற்பகல் 12-50

அதேபோன்று ஆந்திர அரசு, கோதாவரி ஆற்றிலிருந்து கங்கா intake மூலம் தேவதுலா pipeline திட்டத்தில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி pumping system-லே செய்திருக்கிறார்கள். எனவே, இதன் அடிப்படையிலே, தண்ணீர் தேங்கும்போது, தாரமங்கலம் தொகுதியிலே, மேச்சேரி ஒன்றியத்திலே, மேச்சேரியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலே கூனாண்டியூர் பகுதியிலே 20, 30 அடி உயரம் தேங்குகின்ற அந்தத் தண்ணீரை அந்த இடத்திலேயிருந்து பம்ப் செய்து எடுத்து, மேச்சேரிக்கு 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு விட்டால், அங்கேயிருந்து இயற்கையான வாய்க்கால் வழியாக இந்த 200 அடி கீழே பள்ளமாக இருக்கிற சேலம் பகுதிக்கு விடுவதன் வாயிலாக, நிரந்தரமாக ஒரு பாசனத் தீர்வு சேலம் மாவட்டத்திற்குக் கிடைக்கும். இதை தயவுசெய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் கருணையோடு பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைத்து தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பா.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் தமிழக அரசுக்குக் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மருத்துவர் அய்யா அவர்களுடைய கோரிக்கையையேற்று, கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்ததற்கு இந்த நேரத்திலே நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையிலே, கூட்டுறவுத் தேர்தல் நடப்பதற்கான எந்தவிதமான ஓர் அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லாதது ஏமாற்றத்தை அளிக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் பெற வேண்டிய மத்திய அரசின் சிறப்பு நிதியானது எந்தக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது என்பதையெல்லாம் இப்பேரவைக்குத் தெளிவுபடுத்தி, கூட்டுறவுத் தேர்தலுக்கு என்று தனியாகத் தேர்தல் ஆணையம் அமைத்து, விரைவாகக் கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் மத்திய அரசின் மானியங்கள் மற்றும் இதர உதவிகள் அனைத்தும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்



மூலமாக வழங்கப்பட வேண்டும். மேலும், பயனாளிகள் பட்டியல் பெயர்ப் பலகையிலே ஒட்டப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், தற்சமயம் சேலத்திலே தோட்டக் கலைத் துறையின்மூலமாக வழங்கப்பட்ட மண் புழு உரம், வேப்பம் புண்ணாக்கு முதலியன தரமற்றவையாகவும், அளவு குறைந்தும் இருக்கிறது. அதிகாரிகள் விவசாயிகளிடம் வெற்றுத் தாளில் கையொப்பம் பெற்று ஏமாற்றியுள்ளார்கள். எனவே, அதிகாரிகள் வழியாக வழங்குவதைத் தவிர்த்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக இடுபொருள்கள் அனைத்தும் வெளிப்படையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியில், பால் கொள்முதல் விலை ரூ. 2 உயர்த்தியுள்ளதை வரவேற்கிறோம். ஆனால், பொது மக்களிடம் இது கடும் பொருளாதார நெருக்கடியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. பால் விற்பனை விலையை ரூ. 4 உயர்த்தியுள்ளார்கள். அதை மறுபரிசீலனை செய்து, இப்போது அந்தப் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்த அந்த விலையையும், பால் வாங்குபவர்களுக்கு விலையைக் குறைக்கின்ற ஒரு நிலையையும் அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே பல அரசு நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி 50 முதல் 60 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நேரிலே சென்று நான் ஆய்வு செய்திருக்கிறேன். அதே நேரத்திலே, அரிசி வருகின்ற ஓரிரு நாட்களிலே அந்த இரண்டு ரூபாய் அரிசி கொடுக்கப்படுகிறது; மாதம் முழுவதும் கொடுக்கப்படுவதில்லை. எனவே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், நியாய விலைக் கடைக்கு 100 சதவீதம் அரிசி வழங்கி, எப்போதும் அந்த அரிசி அவர்களுக்குக் கிடைக்கின்ற ஒரு நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முதியோர் உதவித் தொகை ரூ.400 வழங்கப்படுவதிலே, உடல் ஊனமுற்றோர், விதவை, கணவனால் கைவிடப்பட்டோர், மனநலம் குன்றியோர் அனைவருக்கும் நிபந்தனையின்றி, பட்டியலிட்டுக் கட்டாயமாக, முழுமையாக, உடனடியாக வழங்கப்பட வேண்டும். ஒன்றரை ஆண்டு காலமாக பல நபர்களுக்கு இன்னும் அந்த 400 ரூபாய் தமிழகத்திலே, அதுவும் குறிப்பாக, எனது தொகுதியிலே வழங்கப்படாமல் இருக்கிறது. எனது ஓமலூர் தொகுதியிலே,

மாண்புமிகு முதல்வர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், நான் பேசிய முதல் உரையிலே கேட்டபடி, ஓமலூருக்கு என்று கயிறு உற்பத்திச் செய்யக்கூடிய உற்பத்தித் தொழிற்சாலை உடனடியாகத் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். இதுவரை அதற்கான எந்த ஒரு பணியும் தொடங்கப்படவில்லை. எனவே, இந்தத் தொடரிலாவது அதற்கான நிதியினை ஒதுக்கி, அந்தப் பணியினைத் தொடங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, ஓமலூரிலே தனி நீதிமன்ற வளாகம் (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, time ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒன்றரைக் கோடி ரூபாய் கடந்த ஆட்சியிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதற்கானப் பணி தொடங்கவில்லை. எனவே, இந்த ஆண்டிலே அந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்று சொல்லி, ஓமலூர் பேருந்து நிலையம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புக்கு நன்றி சொல்லி, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. அ. தமிழரசு:** ஒரேயொரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதிக்குச் சிறப்புப் பொருளாதார மண்டலம் தந்தமைக்கு முதற்கண் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், மாவட்ட அமைச்சரான உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இயற்கைச் சீற்றத்தினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டமைக்கு 7,500 ரூபாய் கொடுத்து, அவர்களுடைய வயிற்றில் பாலை வார்த்தார்கள்.



ஆனால் அதேபோல, இந்த இயற்கைச் சீற்றம் என்பது மீனவர்கள் வாழும் பகுதிகளிலும் வந்திருக்கிறது. இராமநாதபுரத்திலே, குறிப்பாக, நாகப்பட்டினத்திலும் பெரும்பாலான மீனவர்கள் 10 நாட்களுக்குக் கடலுக்கே செல்லவில்லை. இதனையும் கருத்தில்கொண்டு, இந்த அரசாங்கம் செயல்பட வேண்டுமென்ற தாழ்மையான என்னுடைய வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

வேளாண் துறையிலே என்னுடைய முதல் கோரிக்கை என்பது, விவசாயிகளுக்கே விலை நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு தகுதியை இந்த அரசாங்கம் வழங்கவேண்டும். ஒரு குண்டூசிக்குக்கூட, அதை என்ன விலைக்கு விற்க வேண்டுமென்று அதைத் தயாரிப்பவனுக்கு உரிமையுண்டு. ஆனால், விவசாயிகள் செய்கின்ற உற்பத்திக்கு, அவர்களால் விலை நிர்ணயம் செய்ய முடியாத ஒரு அவல நிலையைத்தான் இன்றைக்கு நாம் கண்டுகொண்டிருக்கின்றோம். எனவே இதற்கு, கருணை உள்ளம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சியில் ஈடுபடுவார் என்ற நம்பிக்கையோடு, அடுத்த கோரிக்கையினை வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லும்போது, 'கரும்பு வெட்டுவதற்கென்று வெளிநாட்டிலிருந்து கரும்பு வெட்டுகின்ற மெஷினை இந்த அரசாங்கம் கொள்முதல் செய்கின்றது. அதற்குக்கூட 25% மானியம் தருகிறோம்' என்று சொன்னார்கள்; வரவேற்கின்றோம். ஆனால் அதே சமயம், வட்டாரந்தோறும் அரசாங்கமே இந்த மெஷின்களை வைத்து வாடகைக்கு விட்டால், ஏழை விவசாயிகள் பயன்பெறுவார்கள். இல்லையென்றால், இடைத் தரகர்கள் இதிலும் இலாபம் சம்பாதிப்பார்கள் என்ற என்னுடைய கருத்தினை வைக்க விரும்புகிறேன்.

பண்ணை ஆதிக்கத்தை அறவே ஒழித்தவர் அன்னை இந்திரா காந்தி. ஆனால், இன்றையதினமோ N.R.I. என்ற பெயராலே, ஆயிரக்கணக்கான ஏக்கர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் டிராக்டர் போன்ற கருவிகள், அதைப்போல நெல் அறுவடை செய்கின்ற இயந்திரம், இதெல்லாம் மாவட்ட அளவிலே வாங்கி

வைத்து, குறைந்த வாடகையிலே கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இன்னும் வெளிநாட்டிலேயிருந்து, ஜப்பானிலேயிருந்து அறுவடை இயந்திரம், சீனாவிலேயிருந்து கரும்பு வெட்டுவதற்கான இயந்திரம், இதையெல்லாம் வாங்கி ஓரளவிற்கு அரசாங்கம் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் குறைந்த வாடகையிலே கொடுக்கவிருக்கின்றோம். அதே நேரத்திலே, எல்லோருக்கும் பயன்படக்கூடிய வகையிலே அது அமைந்துவிடாது. அதனாலேதான், தனியார் வாங்க முன்வந்தால், அவர்களுக்கு subsidy-யாக 25% தரப்படும் என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அமைச்சரின் பதிலுக்கு நன்றி. ஆனால், இதை ஒரு தொழிலாக இடைத் தரகர்கள் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசினுடைய கடமை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் N.R.I. என்ற பெயரிலே பணம் வைத்திருப்பவர்கள் முதலீடு செய்து, வெறும் கறம்பாக வைத்து விடுகிறார்கள். அதனால், உணவு உற்பத்தி இன்றைக்குக் குறைந்துவிடுகிறது. அவர்கள் செய்கிறார்களா என்று பாருங்கள்; அவர்கள் செய்யவில்லையென்றால், அதையும் அரசாங்கம் கையகப்படுத்தி விவசாயிகளுக்குத் தந்தால், ஒரு காலத்திலே, இன்னும் 10 ஆண்டுக் காலத்திலே தமிழகத்தில் உணவுப் பஞ்சம் வந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு இந்த அரசாங்கம் செயல்படும் என்ற என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுச் சங்கத்திலே கூட்டுறவுக் கடன் ரூ.25 ஆயிரம் பெற்றவர்களுக்கு முழுத் தள்ளுபடி என்று கூறியிருக்கிறார்கள்; மனதாரப் பாராட்டுகின்றோம். ஆனால், ரூ.25 ஆயிரத்திலே அதிகமாகப் பயனடையமாட்டார்கள்; அந்தக் கூட்டுறவுக் கடன் வாங்கியவர்கள் பயனடையமாட்டார்கள். இதுவரை கட்டியவர்கள் எல்லாம், அபராத வட்டியிலும், வட்டியிலும்தான் கணக்கு எடுத்துக்கொள்கிறார்கள். அதையும் முதலுக்கு adjust செய்யுமாறு இந்த அரசாங்கத்தைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆயிரம் ரூபாய் வசூலிக்கிறார்கள்; யாரிடம்? கடன் பெற்றவர்களிடமே ஜப்தி நோட்டீஸ் அனுப்புவதற்கும் 1,000 ரூபாய் பெறுகிறார்கள். இதையெல்லாம் இந்த அரசாங்கம் தாயுள்ளம் கொண்டு சிந்திக்கவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். பத்திரிகையாளர்கள், குறிப்பாக. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-00

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** கெடு கடந்தவர்களுக்குத்தான் அது நடக்கிறதே தவிர, கெடுவுக்குள்ளேயே அந்தக் கடனைக் கட்டியவர்களுக்கு அது கிடையாது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அமைச்சரின் பதிலுக்கு நன்றி. பத்திரிகையாளர்களுக்கென்று நிறைய சலுகைகளை இந்த அரசாங்கம் தருகின்றது. ஆனால், இன்னும் என்னுடைய தொகுதியிலே பார்க்கும்பொழுதோ அல்லது மற்ற மாவட்டங்களைப் பார்க்கும்போதோ, Area Reporters என்ற பெயரிலே வெறும் column centimetre-லே பிழைப்பை நடத்திக்கொண்டு இருக்கின்ற நிறைய நண்பர்கள்—நிருபர்கள் இருக்கின்றார்கள். அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்த சலுகைகளையெல்லாம் பெறவேண்டுமென்று சொன்னால்—ஆந்திராவிலும், கேரளாவிலும், கர்நாடகாவிலும் Press Academy என்று ஒன்றை வைத்திருக்கின்றார்கள். அதன்மூலமோ, இல்லையேல் ஒரு கமிட்டியைப் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், மூத்த நிருபர்களையும் அதிலே உறுப்பினர்களாகச் சேர்த்தோம் என்று சொன்னால், அவர்கள் அங்கீகரித்தால், இந்த அரசாங்கம் தருகின்ற சலுகையை இந்த நிருபர்களும் பெறலாம் என்ற ஒரு கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய தொகுதியில் மட்டுமல்லாமல், நிறைய தொகுதிகளிலே அரசாங்கம் மணல் எடுக்கின்றது; தவறில்லை. ஆனால், இந்த மணல் எடுக்கின்ற வேளையிலே, கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் லாரிகள் ரோடிலே நிற்கின்ற ஒரு அவல நிலை ஏற்படுகிறது. இதற்குண்டான வாடகையை யாரிடம் பெறுகிறார்கள்? இதைப் பயன்படுத்துகிறவர்களிடம்தான் பெறுகிறார்கள். ஒரு common man-க்குத்தான் இந்தச் சுமை போகிறது. திருப்பதியிலே ஒரு மாதத்திற்குப் பிறகு, நாம் சாமியைத் தரிசிக்க வேண்டுமென்று சொன்னால், இங்கே கணினிமூலம் பதிவு பண்ணலாம். அதுபோல் செய்வதால், அப்பொழுது correct ஆக இந்த லாரி நம்பர், இந்த date, 10-30-லிருந்து 11-00 மணிக்குள் வந்தால் மணல் அள்ளிக்கொள்ளலாம்

என்ற ஒரு முன் பதிவை வைத்தோமென்று சொன்னால், waiting period நமக்குக் குறையும். அதன்மூலம் வாடகையும் நமக்குக் குறையும். அதன்மூலம் பயனாளிகளும் பயன் பெறுவார்கள் என்ற என்னுடைய ஒரு suggestion-ஐயும் இந்த இடத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் சிவப்பு விளக்கு தருவதாக சொல்லிக்கொள்கிறார்கள். அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஏதாவது ஒரு வண்ணம், பச்சை வண்ணம் கொடுக்கலாம். பச்சை விளக்கு வைத்துக்கொண்டு நாங்கள் காரிலே செல்வோமென்று சொன்னால், அவசரக் காலத்திலே எங்களுக்கு அது உதவியாக இருக்கும் என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளையும் வைத்து, (சிரிப்பு) பச்சை என்று சொல்வதனால் நீங்கள் கற்பனை செய்துவிட வேண்டாம்; ஏனென்றால், நானும் ஆராய்ந்துவிட்டேன். இதைச் சொல்கிறோமே, இதன்மூலம் ஏதாவது சிண்டுமுடிப்பார்களா என்று. ஏனென்றால், நீல நிறம் என்பது ஆம்புலன்ஸ்-க்கு பொருந்துகிறது. சிவப்பு விளக்கு என்பது நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் பயன்படுத்துகிறார்கள்; காவல் துறை அதிகாரிகள் பயன்படுத்துகிறார்கள். வேறு என்ன தெரியும்? Yellow. Yellow என்பது வேறு எதற்கோ use பண்ணுகிறார்கள். அதனால், பச்சை நிறம் என்பது எளிதாகப் பார்க்கக்கூடிய, அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய ஒரு நிறம் என்பதனால், ஒரு பச்சை விளக்கு பொருத்திய கார் எங்களுக்கெல்லாம் தந்தால்— கார் நாங்கள் வைத்திருக்கின்றோம். அதற்கு மேல் பொருத்திக்கொள்வதற்கு நீங்கள் அனுமதி தந்தால், எளிதாக எங்களுடைய மக்கள் சேவையைச் செய்வதற்குத் தோதாக இருக்குமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தையும் இந்த நேரத்திலே வைத்துவிடுகின்றேன்.

மேலும், கடந்த தி.மு.க. ஆட்சியிலே, கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் 35,000 பேருக்கு J.A. postings தந்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வேலையிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டார்கள். மீண்டும் ஆதவன் உதித்தது; இவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி வீசத் தொடங்கியது. 21-11-2006-லே நம்முடைய அரசாங்கமானது, அவர்கள் Supreme Court-க்குச் சென்றிருந்தாலும், அரசாங்கம் அவர்களை மீண்டும் பதவியிலே அமர்த்துகிறோம் என்ற வாக்குறுதியைத் தந்தது. ஆனால், இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற ஒரு செய்தி வந்துகொண்டிருக்கின்றது. எனவே, இந்த அரசாங்கம் செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



Retired V.A.O; 1980-லே கிராம உதவியாளர்கள் ஒரே நாளிலே அத்தனை பேரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால், அவர்கள் உதவி pension தான் பெறுகிறார்கள். குறைந்தபட்ச ஓய்வூதியம் வெறும் 1,275 ரூபாய் இப்போது கிடைத்தால் போதும். ஏனென்றால், 70 வயதைத் தாண்டித்தான் பெரும்பாலோனோர் இருக்கிறார்கள். 1,700 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசாங்கம் செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** செய்யாறுக்கு வேண்டியதை— என் தொகுதிக்கு வேண்டியது, பிரம்மதேசம்-ஓச்சேரி பாலம். எங்களுடைய ஊரிலேயிருந்து திருச்சிக்குப் பேருந்து வேண்டுமென்று அமைச்சர் நேரு அவர்கள்—உங்களைவிட நாங்கள் சொந்தம் கொண்டாடலாம்—நேரு என்ற பெயர் வைத்த காரணத்தினாலே காங்கிரஸ்காரனுக்கு அதிக உரிமையுண்டு என்ற காரணத்தினால், செய்யாறிலிருந்து திருச்சிக்குப் பேருந்து தேவைப்படுகின்றது. துணை சார் பதிவாளர் அலுவலகமும் பிரம்மதேசத்திற்குத் தேவைப்படுகின்றது. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன். (குறுக்கீடு)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** தண்டரைக் கால்வாய் என்பது பெரிய கால்வாய். அதை மேலும் அகலப்படுத்த வேண்டும். அப்போதுதான் மாமண்டூர் ஏரி நிரம்பும். இல்லையென்றால், செய்யாறிலிருந்து வருகின்ற நீரானது 15 ஏரிகளை நிரப்பிவிட்டுத்தான் மாமண்டூருக்கு வரும். இந்த மாமண்டூர் என்பது உங்களுக்கே தெரியும். மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரி. இந்திரா காந்தியே அந்த ஏரிக்கு நேராகச் சென்று, ஏறி நின்று பார்த்தவர்கள். எனவே, அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஏரிக்கு, நீர் நிரம்ப வேண்டுமென்று சொன்னால், தண்டரைக் கால்வாய் அகலப்படுத்தப்பட வேண்டும் என்று கூறி, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசக்கூடிய வாய்ப்பை நல்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, ஓர் அரசை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொல்கிறபொழுது, "ஓர் அரசாங்கம் பசு மாதிரி; பசு பாலைக் கொடுக்கிறபொழுது, மக்கள் அதைச் சுவைக்க முடியும். பாலைக் குடிக்கும் மக்கள் பசுவுக்குப் புல் கொடுக்க முடியாமல் இருக்க முடியாது என்பதுபோல அந்த வரியை அரசாங்கத்திற்குக் கொடுத்தால்தான் நன்மை கொடுக்க முடியும்" என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்த மன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அனைத்துத் தரப்பு மக்களும் மகிழக்கூடிய வகையில் வரியின்றி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் இந்த நிதிநிலை அறிக்கையை வழங்கி இருக்கிறார்கள் என்பதைத்தான் தமிழகத்து மக்கள் பல்வேறு பகுதிகளில் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு நான்கு, ஐந்து பக்கங்களைப் படிக்கிறபோது, விவசாயத்திற்கு என்று உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கிறது. விவசாயிகள் வாழ்வில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருந்தாலும், அவர்களுடைய கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்திருந்தாலும், ஒரு தொலைநோக்கு சிந்தனையோடு எதிர்காலத்தில் அவர்களுடைய வாழ்வில் வளம் பெறுவதற்கு அவர்களுக்கு என்று சுய நிதிக் குழுக்களை அறிவித்த அரசு தலைவர் கலைஞருடைய அரசு என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. புதிதாக 1,500 கோடி ரூபாய் கடனை வழங்கியிருக்கிறார்கள், பயிர்க் கடன் வட்டி விகிதத்தை 4 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். புதிய தொழில்நுட்பத்தை வேளாண்மைத் துறையிலே அறிமுகப்படுத்தியிருக்கிற ஒரு நிதிநிலை அறிக்கை என்று சொல்லுகிறபோது, இந்த நிதிநிலை அறிக்கையை Agriculture-oriented Budget என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை இங்கே அமைந்திருக்கிறது. பல்வேறு கருத்துகளை மாமன்றத்திலே உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கைபற்றி வரவேற்றுப் பேசினாலும்கூட, ஓர் அரசாங்கம் நல்ல முறையிலே செயல்படுவதற்கு இரண்டு காரணங்கள். ஆட்சியாளர்கள் நல்ல முறையிலே சிந்தித்திட வேண்டும்; கஜானாவிற்கு நல்ல நிதி ஆதாரங்களை வரவேற்றிட வேண்டும். Resource Mobilization. தலைவர் கலைஞருடைய அரசில் அது நிதானமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கு இன்றைக்கு



அறிவித்திருக்கிற நிதிநிலை அறிக்கையே ஒரு மிகப் பெரிய ஆதாரம். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிக்கிறபொழுது, சுமார் 101 கோடி ரூபாய் துண்டு விழுந்தது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருந்தார்கள். ஆனால் 22 ஆண்டுகளுக்குப் பின்னால், இன்றைக்கு 84 கோடி ரூபாய் உபரி வருவாய் அரசுக்கு இருக்கிறது என்கிற நிலையிலே நிதிநிலை அறிக்கையைத் தமிழக அரசு சமர்ப்பித்திருக்கிறது என்று சொல்லுகிறபொழுது, இதைவிட ஒரு எடுத்துக்காட்டு வேறு எதுவும் தேவையில்லை என்கிற அளவுக்குத்தான் இந்த நிதிநிலை அறிக்கை இங்கே அமைந்திருக்கிறது.

பல்வேறு திட்டங்களை உறுப்பினர்கள் முன்மொழிந்து, ஆதரித்து, ஆதரவு தெரிவித்து வரவேற்றுப் பேசியிருந்தாலும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை இந்த ஆண்டு திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஈரோடு, வேலூர் மாவட்டங்களில் தலைவர் கலைஞர் அறிவித்திருக்கிறார்கள் நிதிநிலை அறிக்கையில் என்று சொன்னால், இது ஏதோ சாதாரணமான அரசின் திட்டம் என்று யாரும் எண்ணிக் கருதிவிட முடியாது. காரணம், இளைஞர்களுடைய வாழ்வில், எதிர்காலத்தில் குறிப்பாகத் தென் மாவட்டங்களில் பல்வேறு கலவரங்களுக்கு, பல்வேறு இடையூறுகளுக்கு எது காரணமாக இருக்கிறது என்பதை அறிந்து, இந்த நிதிநிலை அறிக்கையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய ஒரு வாய்ப்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல; எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களை மனதில் கொண்டு பல நாடுகளிலிருந்து தொழில்களைச் செய்வதற்கு இங்கே வந்து பல நாட்டினுடைய ஒப்பந்தங்கள் குவிந்தாலும், எதிர்காலத்தில் அவை தொய்வின்றி நடைபோடுவதற்குக் கட்டமைப்பு வசதியாக இருக்கக்கூடிய போக்குவரத்து வசதியை சென்னை மாநகரத்தில் அதிகரிக்க வேண்டுமென்பதற்காக, சென்னையில் எந்த அரசும் சிந்தித்திடாத ஒரு மிகப் பெரிய திட்டமான, சென்னையைச் சுற்றி போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்கு சுமார் 2,300 கோடி ரூபாய் அளவில் வட்டச் சாலை அமைப்பதற்குத் தலைவர் கலைஞர் நிதிநிலை அறிக்கையில் இன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில் இன்றைக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்ததைப்போல, ஒரு வைரக் கிரீடத்திலே மாணிக்கப்

பரல் மின்னுவதைப்போல, இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கிற ஒரு மிகப் பெரிய சிறப்பு அம்சம் என்னவென்று கேட்டால், இந்திய அரசியல் அரங்கிலும், உலக அரசியல் அரங்கிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், தமிழ்ச் சமுதாயத்தையும் உயர்த்திய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாதான் என்பதைப் பல்வேறு நண்பர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அண்ணாவின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு முழுவதும் கொண்டாட வேண்டும், அண்ணாவின் பெருமையை அவனிக்கு உணர்த்திட வேண்டும் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வாசித்தபொழுது, அனைவரும் ஆரவாரித்து வரவேற்றார்கள்.

*பிற்பகல் 1-10*

அண்ணாவின் பெயரால் இயக்கம் நடத்துகிறவர்கள் ஒரு நன்றி தெரிவிப்பதற்குக்குக்கூட மறந்திருக்கிற இந்த அவையிலே குறிப்பிடுகிறேன்; நூற்றாண்டு விழா கொண்டாவது மட்டுமல்ல; 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கின்ற நூலகக் கட்டடங்கள் அனைத்திற்கும், ஒவ்வொரு ஊரிலும் எப்படிக் கோயில் இருக்கிறதோ, பள்ளி இருக்கிறதோ, அதைப்போல ஒவ்வொருவருடைய வீட்டிலும், தமிழன் வீட்டில் புத்தகம் இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்ன பேரறிஞர் அண்ணாவினுடைய பெயர் அந்த நூலகங்களுக்கு அமைய வேண்டும் என்பதை நான் இந்த இடத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல; அண்ணாவின் நூற்றாண்டு விழா. இந்த நாட்டில் இருந்த தலைவர்கள், பாடுபட்ட தலைவர்கள் அனைவருக்கும் விழா எடுக்கக்கூடிய பெருமையையும், வாய்ப்பையும் தலைவர் ஒருவரே பெற்றிருக்கிறார் இந்த காலக் கட்டத்தில். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவில், இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டில் ஆற்றிய பணிகள் எவ்வளவு என்பது தெரியும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கியூபாவின் விடுதலைக்குப் போராடிய Fidel Castro, Cheguara ஆகியோரின் படங்கள், இன்றைக்கு எப்படி நாட்டில் எங்கெல்லாம் புரட்சி வெடிக்கிறதோ, அங்கெல்லாம் அவர்களுடைய உருவ பொம்மைகள், அதற்கான போராட்டச் சின்னங்களாக அமைந்திருக்கிறதோ, அதேபோல, இந்த நாட்டில்



சமூக நீதிக்கும், பகுத்தறிவுச் சிந்தனைக்கும் வித்திட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிறப்பும், பெருமையும், இந்திய நாட்டின் நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்திருக்கக்கூடிய, சிறப்பாக அவர்கள் நடத்திக்கொண்டிருக்கக்கூடிய அருங்காட்சியகத்தில் இருவருடைய வரலாறும் இடம்பெற வேண்டும் என்கின்ற தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பெருமை, தமிழர்களை உயர்வித்த இரண்டு தமிழர்களுடைய பெருமை, தந்தை பெரியாருடைய பெருமையும், அண்ணாவினுடைய பெருமையும், தமிழனின் பெருமை தலைநகரத்திலே ஒலித்திட வேண்டுமென்பதை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்து, நாட்டிற்கு முன்மாதிரியாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள், ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு வழங்கி, நாட்டினுடைய முன்னோடித் திட்டமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருப்பதுபோல, நாட்டிலிருக்கக்கூடிய நதிகளை இணைக்க வேண்டும் என்கிற திட்டம், பல நேரங்களில் உருவாக்கப்பட்டாலும், அதை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்துக்காட்டாக ஓர் அரசாங்கம், தலைவர் கலைஞரின் தலைமையிலே தமிழகத்திலே நடைபெறுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாநில நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு 494 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்திருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கே பலர் கருத்துத் தெரிவிக்கிறபொழுது, நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் இரண்டு சிறப்பு அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று சொல்கிறபோது, Coleridge என்கின்ற அறிஞன் கடலிலே பயணம் செய்கின்றபொழுது சொன்னார், "Water, water everywhere; but not a drop to drink" என்று சொன்னார். அதையும் தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றி, கடல் நீரையும் குடிநீராக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிற நிதிநிலை அறிக்கைதான், இன்றைக்குத் தமிழக மக்களின் கைகளிலே தவழ்ந்துகொண்டிருக்கிற நிதிநிலை அறிக்கை.

இந்த நிதிநிலை அறிக்கையை வார்த்தை ஜாலம் என்று சொல்கிறார்கள். சொல்கிறவர்களுக்குச் சொல்கிறேன்; வார்த்தை ஜாலமும் அல்ல, வானத்தில் மின்னுகின்ற வான வேடிக்கைகளின் தற்காலிக வர்ண ஜாலமும் அல்ல; நிரந்தரமான ஒளி வீசுகின்ற ஒளி விளக்காக அமைந்துள்ள நிதிநிலை அறிக்கைதான் தமிழகத்து மக்களின் கைகளிலே திகழ்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

என்னுடைய தொகுதியில் உள்ள சில பிரச்சினைகளைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். குத்தாலம் தொகுதி, குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய் வட்டம் அமைய வேண்டுமென்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது; தொடர்ந்து சற்றேறக்குறைய இருபத்தைந்தாண்டு காலமாக இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வருவாய் வட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மானந்தகுடியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்த மானந்தகுடி அரசு உயர்நிலைப் பள்ளியினுடைய மிகப் பெரிய சிறப்பு என்னவென்று கேட்டால், அண்ணாவின் கற்கண்டுப் பேச்சுக்குக் கட்டுண்ட மாணவர் சமுதாயம்தான் மொழிப் போரில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதிலே தன்னுடைய உயிரையும் மாய்த்துக்கொண்ட மாணவர் சாரங்கபாணி, சில காலம் பயின்ற அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கொள்கை முடிவாக எடுத்து அறிவித்திருக்கிற, நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரி அமைய இருப்பதற்கு அந்த மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துப் பணிகளும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன, சுனாமிக்குப் பின்னால்.



பிற்பகல் 1-15

அந்த நாகையில் அமையவிருக்கின்ற பொறியியல் கல்லூரியை, மயிலாடுதுறையை மாவட்ட மையமாகக் கொண்டிருக்கின்ற மயிலாடுதுறை பகுதியில் அமைத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாகவும், அனைத்துத் தரப்பு மக்களுடைய வரவேற்பையும் பெற்றிருக்கிற நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் இந்த நிதிநிலை அறிக்கையின்மீது இரண்டாவது முறையாக என் கருத்தை எடுத்துரைக்க அனுமதித்த எங்கள் குல தெய்வம், மங்கையர் குல மாணிக்கம், மங்காப் புகழ் கொண்ட தங்கத் தாரகை, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, இந்த நிதிநிலை அறிக்கையில் கழகத்தின் சார்பில் எனது கருத்துகளை எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, சென்ற இரண்டு ஆண்டுகளாக 84 பக்கங்களாக இருந்த நிதிநிலை அறிக்கை, இந்த ஆண்டு 90 பக்கங்களாகவும், கலரை மாற்றியும், அதிலே தொலைநோக்குப் பார்வையில்லாமல் மக்களுடைய நலனிலே அக்கறை இல்லாத நிதிநிலை அறிக்கையாக உள்ளது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் தொகுப்பையே இந்த ஆண்டும் தொகுத்து, வரியில்லாத நிதிநிலை அறிக்கை என்ற பெயரில் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத இந்த அரசு, ரொட்டிக்கு வரியைக் குறைத்து, மக்கள் மற்ற பொருட்களை வாங்க முடியாது, ஆகையால் ரொட்டியைச் சாப்பிட வேண்டுமென்ற எண்ணத்திலே ரொட்டியினுடைய வரியைக் குறைத்திருக்கின்ற அரசாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. நேற்றையதினம், பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ராஜ கண்ணப்பன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது எதிர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் இல்லை, இந்த ஆட்சியிலே விவசாயிகள் எங்கேயும் எலிக் கறி சாப்பிட்டதாகச் செய்தியே வரவில்லை.

**திரு. பி. தங்கமணி:** மக்காச் சோளம் சாப்பிட்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, நீங்கள் சப்ஜெக்ட்டுக்குள்ளே வாருங்கள். யார் மேலேயும் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி. தங்கமணி:** அவர் பேசுகின்றபோது, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சியினர் கக்கூசுக்குக்கூட போராட்டம் பண்ணுகிறார்கள் என்று, இந்த சபையினுடைய மரபைக்கூட மீறி ஒரு வார்த்தையை இங்கே பதிய வைத்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், அவர் பங்களா வாசி. ஏழை மக்களுடைய கஷ்டங்களை, அந்தக் கழிப்பிடங்களினுடைய இருப்பைத் தெரிந்துகொள்ளாத காரணத்தினால் ஒரு குறையை இங்கே சொல்லியிருக்கின்றார். அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே சொல்ல (குறுக்கீடு) நான் பேசியதற்குப் பிறகு அவர் பதில் சொல்லட்டும். நேற்றையதினம் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தேவையில்லாமல் அவருடைய சப்ஜெக்ட்டுக்குப் போகிறீர்கள். (குறுக்கீடுகள்) அதற்கு அவர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கக்கூஸ் போராட்டம் என்றால், சாக்கடை போகவில்லையென்று அ.தி.மு.க.வினர் போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, சாக்கடைக்கெல்லாம் போராட்டம் நடத்துகிறார்கள். கக்கூசுக்கு இன்றைக்குக்கூடப் போராட்டம் நடத்துகிறீர்கள். உங்கள் அம்மா என்ன குடிசையிலா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? நான் மாத்திரம் பங்களாவில் இருக்கிறேனா? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். நான்தான் சொன்னேனே தங்கமணி, நீங்கள் சப்ஜெக்ட்டுக்குள்ளே பேசுங்கள் என்று. (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் அமைதியாக இருங்கள்.



**திரு. பி. தங்கமணி:** ஒவ்வொரு போராட்டமும் நாங்கள் அறிவித்ததற்குப் பின்னால்தான், இந்த அரசு விழித்துக்கொண்டு அதற்கான நடவடிக்கை எடுத்து வருவதுதான் இன்றையதினம் நடந்துகொண்டிருக்கின்ற நிவாரணப் பணிகள் என்று சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன். கடந்த காலத்திலே மழை பெய்து, வெள்ளம் சூழ்ந்தபோது நாங்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கின்றோம். அன்றையதினம் நினைக்காத இந்த அரசு, பாராளுமன்றத் தேர்தல் விரைவில் வரவிருக்கின்றது என்ற காரணத்தினாலே, உடனடியாக நாங்கள் நிவாரணத்தை வழங்கவிருக்கின்றோம் என்று நேற்றையதினம் அறிவிக்கின்றார்கள். கடந்த ஆண்டிலே பார்ப்பீர்களேயானால், காவிரி ஆற்றிலே வெள்ளம் வந்து, எங்களுடைய தொகுதியில் எதிர்க்கட்சித் தொகுதி என்ற காரணத்தினாலோ, என்னவோ தெரியவில்லை, பாதிக்கப்பட்ட மக்கள், 900 குடும்பத்தினரை மழைக் காலத்திலே எட்டு நாட்களாகப் பள்ளியிலே தங்க வைத்து, அவர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்காமல், எட்டு நாட்கள் கழித்து, திருப்பி அனுப்பிய கதைதான் இந்த அரசினுடைய கதை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த காலத்திலே வெள்ளம் ஏற்பட்டபோது பார்ப்பீர்களேயானால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் மாதத்திலே பெய்த மழைக்குத் தொடர்ந்து நிவாரண நிதிகள் வழங்கிக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே யாருக்காவது கிடைக்காமல் இருந்தால், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், இந்த அரசு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பதல்ல, எல்லோருக்கும் கொடுக்கும்.

பிற்பகல் 1-20

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கின்றேன். அதற்கு ஒரு உண்ணாவிரதப் போராட்டம்கூட நடத்தி, 900 குடும்பங்களுக்கு ஒரு ரூபாய்கூட நிவாரணம் வழங்காத அரசு இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த ஆகஸ்ட் மாதம் காவிரி ஆற்றிலே வெள்ளம் வந்தபோது, 900 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு,

அதற்கு எங்கள் கழகத்தின் சார்பில் உண்ணாவிரதம்கூட இருந்தோம். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியவில்லை என்றால், இப்போதாவது தெரிந்துகொள்ளட்டும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

அது மட்டுமல்லாமல், இன்றையதினம் இந்த விவசாயக் கடனைப் பொறுத்தவரையில் எங்களைப் பார்த்து, மத்திய அரசு ரூபாய் 60 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்திருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றீர்கள். மத்திய அரசுக்கு ஆதரவு அளித்துக்கொண்டிருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தேசியச் செயலாளர், இந்த ரூபாய் 60 ஆயிரம் கோடி விவசாயக் கடன் தள்ளுபடி என்பது ஒரு மாயை, ** வங்கிக்கு கடனைச் செலுத்த வேண்டாம் என்று சொல்வது, ஒரு கிரிமினல் குற்றம் என்று சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், இந்தத் திட்டம் எந்த அளவிற்கு நிறைவேறும் என்பதை இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இதை நாங்கள் சொன்னால், ஏதோ எதிர்க்கட்சிகள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, ரூபாய் 60 ஆயிரம் கோடி என்பதையெல்லாம் நீங்கள் டெல்லியில் போய்ப் பேசுங்கள். இங்கேயுள்ளதைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே மாண்புமிகு நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் ஏற்கெனவே பட்ஜெட்பற்றி விளக்குகிறபோது, ரூபாய் 60 ஆயிரம் கோடிக்கு வங்கியில், தேசிய வங்கியிலே விவசாயிகள் யாரெல்லாம் கடன் வாங்கியிருக்கிறார்களோ, அவர்களுடைய பட்டியலைக் கணக்கெடுத்துக்கொண்டு, நிச்சயமாக 60 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்வோம் என்ற ஓர் அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்கள். யாரோ ஒரு கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் ** என்று சொன்னார் என்றெல்லாம் சொல்வது என்பது அவருடைய கருத்து. மத்திய அமைச்சர் சிதம்பரம் அவர்கள் அதற்குப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பொறுப்பேற்றுக்கொள்கிறார். 60 ஆயிரம் கோடி ரூபாயை சோனியா காந்தி அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய அரசு, மன்மோகன்சிங் தலைமையிலே இருக்கக்கூடிய அரசு தள்ளுபடி செய்வதற்காக அறிவிப்புச் செய்திருக்கிறது. நிச்சயமாகத் தள்ளுபடி செய்யும். பொறுத்திருந்து பார்க்கட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், உட்காருங்கள். வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நாங்கள் சொல்லவில்லை இங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மேல்சபை பாராளுமன்ற உறுப்பினர் இதை சொல்லியிருக்கின்றார் என்பதைத்தான் நாங்கள் சொல்கின்றோம். சட்டம்-ஒழுங்கைப் பற்றி இந்த அவையிலே நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். . . (குறுக்கீடுகள்) தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கைப் பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. இராசசேகரன்? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள். அவருடைய கட்சியின் பெயரை இழுக்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தேசியச் செயலாளர் இதனை ** என்று சொல்வதைப்போலச் சொன்னார். அப்படி அவர் சொல்லவில்லை. நான் இந்த மன்றத்திலே அதை மறுக்கின்றேன். இது போதுமானதல்ல என்பதைத்தான் அவர் சொன்னாரே தவிர, இது ** என்று சொல்லவில்லை. தவறான தகவலைத் தந்த அவரை நான் கண்டிக்கிறேன்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேண்டுமானாலும், என்னிடம் செய்திதாள் இருக்கிறது. உங்களிடத்திலே காட்டுகின்றேன். தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, தமிழ்நாட்டு பட்ஜெட்டிற்குள்ளே வாருங்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** தலைவர் அவர்களே. . .

**திரு. விடியல் எஸ். சேகர்:** தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**திரு. பி. தங்கமணி:** தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு முழுமையாக சீர்குலைந்துவிட்டது என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இவர்களுடைய ஆதரவோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பதை அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு முழுமையாக சீர்குலைந்துவிட்டது என்பதை, இந்த அரசு ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்று சொன்னால், இதற்கு இங்கே ஆதரவு அளித்துக்கொண்டிருக்கின்ற உங்கள் தோழமைக் கட்சிகளுடைய ஒவ்வொரு தலைவரும் சொன்ன கருத்துகளை மட்டும் இங்கே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பா.ம.க.வினுடைய நிறுவனர், இங்கே இருக்கின்ற காவல் துறைக்கு ஈரல் மட்டும் கெடவில்லை, உடல் அழுகிவிட்டது என்று கூறியுள்ளார். அதற்குமேல் பா.ம.க.-வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கத்தினரை விடுதலை செய்கின்றார்கள். சாதாரண மக்கள்மீது வழக்குகளைப் போடுகின்றார்கள் என்று குற்றம்சாட்டியிருக்கிறார். அதற்கு ஒரு படி மேல், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. தா. பாண்டியன் அவர்கள், இன்றையதினம் தமிழகத்திலே நடக்கின்ற விபத்தைக் காட்டிலும், கூலிப் படையினரால் கொலை செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அதற்கும் ஒரு படி மேலே சென்று, தமிழகத்தில் தொடர்ந்து கூலிப் படையினுடைய கொலைகளைப் பார்க்கின்றபோது, பொது மக்களுக்கு மிகவும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் நிகழ்ந்துள்ள இந்தக் கொலைகளினுடைய எண்ணிக்கை, விபத்து எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சமூக விரோதிகள் காவல் துறையிடம் சொல்லிவிட்டுத்தான் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றனர். இன்னும் சில நாட்களில் காவல் நிலையத்திலேயே கள்ளச் சாராயம்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



காய்ச்சி, காக்கிச் சட்டைகள் என்ற போர்வையில் விற்கப் போகிறார்கள் என்று இவர்களுடைய தோழமைக் கட்சியைச் சார்ந்த மாநிலச் செயலாளர் திரு. தா. பாண்டியன் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். அதற்கும் ஒரு படி மேல் இதிலே நான் சொன்னால், எதிர்க்கட்சிகள் சொல்கிறார்கள் என்று கூக்குரல் இடுகிறார்களேயொழிய, ** (குறுக்கீடு) நாங்கள் இதைச் சொல்லவில்லை.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களை இவர்களே ஆள் வைத்துத் தாக்கினார்கள் என்பதெல்லாம் கடந்த கால வரலாறு. அதை மறந்துவிட்டுப் பேச வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, ஆதாரம் இருந்தது என்றால் கொடுத்து விட்டுப் பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** தடையில்லா. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ** என்றெல்லாம் சொல்கிறார். என்ன ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசுகிறார்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் பேசாதீர்கள்.

**திரு. பி. தங்கமணி:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** No, no. ஆதாரம் இருந்தால், இதுபோன்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் தலைவரிடம் கொடுத்துவிட்டு குற்றச்சாட்டைச் சொல்லலாம். இல்லாவிட்டால், பத்திரிகையில் வந்தது, பேசினார்கள், சொன்னார்கள் என்றால், நாங்களும் அதைச் சொல்ல முடியும். அது ஒரு தவறான உதாரணமாகி விடும். ஆகவே,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆதாரம் இல்லாமல் சொன்னால், அதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடுகள்) ஆதாரம் இருந்தால் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். நீங்கள் ** குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினர் பேசியதற்கு அவரிடத்திலே விளக்கம் கேட்க, பேரவையினுடைய கவனத்தை நான் ஈர்க்கிறேன். அங்கிருந்து கொண்டு நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள். ஆதாரம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா? (குறுக்கீடு) ஆதாரம் இல்லை என்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவர் சொன்ன வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** இதற்குண்டான ஆதாரத்தை நான் பேரவைத் தலைவரிடத்திலே அளிக்க இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்றைக்கு?

**திரு. பி. தங்கமணி:** இன்று evening.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாராக இருந்தாலும் பேசுவதற்கு முன்னாலே கொடுக்க வேண்டுமே தவிர, பேசிவிட்டுக் கொடுக்கிறேன் என்பது மரபு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரபு இல்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர் கொடுக்கின்ற வரையில் அவர் பேசியதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கூறிய அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே பார்ப்பீர்களேயானால், தடை இல்லாத மின்சாரம் இருந்த தமிழகத்தை இன்றையதினம் இருண்ட தமிழகமாக ஆக்கிய பெருமை இந்த அரசைச் சாரும். ஏனென்று சொன்னால், இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர். . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எந்த ஊரிலே இருட்டாக இருக்கிறது என்பதை தயவுசெய்து சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் உறுதியாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் உறுதியாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நான் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். எப்போது, எந்த நேரத்திலிருந்து, எந்த ஊரிலே மின்சாரம் இல்லை? கடந்த 10 நாட்களாகத் தமிழ்நாட்டிலே (குறுக்கீடுகள்) அப்படிச் சொன்னால் எல்லோரும் சொல்லலாம். உங்களுடைய அம்மா ஆட்சியிலேகூட தமிழ்நாடு இருண்டுதான் இருந்தது என்று சொல்லலாம். சொல்வது வேறு. ஆனால், நான் சொல்கிறேன்; கடந்த 15 நாட்களாகத் தமிழ்நாட்டிலே ஒரேயொரு கிராமத்திலேகூட மின்சாரம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆதாரத்தோடு, மின்சார வாரியத்தினுடைய மானியக் கோரிக்கையின்மீது பேச நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் நேரத்தை நீங்கள் வீணடித்துக்கொண்டிருக்கிறீர்கள், உட்காருங்கள். திரு. தங்கமணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே பார்ப்பீர்களேயானால், மாதத்தில் ஒரு முறைதான் அமாவாசை வரும், ஆனால் இப்போது வாரத்தில் ஒரு முறை அமாவாசை வருகிற நிலைமையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது

என்ற செய்தியைத்தான் நான் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், எங்கள் பகுதியிலே பார்த்தீர்களானால், விசைத்தறிக் கூடங்களுக்கெல்லாம் மாதம் ஒரு முறை அமாவாசையன்று விடுமுறை விடுவார்கள். ஆனால். . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-3-2008) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

9. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

10. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

11. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

12. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)



13. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

8. 2008-2009 ஆம் ஆண்டில் "உடனடிச் செலவுக்கான" மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

9. 2008-2009 ஆம் ஆண்டு "உடனடிச் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

10. 2007-2008 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

11. 2007-2008 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

12. 2007-2008 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

13. 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள "புதிய திட்டங்கள்" குறித்த சிறு வெளியீடு. (தமிழ், ஆங்கிலம்)

14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (1 முதல் 100 வரை)

228/02